634

விஷு - ஆவணி

# சக்தி

634



SPECIMEN COPY

மலர் - 5 இதழ் - 2

அணா நான்கு

Special House
For all kinds of Sweets

MENON




# NEHRU CAFE

PROPRIETOR: K. SESHAGIRI RAO
43, NYNEAPPA NAICKEN STREET
— JAWAHARNAGAR
P. T., MADRAS
TEL. No. 4298

# நீங்கள் கேட்க விரும்பும் சங்கீதம்!



| ஸ்ரீமதி | ஸ்ரீமதி |
|---|---|
| **எம். எஸ். ஸுப்புலக்ஷ்மி** | **ஷாந்தா ஆப்டே** |
| பாடிய | பாடிய |
| "சகுந்தலை" கீதங்கள் HT. 116 & N. 18095—98 | "ஸாவித்திரி" கீதங்கள் N. 18129—31 |
| நீ இரங்காயெனில் / வண்டினமுரலும் — N. 18100 | பஜாவூம் நிஸதின் / ராத்பர் ஜீகோ — N. 16441 |
| ராம மிலனகே / மை நிர்குனியா — N. 16464 | ஸப் கஹாங் குச் / கோயிஉம்மீதபர் — N. 16463 |

**எல்லா "எச். எம். வி" கிராமபோன் வியாபாரிகளிடமும் கிடைக்கும்**

HIS MASTERS VOICE

## "ஹிஸ் மாஸ்டர்ஸ் வாய்ஸ்"

# யுத்தகால முதலீடுகள் !

★

யுத்தமும் அதன் விளைவான பொருளாதார நெருக்கடிகளும் அசாதாரண சம்பவங்கள் அல்ல. ஆனால், அவை மனித வர்க்க சரித்திரத்தில் தோன்றி மறையும் அம்சங்கள். அவை லைப் இன்ஷ்யூரன்ஸ் பாலிஸியைப் பாதிக்க முடியாது. லைப் இன்ஷ்யூரன்ஸ் பாலிஸியின் மதிப்பு ஸ்திரமானது; ரொக்கமாக மாற்றக் கூடியது; கடன் வாங்கவும் பொருத்தமானது; லாபம், வருமான வரி விலக்கு உண்டு; இதனால் யுத்த காலத்தில் மற்றெதிலும் முதல் போடுவதைவிட லைப் இன்ஷ்யூரன்ஸ் மிகச் சிறந்தது.

## மதினல் அழுத்தமாகப் பதியும் புள்ளி விவரங்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| அமுலிலுள்ள பாலிஸிகள் | ரூ. 17 | கோடிக்குமேல் | | |
| லைப் பண்ட் | ரூ. 3 | கோடி | 10 | லட்சத்துக்குமேல் |
| மொத்த ஆஸ்திகள் | ரூ. 3 | ,, | 56 | ,, |
| செலுத்தப்பட்ட பாலிஸிகளின் மதிப்பு | ரூ. 1 | ,, | 97 | ,, |

**போனஸ்**
வருஷத்தில் 1000-க்கு

| | |
|---|---|
| எண்டௌமெண்ட் அஷ்யூரன்ஸ் | ரூ. 18/- |
| முழு ஆயுள் அஷ்யூரன்ஸ் | ரூ. 15/- |

சிறுகச்சிறுகத் திரண்டுள்ள ஏராளமான லைப் பண்டுகள், சிலாக்கியமான முறையில் உபயோகிக்கப்படும். ஆஸ்திகள் இந்தியா எங்கும் கிழக்கிலும் விஸ்தரிப்புள்ள, ஸ்தாபனம் உடைய **ஹிந்துஸ்தான்,** கடந்த காலத்திலும் இப்பொழுதும் எல்லா நெருக்கடிகளையும் வெற்றிகரமாகச் சமாளிக்கக்கூடிய சக்தி வாய்ந்ததாகும். அதன் பாலிஸிகள் பந்தோபஸ்தானவையாயும், சிலாக்கியமானவையாயும், லாபகரமானவையாயும்; ஒவ்வொரு தேவையையும் பூர்த்தி செய்யக்கூடியவாறு பலதரப்பட்டதாகும்.

நம்பிக்கையான சேவைக்கு பிரக்யாதி வாய்ந்தது

# ஹிந்துஸ்தான் கோவாப்பரேடிவ்
## இன்ஷ்யூரன்ஸ் சொஸைட்டி லிமிடெட்

ஹெட் ஆபீஸ் :
"ஹிந்துஸ்தான் பில்டிங்ஸ்"
6-ஏ, சுரேந்திரநாத் பானர்ஜி ரோடு, கல்கத்தா

சென்னை பிராஞ்சு :
"ஹிந்துஸ்தான் பில்டிங்ஸ்"
107, அரண்மனைக்காரத் தெரு, சென்னை

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
16 MAR 1942
MADRAS

ராயல் டாக்கீஸ்
படமென்றால் அதன்
தினுசே வேறுதான்

★

சிந்தாமணி
சக்குபாய்
சகுந்தலை
மூன்றும் இதற்குச் சாட்சி

இன்று அதைவிடப் பெரிய

# சாவித்திரி

வெளிவருகிறது

**சாந்தா ஆப்டே, M. S. சுப்புலக்ஷிமி, Y. V. ராவ்**

முதலியோர் நடித்தது

☆

**செப்டம்பர்மீ 4-ந் தேதியன்று மகத்தான ஆரம்பம்**

| | | |
|---|---|---|
| சிந்தாமணி டாக்கீஸ் மதுரை | எடிசன் தியேட்டர் கோயம்புத்தூர் | வெல்லிங்டன் டாக்கீஸ் திருச்சி |

RAYAL TALKIE DISTRIBUTORS MADURA

டைரக்ஷன் : Y. V. ராவ்

ஸ்டூடியோ :

**நியூ தியேட்டர்ஸ், கல்கத்தா**



# பொருள் அடக்கம்


| | | |
|---|---|---|
| காலச் சுழல் | ... | 49 |
| குழந்தையின் ஆசை<br>'பூ' | ... | 51 |
| உல்லாசப் பேச்சு<br>'ரதி' | ... | 52 |
| கவி ரவீந்திரர் கருத்துக்கள் | ... | 53 |
| கறைபட்ட இலை<br>எல். எஸ். ராமாமிருதம் | ... | 55 |
| வாழ்க்கைச் சிடுக்குகள்<br>கே. நடேசன் | ... | 57 |
| ஜாலவித்தைக்காரர்கள் நம்பாத அதிசயம் | ... | 59 |
| மறைந்த நகைகள்<br>கே. சீனிவாசன் | ... | 60 |
| தாகூரை உலகறியச் செய்த ஏட்ஸ்<br>வி. ஆர். எம். செட்டியார் | ... | 61 |
| ஜமீன்தாரிணி<br>ஆர். ஷண்முகசுந்தரம் | ... | 63 |
| மண் கூஜா<br>எஸ். விசாலாட்சி | ... | 66 |
| காந்தி வாக்கு | ... | 68 |
| சுதந்திர வீரர் ஜவஹர்<br>'ஸரஸி' | ... | 69 |
| தத்தளிக்கும் தாய்லந்து | ... | 71 |
| தாய்லந்துப் படங்கள் | ... | 72 |
| பழமையும் புதுமையும்<br>லியோ டால்ஸ்டாய் | ... | 75 |
| ஒரு கனவு<br>வி. வாஸுதேவன் | ... | 76 |
| கோடையிலே குளிர்ச்சி<br>வ. சு. மணி | ... | 77 |
| விசாலி<br>'ஸரோஜா' | ... | 78 |
| ஹரிஜன இயக்க ஆரம்பம்<br>டி. எஸ். அவிநாசிலிங்கம் செட்டியார் | ... | 81 |
| சாதிப் பலாப்பழம்<br>மு. அருணாசலம் | ... | 83 |
| கருங்கூந்தல்<br>'மு' | ... | 85 |
| தன்னையிழந்த வீரன்<br>சுவாமி சுத்தானந்த பாரதியார் | ... | 87 |
| உடம்பும் மருந்தும் | ... | 89 |
| காலத்தை வென்ற கலைஞன் | ... | 90 |
| புத்தக உலகம் | ... | 91 |
| பறித்த பூக்கள் | ... | 93 |
| கதம்பம் | ... | 95 |
| பாலர் பாட்டு: கடற்காற்று<br>'உமா' | ... | 95 |
| ,, கதை: 'அசுக்கு'த் தும்மல்<br>'நீலா' | ... | 96 |



JL
ஜ211,N36,S
N41·52
திருநெல்வேலி ஆவணக் காப்பக நூலகம் சென்னை-600 008.
134189


### பர்மாவில் நமது கிளைக் காரியாலயம்

பர்மாவில் உள்ள 'சக்தி' நேயர்களின் சௌகரியத்தை உத்தேசித்து, சக்தியின் கிளைக் காரியாலயத்தை நத்தலினில் ஏற்படுத்தியிருக்கிறோம். எங்களுக்குப் புத்தக ஆர்டர்கள் கொடுப்போரும் சந்தாச் செலுத்துவோரும் கிளைக் காரியாலயத்திலேயே செய்துகொள்ளலாம்.

சக்தி கிளைக் காரியாலயம்
NATTALIN
THARRAWADDY DT.

### சந்தா விகிதம்

உள் நாடு

| | | |
|---|---|---|
| வருடச் சந்தா | ... | ரூ. 3 0 0 |
| 6 மாதம் | ... | ,, 2 0 0 |
| தனிப்பிரதி | ... | ,, 0 4 0 |

☆

பர்மா

| | | |
|---|---|---|
| வருடச் சந்தா | ... | ரூ. 4 0 0 |
| 6 மாதம் | ... | ,, 2 4 0 |

☆

மலேயா

| | | |
|---|---|---|
| வருடச் சந்தா | ... | ரூ. 5 0 0 |
| 6 மாதம் | ... | ,, 2 12 0 |

சிலோன் 25 சதம்

மாதிரிப் பிரதி வேண்டுவோர் தபாற் செலவு சேர்த்து அனுப்புதல் வேண்டும்.

☆

### அறிக்கை

சந்தாப் பாக்கி உள்ளவர்கள் தங்கள் சந்தாக்களை அனுப்புவதுடன், பத்திரிகை விஷயமாகத் தகவல் எழுதும்போது சந்தா நெம்பர்களைக் குறித்தனுப்ப வேண்டுமாய்க் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

☆

### நமது பிரதிநிதி

நமது பிரதிநிதி திரு. ரா. பாலசுப்ரமண்யம், 'சக்தி'யின் அபிவிருத்தியை நாடி, தமிழ் நாடெங்கும் சுற்றுப் பிரயாணஞ் செய்து வருவதால், ஆங்காங்கு உள்ள நண்பர்கள், அவருக்கு ஒத்தாசை புரிந்து இயன்ற ஆதரவு தருமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மானேஜர்,
சக்தி காரியாலயம், சென்னை

# சக்தி

அன்பும் அறிவும் அறமும் திருவும் அருளும் ஆற்றலும்
இன்ப வாழ்வும் விளங்கச் சக்தி எழுந்து பொலிகவே!

மலர் : ரு இதழ் உ — விஷு — ஆவணி


OFFICE OF THE ... 13 MAR 1942 MADRAS

## காலச்சூழல்

### அமெரி புதிர்ப் போடுகிறார்

பார்லிமெண்டிலே அமெரி பேச்சு ஒரு நாடகம். ஹாலிவுட் நடிகர்கள் கூட அப்படி நடித்திருக்க முடியாது. வெகு தளுக்கு, மகா விஷமம், கொஞ்ச மிரட்டல், அதிலே கொஞ்சம் பசப்பு— இவைதான் அமெரி பிரசங்கம். பார்லிமெண்டரி ஜனநாயக ஆட்சி இந்தியாவுக்குப் பயனில்லையாம்; இந்தியாவில் ஜனநாயகத்தைக் காப்பாற்ற வேறு வழிதான் கண்டு பிடிக்க வேண்டுமாம். இது அமெரியின் ஒரு புதிர். நீரிலே நீந்த நம்மால் முடியாது; நீரில்லாமல் நீந்த ஒரு வழி கண்டு பிடிக்கவேண்டும் என்பது போல் இல்லையா இது? இந்தியாவுக்கு அதிகாரத்தை மாற்றி விடுவதில் பிரிட்டனுக்கு ஆட்சேபமே இல்லையாம். இந்தியா தான் ஒற்றுமையாய் வந்து அதை வாங்கிக்கொள்ள மாட்டேனென்கிறதாம். இது பழைய பல்லவி; ஓயாத பல்லவி. இந்திய அரசியல் பிரச்னைகளுக்குப் பரிகாரங் கண்டு பிடிக்க, ஸர் ஸாப்ரூவை விடத் தகுதி வாய்ந்தவர் வேறொருவர் கிடையாதென்று புகழ்கிறார் அமெரி. ஆனால், ஸப்ரூ மகாநாட்டு யோசனையை ஏற்றுக் கொள்ள அவர் தயாரில்லை. இந்தியா சம்பந்தமாய் இத்தனை வருஷங்களாகக் காங்கிரஸ் சொல்லிவந்த லட்சியங்களெல்லாம் பிரிட்டிஷாரின் இந்திய லட்சியங்களுமாகி விட்டன என்கிறார் அமெரி. ஆனால், காங்கிரஸ்காரர்களைச் சிறையில் அடைப்பதைத் தவிர, வேறு மார்க்கம் அவருக்குத் தெரியவில்லை. இதெல்லாம் ராஜதந்திரமா? ராஜீயச் சூழ்ச்சியா?

* *

### 'கருங்காலி'களுக்கு அபயம்

முஸ்லீம் லீக்கின் போக்கு நமக்குத் துளியும் பிடிக்கவில்லை. ஆனால், அதற்குள்ளே தோன்றியிருக்கும் ஒரு 'பிரணய கலகம்' கண்ட்ராவியாயிருக்கிறது. ஸர் சிக்கந்தரையும் கனம் ஹக்கையும் நோக்கி, "நீங்கள் யாரைக் கேட்டுக்கொண்டு, வைஸிராயின் தற்காப்பு ஆலோசனைக் கவுன்ஸிலில் சேர்ந்தீர்கள்? உங்களை ஒரு கை பார்த்து விடுகிறேன்" என்று கர்ஜித்தார் ஜின்னா சாகேப். "இல்லையே. அவர்கள் இருவரும் தங்கள் கட்சியின் சார்பாக அதில் சேரவில்லை. மாகாணப் பிரதமர்கள் என்ற உத்தியோக முறையிலேயே அவர்களை அழைத்தோம். அவர்களும் வந்து சேர்ந்தார்கள்" என்று, அவர்களுக்கு அபயமளிக்கிறார் அமெரி. இப்போது லீக் கண்டிப்பாய் இருப்பதாயிருந்தால், லீக்கர்களின் உண்மையான கட்டுப்பாட்டைச் சோதிப்பதாயிருந்தால், மாகாண மந்திரி சபைகளையே தங்கள் கட்சியார் உதறிவிட்டு வெளியே வரவேண்டும் என்று தீர்மானம் செய்யவேண்டும். அப்படிச் செய்யுமா முஸ்லீம் லீக்? அல்லது பல்டியடிக்கப் போகிறதா? இதிலே லீக் பல்டியடித்தால், காயிதே அஜம் ஓய்ந்து உட்கார்ந்து விடுவாரானால், லீக் தலைவர்களின் உண்மை வெளிப்பட்டுவிடும். எல்லாம் அதிகாரச் சதுரங்கமே தவிர, முஸ்லீம்களின் நிஜமான நலன்களுக்கு ஓர் உறுதியோடு பாடுபடும் கோஷ்டியல்ல அவர்கள் என்று நிச்சயமாகிவிடும்.

* *

### கவி ரவீந்திரர் மறைவு

வங்கக் கவி திலகம், இந்தியாவின் மாணிக்கம், உலக சகோதரத்துவ வழிகாட்டி தாகூரை இழந்தது, நமக்கும் உலகத்துக்கும் ஈடு செய்யமுடியாத துர்ப்பாக்கியமாகும். ரவீந்திரர் சிறந்த தேசபக்தர்; ஆனால், மனித குல முழுவதும் சகோதரர்களாய் வாழவேண்டுமென்ற லட்சியமுடையவர். இணையற்ற கவிஞர். அவரைப்போன்ற கவிஞர்கள் பன்னெடுங் காலத்துக் கொருமுறைதான் ஒரு நாட்டிலே தோன்றுவர். அவரது கதைகள், வசந்தத்தின் செந்தளிர்கள் மந்தமாருதத்திலே அலைந்தாடுவது போல், நம் மனத்திலே நர்த்தனம் செய்யக்கூடியவை. அவரது கவிதை, பரவச உணர்ச்சி

யிலே குழைத்திழைத்த கீதத் தேன் மாரி. அவர் ஒரு கலைக் களஞ்சியம். ஆடலும் பாடலும் அவருக்குத் தெரியும். புதுமைச் சித்திரங்களும் வரைவார். எண்ணற்ற கட்டுரை கதைகள், எண்ணற்ற கவிகளின் ஆசிரியர். அவர் ஸ்தாபித்த சாந்தி நிகேதன குருகுலம் இந்தியாவின் பெரும் பொக்கிஷம். அதைப் போற்றி வளர்ப்பது நமது கடமை. ஏனெனில், வருங்கால உலக ஐக்கிய சமுதாயத்தைப்பற்றிக் கவிஞர் கன்ட கனவின் பிரதிபிம்பம் அது. ரவீந்திரர் தமது கவிகள், கதைகளின் மூலம் என்றென்றும் வாழ்வார்; அவரது குருகுலம், திசைதப்பித் திரியும் உலகின் கலங்கரை விளக்காக நிலவும்.

### நடுக்கடல் நாடகம்

பிரிட்டிஷ் பிரதமர் சர்ச்சிலும் ஐக்கிய அமெரிக்க ஜனாதிபதி ரூஸ்வெல்டும் நடுக்கடலிலே சந்தித்தது இந்த யுத்தத்தின் பெரிய 'டிராமா'வாம். அந்த டிராமாவின் பலன் என்ன? சமாதான லட்சியங்களைப்பற்றி இரு தலைவர்களும் ஏகோபித்துச் சம்மதித்த கூட்டு அறிக்கை ஒன்று வெளிவந்ததுதான்:

(i) அமெரிக்காவும் இங்கிலாந்தும் பிற நாடுகளை ஆக்கிரமிக்கவோ, உரிமைகளைப் பறிக்கவோ செய்யமாட்டா; (2) பிரதேச ஜனங்களின் விருப்பத்துக்கு விரோதமான மாறுதல்களை எந்தப் பிரதேசத்திலும் அவைகள் ஏற்படுத்தமாட்டா; (3) ஜனங்கள் எல்லோருக்கும் சுய நிர்ணய ஆட்சியுரிமை வழங்கப்படும்; பலாத்காரத்தின் மூலம் சுதந்திரத்தை இழந்த நாடுகளுக்குத் திரும்பவும் சுதந்திரம் அளிக்கப்படும். (4) எல்லாத் தேசங்களும் சமமான நிலையில், பொருளாதாரச் செழிப்புக்கு வேண்டிய உலக வியாபாரம், மூலப் பொருள்கள் முதலியவை பெற்று அனுபவிக்கும்; (5) எல்லா நாடுகளிலும் தொழிலாளரின் வாழ்க்கையை உயர்த்தி, பொருளாதார, சமூக முன்னேற்றத்துக்கான வழிகள் தேடப்படும்; (6) நாஜிக் கொடுமை அழிந்த பிறகு ஏற்படும் சமாதானத்தில், ஒவ்வொரு தேசமும் தனக்குள் பத்திரமாக வாழவும், எல்லாமக்களும் அச்சமில்லாமல் சுயேச்சையாக வாழ்க்கை நடத்தவும், அந்தச் சமாதானம் இடமளிக்கும்; (7) சமுத்திரங்களிலும் கடல்களிலும் எல்லோருக்கும் போக்கு வரத்துச் செய்ய உரிமை அளிக்கப்படும். (8) உலகிலுள்ள எல்லாத் தேசத்தாரும் உலகாயத, பாரமார்த்திகக் காரணங்களை முன்னிட்டுப் பலாத்கார உபயோகத்தைக் கைவிட வேண்டும்.

நோக்கங்கள் மிக அருமையாய்த்தான் இருக்கின்றன. ஆனால், எல்லாம் நிறைவேற்றப்படும் என்பதற்கு என்ன உத்திரவாதம்? நாஜி வெறியர்களின் பலாத்காரத்துக்கு ஆட்பட்ட போலந்து, ஜெக், கிரீஸ் முதலிய பல நாடுகளை, யுத்தம் முடிந்துதான் விடுவிக்க முடியும். ஆனால், இந்தியாவை இதோ விடுவிக்க முடியும். அது பிரிட்டனின் கையில்தான் இருக்கிறது. பிரிட்டனின் அந்தரங்க சுத்தியை நிரூபிக்க இதைவிட மகத்தான சந்தர்ப்பம் வேறே கிடைக்குமா? செய்யலாமே?

* *

### தமிழ்ப்பாட்டு மகாநாடு

வங்காளிகள் வங்கமொழியில் பாடுவார்கள். மலையாளிகள் மலையாளத்தில் பாடுவார்கள். தமிழனுக்கு மட்டும் ஒரு வியாதி பிடித்திருக்கிறது. முற்றிலும் தெலுங்கிலே பாடும் வியாதி. இதைத் தீர்த்துவைக்க, 'செட்டி நாடு' ராஜாவின் முயற்சியால் சிதம்பரத்தில் ஒரு மகாநாடு நடைபெற்றது. அதன் நோக்கங்கள் நிறைவேறுவதில் பல கஷ்டங்கள் உண்டு. என்றாலும், அதுவெற்றி பெறுவது நிச்சயம்; வெற்றி பெற வேண்டும். ஏனெனில், இசைக்கலையின் வளர்ச்சிக்கு மட்டிலுமல்ல, தமிழனின் தன் மதிப்புக்குமே அது அவசியமாகும்.

* *

### திரும்பிவந்தவர் ஞானோதயம்

மகாத்மா காந்தியின் ஆக்ஞையைச் சிரமேல் தாங்கிச் சிறை சென்று திரும்பிய ஒரு நண்பருக்கு, இப்போது திடீரென்று ஒரு ஞானோதயம் உண்டாகியிருக்கிறது. காந்தியின் சத்தியாக்கிரகம் பயனில்லை என, விறுவிறு என்று எழுதிவிட்டார் ஒரு கட்டுரை. ஆனால், அதை நேரே சொல்லக் கூடாதே; அதற்காக ஆயிரத்தெட்டுச் சப்பைக்கட்டு! இந்த ஞானோதயம் அவருக்கு ஏற்பட்ட காரணம் என்ன? சிறை அனுபவமா? இல்லை. அவர் ஒரு 'கறுப்புக் குல்லாய்'. "ஒரு முறை சிறை சென்றவர் திரும்பத் திரும்பச் சென்றுகொண்டே யிருக்கவேண்டும்" என்ற காந்தியின் நிபந்தனையிலிருந்து எப்படி நழுவுவது என்று அவர் இடுக்குப் பார்ப்பதாக, யாரும் சொல்ல முடியாது. பின் என்ன? அரசியலுக்கும் அஹிம்சைக்கும் உள்ள வித்தியாசம் அவருக்குப் பட்டப் பகல்போல் இப்போதுதான் வெளிச்சமாகியிருக்கிறது!

ருஷியா, யுத்தத்தில் வந்து சேர்ந்ததால் நிலைமை மாறி விட்டதாம்! யார் நிலைமை? நமது நிலைமை அப்படியே தான் இருக்கிறது. ருஷியாவுக்கு நாம் உதவ வேண்டாமா என்பது நண்பரின் ஆத்திரம். வாஸ்தவம். சீனாவிடம் அன்று அனுதாபம் தெரிவிப்பதோடு நின்றோமே; ஏன் உதவவில்லை? நாம் திக்கற்றவர்கள். அன்றும் அப்படித்தான்; இன்றும் அதே. பிரிட்டனும் நாமும், ஆண்டானும் அடிமையுமாக இருக்கும் வரையில், இரண்டுவழிதான் நமக்கு உண்டு: எஜமான் இட்ட ஏவலைச் செய்யலாம்; அல்லது 'மக்கர்'ப் பண்ணலாம். ஆனால், உலக தர்மத்தை நிலைநாட்ட நாம் கொள்ளும் ஆசை அனுதாபங்களை யெல்லாம் அப்படியே அடக்கி வைத்திருக்க வேண்டியதுதான். அரசியல் ஞானம் வலுத்துவரும் இந்த மாஜி சத்யாக்ரகிக்கு இது புரியவில்லையா?

# குழந்தையின் ஆசை

'பூ'

குங்குமப் பொட்டும்வேண் டாம்—வானக்
கோடியில் வெள்ளமாக
பொங்குசிந் தூரம்தொட் டு—நல்ல
பொட்டொன்று போட்டிடம் மா!

பிச்சிப்பூ வேண்டாம்அம் மா—தலை
பின்னிமு டிச்சிடம் மா!
நட்சத்தி ரங்களை யே—கட்டி
நயமாக வைத்திடம் மா!

வெண்ணெயும் வேண்டாம்அம் மா—அந்த
வெண்ணிலா தன்னையின் று
உண்ணவே வேண்டும்அம் மா—வாய்
ஊறுது ஊட்டிடம் மா!



# உல்லாசப் பேச்சு — 'ரதி'

பெட்ரோல் கட்டுப்பாடு நாளுக்குநாள் பல சங்கடமான நிலைமைகளை உண்டாக்கி வருகிறது. இந்தக் கட்டுப்பாட்டை உத்தேசித்து ஒரு கவர்னர் பத்து மைல் தூரம் தமது குதிரை மீதே சவாரி செய்தாராம். ஒரு மாகாணப் பிரதம மந்திரி சாதாரண ஸைக்கிள் வாங்கிவிட்டாராம்.

இந்த மகத்தான தியாகங்களைப் பார்த்த கூலியாள் செல்லன் "நானு என்ன செய்யலாமுங்க?" என்று கேட்கிறான். ஏதாவது ஒரு மோட்டாரை இனமாகத் தள்ளிவரலாம், பெட்ரோல் செலவில்லாமல்.

* *

"வேட்டையாடுகிறதிலே சர்ச்சிலுக்கு ரொம்பப் பிரியம்; ஒரு மானை அவர் அலாக்காகத் தூக்கிக்கிட்டு வந்திட்டார்" என்கிறான் முனிஸாமி. 45-வருஷங்களுக்கு முன், இந்தியாவில் சர்ச்சில் இருந்தபோது அவருடைய 'சோக்ரா'வாக இருந்தவன் இந்த முனிஸாமி.

"அட்லாண்டிக் சமுத்திரத்துக்குச் சர்ச்சில் சென்றது ரூஸ்வெல்டைச் சந்திக்க அல்ல; மீன் வேட்டையாடவே போயிருக்கிறாரு" என்று முனிசாமி ஒரே யடியாய்ச் சாதிப்பதாக வரும் வதந்திக்குத் துளிக்கூட ஆதாரமில்லை.

* *

"நாம் பிறரை நம்பினால்தான் அவர்கள் நம்மை நம்புவார்கள். முடிந்த வரையில் என்னாலானதைச் செய்வேன். நம்புங்கள்; நம்புங்கள்" என்று உபதேசிக்கிறார் வைஸிராய் நிர்வாக சபையில் சேர்ந்த ஸ்ரீ ஆனே.

யாரை நம்புவது? இரு நூறு வருஷமாக நாம் நம்பி நம்பிவந்த பிரிட்டிஷ் தெய்வங்களையே இனியும் நம்பிக்கொண்டிருப்பதா? அல்லது காங்கிரஸின் நம்பிக்கையை யிழந்து வெளிக்கிளம்பிய ஆனேயை நம்புவதா?

* *

ஜின்னா சாகேப் பாகிஸ்தான் பிரஸ்தாபம் செய்ய ஆரம்பிப்பதற்கு எட்டு வருஷங்களுக்கு முன்பே, இந்தப் பாகிஸ்தான் யோசனை லண்டனில் பிரசாரம் ஆகத் தொடங்கிவிட்டதாம்.

'பூ! சீமைச் சரக்குத்தானா?' என்று உதருகிறீர்கள். 'மலையிலே விளைந்தாலும் உரலிலேதானே இடிபடவேண்டும்?' என்ற பழமொழியை ஞாபகப் படுத்திக் கொள்ளுங்கள்.

* *

"அந்நியப் போட்டியைச் சமாளிக்க, சர்க்கரை விலையைக் குறைப்பதுதான் நல்லது" என்று அதிகாரிகள் யோசனை சொல்லுகிறார்கள்.

இந்த அபூர்வ யோசனையைச் சொன்ன வாய்க்கு ஒரு பிடி சர்க்கரையை அள்ளிப்போட்டார் யாரோ ஒரு சர்க்கரை வியாபாரி என்ற செய்தி சற்றும் நம்பத் தகுந்த தல்ல.

* *

"நகர வைபவங்களில், ராஜப் பிரதிநிதிக்கு அடுத்த ஸ்தானம் மேயர்களுக்கு வேண்டும். அப்படி நமக்கு மரியாதை தராத வைபவங்களில் நாம் கலந்துகொள்ளுவதில்லை" என்று, கொளும்பிலே மேயர்கள் மகாநாடு தீர்மானித்திருக்கிறது.

"வாஸ்தவம். இந்த 'மரியாதை ராமர்க'ளின் தீர்மானத்திலே ஒரு சிறிய எழுத்துப் பிழை இருக்கிறது. நகரம் என்பதில், 'ர'கரமும் 'க'கரமும் இடம் மாறிவிட்டன போல் தோன்றுகிறது" என்கிறார் ஒரு வரிசெலுத்துவோர்.

* *

"தாய்லந்திலே ஒருவகைக் குரங்குகள் இருக்கின்றன. அவை ஏக பத்தினி விரதங்கொண் டிருக்கின்றன. மனிதனைப் போலவே, சில இடங்களைத் தங்கள் தங்கள் சொந்தமாக ஆர்ஜிதப் படுத்திக் கொள்ளுகின்றன. சங்கேத பாஷை ஒன்று அவைகளுக் குள்ளே இருக்கிறது. ஒன்றின் இடத்தை மற்றொன்று ஆக்ரமித்தால், திட்டுகிறது; மிரட்டுகிறது. ஒன்றும் பலிக்காவிட்டால்தான் பலாத்காரத்தில் இறங்குகிறது" என்கிறார் பென்ஸில்வானியா ராஜாங்கக் கல்லூரியின் புரொபஸர் கார்ப்பெண்டர்.

இந்த உதாரணத்தைத் தாய்லந்து மக்களும் ஜப்பான் விஷயத்தில் பரிபூர்ணமாய்ப் பின் பற்றுவார்கள் என்று நம்பலாமா?

* *

சிந்துவிலுள்ள மாடியாரி என்ற நகரத்தின் முனிஸிபாலிட்டியில், ஹிந்துக்களுக்கு அளிக்கப்பட்டிருந்த ஸ்தானங்களைப் பழைய மந்திரிகள் குறைக்க முயன்றார்களாம். அது கூடாதென்று உடனே முஸ்லீம்கள்—இந்துக்கள் அல்ல—கிளர்ச்சி செய்தார்களாம். அந் நகரில், ஹிந்துக்களும் முஸ்லீம்களும் பரிபூர்ண ஒற்றுமையோடிருக்கிறார்கள். முஸ்லீம் மசூதியும் இந்து தேவாலயமும் அடுத்தடுத்து இருக்கின்றன; ஒரு சிறிய சுவர்தான் இடையிலே இருக்கிறது என்கிறது ஒரு செய்தி.

இந்துக்களும் முஸ்லீம்களும் ஒற்றுமையாய் வாழவே முடியாதென்று சொல்லும் பாகிஸ்தான் வாலாக்கள் இதற்கென்ன சொல்லுவார்கள்? கண்கட்டு வித்தை என்றா?

## ஒரு ஸோல்ஜரைக் கொல்லும் செலவு

எதையும் புள்ளி விவரத்தின் மூலம் விளக்கமாய்த் தெரிந்து கொள்ள முயல்வதிலே அமெரிக்கர்களை யாராலும் மிஞ்ச முடியாது. முன் காலத்திலும் தற்காலத்திலும் ஒரே ஒரு ஸோல்ஜரைக் கொல்ல என்ன செலவு ஆகிறது என்று அவர்கள் இப்போது பின்வருமாறு கணக்கிட்டிருக்கிறார்கள் :

| | ப. | ஷி. | பெ. |
|---|---|---|---|
| ஜூலியஸ் ஸீஸர் காலத்தில் | 0 | 3 | 6 |
| மார்ல்பரோ காலத்தில் | 0 | 10 | 0 |
| வெல்லிங்டன் காலத்தில் | 1 | 0 | 0 |
| தற்போது நடக்கும் யுத்தத்தில் | 2,000 | 0 | 0 |

## உங்கள் விடுமுறை பிரயாணத்திற்கு வேண்டியதெல்லாம் :

**'ரெவலேஷன்' ஸூட் கேஸ் ஒன்றே!**

உங்கள் பிரயாணம் ஒரு வாரமானாலும் சரி, 15 நாட்கள் நீடித்தாலும் சரி, 'ரெவலேஷன்' ஸூட் கேஸ் ஒன்றே போதும். ஒரு 'ரெவலேஷன்' ஸூட் கேஸை இரண்டு மூன்று சாதாரண ஸூட் கேஸ்களுக்கு, பதிலாக உபயோகிக்கலாம். ஏனென்றால் எவ்வளவு சாமான்கள் வைக்க வேண்டுமோ அவ்வளவுக்கு அகன்றுகொடுக்கும். மிகவும் சுலபமாக மூடமுடியும்.

**R 4.** பாக்கு நிறமும் நீல வர்ணமும் உடையது. கம்ப்ரஸ்ட் நார்களால் 8 வல்கனைஸ்ட் பைபர் மூலைகள் வைத்து செய்யப்பட்டதால் அஸாத்ய பளுவை தாங்கக்கூடியது. நிக்கல் ப்ளேடட் பூட்டுகளாலும் சாமான்களாலும் பொருத்தப்பட்டதால நாள்பட உழைக்கக்கூடியது.



| Size | 24″ | 26″ | 28″ |
|---|---|---|---|
| Rs. | 33.8 | 36.8 | 39.8 |



Size 30″ x 17″ x 10″ Rs. 47-8 each
,, 32″ x 18″ x 12″ Rs. 50-0 ,,
,, 35″ x 18″ x 12″ Rs. 52-8 ,,

### ஸ்டீல் 'யூனிபார்ம்' பெட்டிகள்

உயர்தரமான யூனிபார்ம் பெட்டிகள் தானுகவே பூட்டிக் கொள்ளக்கூடிய 3 பூட்டுகள் பொருத்தப்பட்டது. மேல் பக்கம் கவர்ச்சியான கருப்பு வர்ணம் உள்ளே அழகான ஆகாய நீல வர்ணம். அசாத்ய சூர்ய வெப்பத்தையும் சீதோஷ்ண மாறுதல்களையும் தாங்கக் கூடியது. கரையான் கரப்புகள் கிட்டே அண்டாது.

**ஸ்பென்ஸர் அண்டு கோ லிமிடெட்**

---



## "ரிடா"

தலை வழுக்கை மயிர் உதிர்தல் முதலியவைகளைத் தடுத்து, அடர்த்தியாக மயிரை வளரச் செய்வதற்கு இன்றியமையாததோர் உயரிய தைலம்.

உங்கள் மனதைக் கவர்ந்த உயர்ந்த
சினிமா நடி **D. சூர்யகுமாரி**யின்
உன்னத அபிப்பிராயம்.

"நான் ரிடாவை மூன்று நான்கு மாதங்களாக உபயோகித்து வருகிறேன். "ரிடா" உடம்பிற்கும், மூளைக்கும் குளுமையையும், மனோரம்யமான வாசனையையும் கொடுக்கிறது. ஆதலால் நான் என் வாழ்நாள் முழுவதும் "ரிடா" வையே உபயோகிப்பதெனத் தீர்மானித்துளேன். நான் என் மனப்பூர்வமாக என் சகோதரிகளை வேண்டுவதென்னவெனில் எல்லோரும் ரிடாவையே உபயோகிக்கவேண்டும்."

**"ரிடா" அடர்ந்து கருத்த மிருதுவான பளபளப்புடன் கூடிய கேசத்தை வளரச் செய்கிறது.**

புட்டி விலை 12 அணுக்கள்தான் — எங்கும் கிடைக்கும்

**விடோ கம்பெனி, 131, பிராட்வே, மதராஸ்.**

# கண்ணோட்டம்

## 1940 வரை பலன்கள்

| | | |
|---|---|---|
| பிரிமிய வருமானம் | ரூ. | 39·96 லட்சம் |
| வட்டியும் இதர வருமானங்களும் | ரூ. | 6·38 லட்சம் |
| மொத்த வருமானம் | ரூ. | 43·34 லட்சம் |
| ஆயுள் நிதியுடன் சேர்ந்த தொகை | ரூ. | 21·61 லட்சம் |
| ஆயுள் நிதி | ரூ. | 1,55·22 லட்சம் |
| இன்வெஸ்ட்மென்டு சேம நிதி | ரூ. | 4 87 லட்சம் |
| பொது சேம நிதி | ரூ. | 1·76 லட்சம் |

★ *1940-ல் ஆயுள் நிதியுடன் சேர்க்கப்பட்ட தொகை ரூ. 21½ லட்சத்துக்கு மேலாகும்.*

★ சேம நிதிக்கு ஒரு லட்ச ரூபாய் ஒதுக்கிய பின் இத்தொகை சேர்க்கப்பட்டது.

★ *1940-ல் செலவு விகிதம் 25·77 சதம். 1939-ல் 31·54 சதமும், 1938-ல் 36·35 சதமும் ஆகும்.*

★ 'இன்வெஸ்டுமென்டு' கொள்கையின் முக்கிய நோக்கம்: (1) முன்னெச்சரிக்கையான பாதுகாப்பு. (2) விபத்துக்களை மிதப் படுத்துவது. (3) சொத்துவருமானத்தை சராசரி மதிப்பிடுவது.

# லக்ஷ்மி

## இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி

லிமிடெட்,

*தலைமை ஆபீஸ்:*—லாகூர்

*கிளை ஆபீஸ்:*—பம்பாய், கராச்சி, புது டில்லி, சென்னை, கல்கத்தா, ஹைதராபாத் மம்பாசா.

*சென்னை ஆபீஸ்:*—

**334, தம்பு செட்டித் தெருவு, மதராஸ்**



# M.K. தியாகராஜ பாகவதர்

பாடிய



# அசோக்-குமார்

டாக்கி பாட்டுகள்

CA. 1431

உனக்கண்டு...

பூமியில் மானிட...

CA. 1432

மனமே நீ ஈசன்..

ஸத்வ குண போதன்

ஒடியன் ரிகார்டுகளில் கேளுங்கள்

ஸரஸ்வதி ஸ்டோர்ஸ்

மவுண்ட் ரோட்..... மதராஸ்

# கவி ரவீந்திரர் - - கருத்துக்கள்



நமது காலத்திலே மகாத்மா காந்திக்கு அடுத்த படியாக உலகெங்கும் கீர்த்தி பெற்ற இந்தியர் கவி ரவீந்திரர்தான். அவரை இன்று நாம் இழந்தது நமக்கு மகத்தான நஷ்டமாகும். நமது பெருங்கவியை இழந்த நம் துக்கத்தை அவரது சிந்தனைகளைக் கொண்டுதான் நாம் ஆறுதல் செய்து கொள்ள வேண்டும். ஆதலால், தாகூரின் கருத்துக்கள் சிலவற்றை இங்கே ஞாபகப் படுத்திக் கொள்வோம்.

1

அவர் வாழ்க்கையின் பரிபூரணத்தைக் கண்டவர். உலகத்தையே ஒரு பெருங் கவிதையாய்த் தரிசித்தவர். 'ஸாதனா'வில் அவர் கூறுகிறார்:

இவ்வுலகமெனும் மஹா கவிதையின், ஒவ்வொரு அடியின் அளவையும் சீரையும் லட்சணங்களையும் உருவத்தையும் குண குணங்களையும் கண்டறிந்தோமானால், அதுவே ஒரு பெரும் சாதனமாகும். ஆனால், நாம் அதோடு நின்றுவிடக்கூடாது. அது நாம் ரயில்வே ஸ்டேஷனை யடைந்த மாதிரிதான். ரயில்வே பிளாட்பாரமே, நம் வீடாகிவிடுமா? இவ்வுலகமே ஓர் ஆனந்த மயத்தின் சிருஷ்டி என்று கண்டவனே, உண்மையை அறிந்தவனாவான்.

* * *

அலைகள் எழுகின்றன. ஒன்றுடனொன்று போட்டி யிட்டுக்கொண்டு, உயர உயரமாய் எழுகின்றன. ஆனால், எல்லாம் ஓர் எல்லை மட்டுந்தான். இதனாலேயே, அலை கடலில் நிலவும் பேரமைதியை நாம் உணர்கிறோம். அவ்வலைகளெல்லாம் கரை மட்டும் வந்து, மறுபடியும் சமுத்திரத்துக்கே திரும்பிச் செல்லும் ஒரு கோவையும் லயமும் மகா விசித்திரமான அழகுடன் மிளிர்கிறது.

2

வாழ்வையும் கலையையும் மறந்து சாஸ்திரத்தையும் இலக்கணத்தையும் பிடித்துக் கொண்டு திண்டாடும் வைதிகரும் பண்டிதரும், 'ஸாதனா'வில் கவிஞர் வெளியிடும் இந்தக் கருத்துக்களைப் படிக்க வேண்டும்:

வெறும் இலக்கணமே, இலக்கியமாகிவிடாது. கவி இயற்றும் இலட்சணங்களே, கவிதையாகிவிட மாட்டா. விதிகள் விடுதலைக்கு வழி காட்டும் முதற்படியே யாகும். அழகுதான் ஜீவன் முக்தி. அந்த ஸௌந்தர்யத்தில், விடுதலை, வரம்பு, அதை மீறிய பெருவெளி, இந்த எல்லாம் அடங்கி விடுகின்றன.

* * *

சட்டம், விதி என்பது என்ன? ஒருவரை, ஒரு விஷயத்தை, தான் விதித்தபடி தவிர, மற்றெப்படியும் இருக்க முடியாதென்று கூறுவது தான் சட்டம். ஆனால், மனிதன் விதிகளால் ஏமாந்து விடுகிறான். ஒரு விஷயத்தின் காரணத்தை யறிய அலையும் போது, விதிகள் விதித்த கோட்பாடுகளை யடைந்ததும், திருப்தி யடைந்து, முயற்சியைக் கைவிட்டு விடுகிறான்.

3

இயற்கையின் எழி லெல்லாம் நமது கவிஞருக்கு இறைவனின் சங்கேதமாகும். அவரது இந்த இணையற்ற கற்பனையும் 'ஸாதனா'வில்தான் காணப்படுகிறது:

பார், அதோ! அந்தப் புஷ்பத்தைப் பார்! எவ்வளவு நன்மையும் நேர்த்தியுமாக இருக்கிறது! எனினும், அதற்கும் ஒரு பெரிய வேலை யிருக்கிறது. அதன் எழிலும், வர்ணங்களும், அதன் வேலைக்கு உபகரணங்கள். அது, தன்னுடைய உற்பத்தியையும் விருத்தியையும் கவனித்துக் கொள்வதுடன், ஒரு கடமையையும் செய்ய வேண்டி யிருக்கிறது. அதன் கடமை என்ன?

ராமாயணத்தில், ஸீதை தன் மணாளனைப் பிரிந்து, ராவணனுடைய மணிமாளிகையில் சிறை கிடந்து, தன் துர்ப்பாக்கிய நிலையை நினைந்து ஏங்கி வெதும்புகையில், அவளுடைய ராமச்சந்திரனிடமிருந்து மோதிரத்தைத் தாங்கிக்கொண்டு, அவளைத் தேற்ற ஒரு தூதன் வந்து சேர்ந்தான். அந்த மோதிரத்தைக் கண்டதுமே, ஸீதைக்கு, தூதன் கொண்டுவந்த வாக்கு உண்மைதான் என்று வெளியாகிவிட்டது; அவன் தன் நாதனிடமிருந்துதான் வந்தவன், நாதன் தன்னை மறந்துவிட வில்லை, தன்னைச் சிறை மீட்க அவர் வேகமாய் விரைகிறார் என்று அவள் அறிந்து கொண்டாள்.

இம்மாதிரி தூதன்தான் இந்தப் புஷ்பம். நம் உண்மைக் காதலனிட

மிருந்து அது வந்திருக்கிறது. டம்பமும் வீண் கோலங்களும் நிறைந்து நாம் உழலும் இவ்வுலகத்தை, ராவண தர்பார் என்று நினைத்துக்கொள்வோம். இந்தத் தர்பார், தன் பொய்ச் சுகத்தையும் மாயையையும் காட்டி, நம்மைக் கற்பழிக்க முயல்கிறது. ஆனால், இதற்குள் அக்கரையினின்று சமாசாரத்தைத் தாங்கிக் கொண்டு வந்து விட்டான் புஷ்பமாகிய ஹனுமான்: "இதோ பார், வந்துவிட்டேன். என்னை அவர் அனுப்பியிருக்கிறார். பிரேமையின் ஆனந்தமே உருவான அந்த மன்மதாகார மஹா புருஷரிடமிருந்து நான் வருகிறேன். இதோ பார், நீ தனியே தவிக்கும் இத்தீவுக்கு அணை கட்டியாகிவிட்டது. உன்னை அவர் மறந்து விடவில்லை. இதோ, இப்பொழுதே வந்து உன்னை ஆட்கொள்ளப் போகிறார்; உன்னை வாரியணைத்துத் தன்னுடன் ஐக்கியப்படுத்திக் கொள்ளப் போகிறார். உன்னை மயக்கில் அழுத்திக்கொண்டிருக்கும், இம்மாயை நிரந்தரமான தல்ல" என்கிறது புஷ்பம்.

அப்போது மாத்திரம் நாம் விழித்திருந்தால், இப்படிக் கேட்போம்: "ஆம், நீ என் நாதரிடமிருந்து வந்தாய் என்று என்ன நிச்சயம்?—"

உடனே அது சொல்லுகிறது: "இதோ பார், நான் கொண்டுவந்திருக்கிறேன் அவர் மோதிரம், பார்" எவ்வளவு ஜாஜ்வல்யமா யிருக்கிறது அதன் ப்ரகாசம்!—"

ஆம், சந்தேகமேயில்லை. நம் மணாளனுடைய கணையாழிதான் அது. அதை நாம் அறிந்தவுடனேயே, மற்றெல்லாம் நமக்கு நினைவற்று விடுகிறது. என்றும் அழிவில்லா இந்த விசுவப் பிரேமை நம்மைத் தீண்டியதன் ருசுவான இவ்வடையாளமே, நம் உடல் உயிர் பூராவும் வியாபித்து, நாம் நம் நாதரையடையவேண்டும் என்னும் தீராப் பேரவாவை நம்முள் மூட்டி விடுகிறது. நாமிருக்கும் பொன் மாளிகைக்கும் நமக்கும் யாதொரு சம்பந்தமுமில்லை, நம் விடுதலை அதற்கு வெளியில்தான் என்று அக்கணமே நாம் உணர்ந்து விடுகிறோம். நம் பிரேமை பரிபூர்ணமாகிறது; நம் வாழ்க்கையின் கோரிக்கை நிறைவேறி விடுகிறது.

நாம் கூனிக் குறுகிக் கிணற்றுத் தவளைகளாய் வாழ்கிறோமே, அதைக் கண்டித்து, தீனபந்து ஆண்ட்ருஸுக்கு எழுதிய 'வெளிநாட்டு லிகிதங்கள்' ஒன்றில் கவியரசர் கூறுகிறார்:

நாம், அற்ப காரியங்களில் ஈடுபட்டு, கூண்டில் அடைபட்டதுபோல் அவஸ்தைப் பட்டுக்கொண்டிருக்கிறோம். நமக்கும் பறக்கச் சிறகுகள் உண்டு என்பதை மறந்துவிட்டோம். ஏனெனில், நம் வானவெளியை நாம் இழந்துவிட்டோம். நமது சொற்ப இடத்துக்குள்ளே நாம் 'கீச்சுக் கீச்' சென்று கத்திக்கொண்டும் தத்திக்கொண்டும் ஒருவரையொருவர் கொத்திக்கொண்டும் காலம் கடத்துகிறோம். நம்முடைய பொறுப்புக்கள் சிறுமைப்பட்ட பிறகு, நம்முடைய வாழ்க்கை சிறியதொரு வரம்புக்குள் அகப்பட்டுக்கொண்ட பிறகு, நாம் பெருந்தன்மையடைவது கஷ்டம். இருந்த போதிலும், நாம் முற்றுகையிலிருக்கும் சுவர்களின் சந்து பொந்துகளின் வழியே, வறட்சி மிகுந்த நம் கிளைகளைப் பாவச்செய்து, வெளி ரஸ்மியையும் காற்றையும் கிரகிக்க வேண்டும். நம்முடைய வேர்கள் மேல்மட்டத்து மணற்பாங்கை ஊடுருவிச் சென்று, அடியில் என்றும் வற்றாது ஊறும் ஊற்றுத் தண்ணீரைப் பருகவேண்டும். வெளி விவகாரங்களின் பந்தங்களினின்று, நம் ஆத்மாவை விடுவித்துக்கொண்டு, நம்மை ஏளனம் செய்யும் விதியைச் சமாளித்து, மனித கௌரவத்தைக் காப்பாற்றவேண்டும்.

5

கவிஞரின் நூல்களுக் குள்ளே மிகவும் பிரசித்தி பெற்றது. 'கீதாஞ்சலி'. ஆங்கிலத்தில் உரைநடைக் கவிதையாக மொழிபெயர்க்கப்பட்டுள்ள அந்தத் தோத்திரங்கள், ஆண்டவனின் அகண்டத்தையும் கருணையையும் உள்ள முருக்கும் பல உணர்ச்சிச் சித்திரங்களாகப் படம் பிடித்து விடுகின்றன. சில உதாரணங்கள்:

அவர் என் அருகில் வந்து அமர்ந்திருந்தார். நான் அதை அறிந்திலேன். சீ, பாழும் ஜடமே! என்ன தூக்கம்!—

இரவின் அரவம் அடங்கியபின், அவர் வந்தார். தம் கைகளில், அவர் வீணையை ஏந்தி யிருந்தார். அதனின்று எழும் கானங்களுடன் என் கனவுகள் இழைந்தன......

ஐயோ! என் இரவுகளெல்லாம் என் இப்படி வீணாய்க் கழிகின்றன? அவரைத் தரிசிக்க, எனக்கு ஏன் கிட்டவில்லை?

* * *

நீங்கள், உங்கள் அரியாசனத்தை விட்டிழிந்து, என் குடிசை வாசலில் வந்து நின்றீர்கள்.

உங்கள் சபையில், மஹா வித்துவான்கள் எத்தனையோ பேர் இருக்கின்றனர்; சதா சர்வகாலமும், அங்கே கானங்கள் பொழிந்துகொண்டிருக்கின்றன. இருந்தும், என் குடிசையின் ஒரு மூலையில் சிறியேன் பயின்றுகொண்டிருக்கும் இசை தங்கள் திருச்செவிகளிற் பட்டு, என் குடிசையண்டை வந்து நின்றீர்கள்—

* * *

என்னைப் பாடத் தாங்கள் கட்டளையிட்டதும், அந்தப் பெருமிதத்திலேயே என் இதயம் வெடித்துவிடும்போலிருக்கிறது. உங்கள் முகாரவிந்தத்தைக் காணக்காண, என் கண்களினின்றும் ஆனந்த பாஷ்பம் சொரிகிறது.

என் வாழ்க்கைப் புயலில் நான் அடையும் பேதங்களும் அவஸ்தைகளும் உருகி, ஒருமைப்பட்டு, ஒரே இசைமயமாகி விடுகிறது. சிறகுகளை அகல விரித்து, கடல்வழியே ஆனந்தமாய்ப் பறக்கும் சிறு பறவைபோல் நான் ஆகிவிடுகிறேன்.

என் பாட்டின் ஆனந்த வெறியில், என் பிரபுவாகிய தங்களை 'என் அன்பே!' என்று அழைக்கிறேன். ஹே கவியே! உம் சிருஷ்டியை என் கண்கள் மூலமாய்ப் பார்ப்பதிலும், உம்முடைய நிரந்தர கீதத்தை என் செவிகள் மூலமாய்க் கேட்பதிலும், உமக்கு ஒரு சந்தோஷமா—?

[குறிப்பு: 'ஸாதனா'வும் 'கீதாஞ்சலி' யும் மாக்மில்லன் கம்பெனியின் பிரசுரங்கள். 'வெளிநாட்டு லிகிதங்கள்' திருவல்லிக்கேணி எஸ். கணேசன் பிரசுரம்]

---

ஒரு அறையிலே அநேக ஆயிரம் வருஷங்களாக இருந்த இருட்டானது ஒரு தீபம் கொணரப்பட்டதும் உடனே அகன்று போகிறது. அதே போல, அளவில்லாத ஜன்மாந்தரங்கள் தோறும் செய்த பாபத் தொகுதிகள் அனைத்தும், ஒரு தரம் உண்டாகும் ஈசுவரனது கிருபா கடாட்சத்தாலேயே மறைந்து போகின்றன.

**ஸ்ரீ பரமஹம்ஸர்.**

சிறு கதை :

# கறைபட்ட இலை

[எல். எஸ். ராமாமிருதம்]

அவன் கவிஞன். அவன் கண்கள், கனவு காணும் கண்கள். அக்கனவுகளில், இக்கடும் வெயிலே நள்ளிரவின் வெண்ணிலவாய் மாறிவிடும்; இவ்வெயிலில் வேகும் வயல்களே, அந்நிலவில் குளிக்கும் நந்தவனமாகிவிடும்; பாசியும், ஊசலும் படர்ந்த இவ்வாய்க்கால், தாமரையும் ரோஜாவும் மலிந்து மிதந்து, கந்தர்வர் குளிக்கும் அற்புதத் தடாகமாகும். அப்பொழுது, அவன் கற்பனை வெளியில், அப்பறைச்சி என்ன ஆவாள்?

ஒரு காலத்தில் ஓர் இலை, அணில் கிள்ளி, விழுந்தது; ஆலிலை.

விழுந்து, கீழே கிடந்த முட்புதரில் சிக்குண்டது.

வெயிலில் காய்ந்து, மழையில் நனைந்து, பனியில் விறைத்து, காற்றில் குளிர்ந்தது—கொஞ்ச காலம்.

ஆலமரத்தடியில் ஒரு வாய்க்கால். எங்கேயோ, எப்பொழுதோ பிறந்து, பாம்பைப்போல் வளைந்து வளைந்து, எங்கெங்கோ சென்று, கடைசியில் எங்கேயோ மறைந்தது.

ஒரு நாள் ஒருத்தி அங்கே வந்தாள். பறைச்சி. தலையில் ஒரு சோற்று மூட்டை. வயலில் கவலையடிக்கும், தன் புருஷனுக்குக் கஞ்சி கொண்டு போகிறாள்.

வாய்க்காலில் தண்ணீர் குளுகுளு வென்று ஓடியது.

வெயிலோ வெந்தது.

அவள் உடல் வியர்த்தது.

புடவையை அவிழ்த்து, கரையோரமாய்ச் சோற்று மூட்டையுடன் வைத்துவிட்டு, ஜலத்தில் இறங்கினாள்.

அவள் குளிக்கும் பொழுது, எதிர்க்கரையில் ஒருவன் வந்தான். இளவல். அவனுடைய, எண்ணெய் வறண்ட செம்பட்டை மயிரில் வெயில் விழும்போது, தங்க மோதிரங்கள் ஒன்றுடனொன்று பிணைந்து தகதகவெனும் மோதிரக் குவியலாய் அது மாறியது.

வாய் வெற்றிலைச் சிவப்பு. கன்னத்திலும் உதட்டிலும், அவன் அம்மையின் பால் இன்னமும் வழிந்தது.

அவன் கண்கள் — அவை எதையோ தேடி அலைந்தன. அவைகளில் கனவுகள் உலவின— பஞ்சவடி, பிருந்தாவனம், மானஸா தீரம். ஆம், அவன் ஒரு கவிஞன். (அல்லது பைத்தியம் என்னலாமா?) இடையில் ஓர் எழுத்தாணி. அவன் பாட்டனுடையது...... எங்கேயோ பார்த்த வண்ணம், என்னவோ யோசனை பண்ணிக்கொண்டு அவன் வருகையில், திடீரென்று அவன் அவளைக் கண்டான். சட்டென நின்றான். அவனை ஒரு புதர் மறைத்தது. அதனால் அவள் அவனைப் பார்க்கவில்லை.



...தான் கண்டதை யெல்லாம் எழுத முயன்றான்.

அவள் உடல், உள்ளம் எல்லாம், வெள்ளத்தின் வசம் நின்றது. புனலின் குளிர்ச்சி உடலில் ஊறும் ஆனந்த வெறியில், தண்ணீரைக் கையால் அடித்துத் திவலைத்திரையெழுப்பி, அதன் பின் மறைந்து, கல கலவெனச் சிரித்து, அப்படியே மல்லாந்து படுத்தாள்.

படுத்ததும், அவள் மயிர் அவிழ்ந்து, தோகையென விரிந்து, பிறகு கனத்து அமிழ்ந்தது. கைகளை விரித்து, கால்களைச் சேர்த்து சிலுவைபோல் மிதந்தாள். வெயிலின் வெப்பம் தாளாமல், அவள் கண்கள் மூடின. புனல் வெறியின் ஆனந்தம் சஹிக்காது, வாய் சிரித்தது. அவள் உடல் கரும் பளிங்கென மின்னியது.

அவன் அவளிடம் லயித்தான். இடையில் சொருகிய எழுத்தாணி அவனையே யறியாமல் அவன் கையில் ஏறியது.

ஓலை? இல்லை. ஆனால், அதோ முட்களிடையில் ஓர் ஆலிலை—சட்டென்று அதையெடுத்து, அங்கேயே மண்டியிட்டுத் தொடை மீது வைத்து எழுத ஆரம்பித்தான். தன் உள்ளத்தில் எழுந்த உணர்ச்சிகளை உருவாக்க முயன்றான்.

அவன் கவிஞன். அவன் கண்கள், கனவு காணும் கண்கள். அக்கனவுகளில், இக்கடும் வெயிலே, நள்ளிரவின் வெண்ணிலவாய் மாறிவிடும்; இவ்வெயிலில் வேகும் வயல்களே, அந்நிலவில் குளிக்கும் நந்தவன மாகிவிடும்; பாசியும், ஊசலும் படர்ந்த இவ்வாய்க்கால், தாமரையும் ரோஜாவும் மலிந்து மிதந்து, கந்தர்வர் குளிக்கும் அற்புத ஓடையாகும். அப்பொழுது, அவன் கற்பனை வெளியில், அப்பறைச்சி என்ன ஆவாள்?

அவன் எழுப்பிய கனவுலகில், கற்பக வனத்துப் பொய்கையில் அப்ஸரஸ் விளையாடுவதைக் கண்டானா? அல்லது, நள்ளிரவின் வெண்ணிலவில், கண்ணனின் ஜல க்ரீடானுபவத்தை எதிர்பார்த்து, வேளைக்கு முன்னரே வந்து, யமுனையில் காத்துக் கொண்டிருக்கும் முதல் கோபியாய்க் கண்டானா? அல்லது க்ரீடை முடிந்து, அவரவர் வீட்டுக்கு அவரவர் விரைந்த பிறகும் ஆனந்தத் திளைப்பில் அறிவிழந்து, இன்னமும் ஜலத்தில் லயித்துக்கிடக்கும் கடைசிக் கோபிகையாய்த் தோன்றினளா அவள்?

அல்லது பஞ்சவடியில் சூர்ப்பனகையின் சாயை விழுமுன்னர், பம்பையில் ஸீதாபிராட்டி அனுபவித்த ஆனந்தாம்ருதத்தை ஒரு நிமிஷம் பிரத்யக்ஷ தரிசனமாய்க் கண்டானா?

அல்லது ஆண்டவன் ஆதியில் பிடித்த மண்ணில் உருவான முதற் பெண்மையா அவள்?

இல்லாவிடில் 'பசுபதியையே மணாளனாய்க் கொள்வேன்' என்று இமவான் மகள் கடுந்தவமியற்றும் பொழுது, பூஜைக்காகக் குளிக்கச் சென்ற விடத்தில், கடவுளை நினைந்து, தன்னை மறந்து, யோக நித்திரையில் ஆழ்ந்த பயங்கரப் புனிதக் காட்சியா அது?

மற்றும் அவன் கண்கள் செய்யும் இந்திர ஜாலத்தில், அக்காலத்திலே, திலோத்தமையைத் தழுவ, சுந்தோபசுந்தர் இட்ட சண்டையை யொத்து, இப்பொழுதும் ஒரு பெண்ணைக் குறித்து, வெப்பமும் அப்புவும் இடும் போட்டியைக் கண்டானா?—

அவன் கண்டது என்ன? என்னவோ? ஆனால், தான் கண்டதையெல்லாம் எழுத முயன்றான்.

அவரவர்க்கு அவரவர் வேலையில் கவனம். அவனுக்கு அவன் எழுத்தில்; அவளுக்குஅவள் குளிப்பில். ஆகையால், இன்னமும் அவள் அவனைப் பார்க்கவில்லை. இருவரும் மற்றோர் ஆள் அவ்விடம் விரைந்து வருவதைக் கவனிக்கவில்லை. அவ்வாள்தான், அப்பறைச்சியின் புருஷன்.

அவனுக்கோ, கவலையேற்றத்தினின்று இறங்கிய களைப்பும் பசியும். 'கஞ்சியெடுத்து வா என்று சேரிக்கு அனுப்பிய பொம்புள்ளே இன்னமும் வந்து சேரவில்லியே' என்ற கோபம். பெண்பிள்ளை சோற்று மூட்டையைக் கரையில் வைத்துவிட்டு, வாய்க்காலில் குளிப்பதை, அவன் கண்டான். அவளைத் திட்ட வாயெடுக்கையில், கரையில் உட்கார்ந்துகொண்டு அவளைப் பார்த்து இளித்துக் கொண்டிருக்கும், கற்பனை வெறியனையும் கண்டு விட்டான்.

பறையனுக்கு வாயடைத்துவிட்டது. எண்ணங்கள் வெகு வேகமாய்ச் சுழல ஆரம்பித்துவிட்டன.

"அஞ்சு ரூபாயும், அரைப் பீப்பா கள்ளும், ஒரு சேவலும் வரிசையாய்க் கொடுத்து, தொட்டுத் தாலி கட்டி, குடும்பம் நடத்தலாமின்னு கூட்டிவந்த பொண்ணு இவள்! எத்தனை நாளா, இந்தமாதிரி, கட்டினவனுக்குச் சொந்தமான உடம்பை, விலைக்கு வெளியே காட்டி உத்தியோகம் பண்ணும் தேவடியாச் சிறுக்கியாய் ஆனாள்? ......குடிசைக்குப்போய்க் கூழைக் கொண்டு வர வேண்டியவளா இவ? இல்லாட்டி, இப்படி, காலையு மில்லே, மாலையு மில்லே, கால் காசுக்குத் துரோகம் பண்றவளா இவ?—ஆமா, அவள் மானத்தை இப்படிக் கால்காசுக்கு அனுபவிக்கிற இந்தக் கொடும்பாவி யாரு?—பார்த்தா, பார்ப்பாரக்களையா இருக்குதே! ஆமா, நான் பறையன்தான்; ஆனால், என்ன? எனக்கு மாத்திரம் ஒரு குடிசையில்லையா, குடும்பமில்லையா, கௌரவ மில்லையா? நான் புருஷனல்ல? எனக்குப் பவுருஷ மில்லே?—"

பறையனுக்கு மண்டை திகுதிகுவென எரிந்தது. காதண்டை 'ஜோ' வென்று சமுத்திரம் இரைந்தது. சரேலென்று வந்து, இளைஞனின் எழுத்தாணியைப் பிடுங்கி, அவனது மயிரைப் பிடித்துத் தலையை நிமிர்த்தி, பையலின் விலாவில் ஒரு குத்துக் குத்தினான். ஒரே குத்துத்தான். எல்லாம் சொற்பத்திலும் சொற்ப நேரம்தான். சொல்லத்தான் இந்நேரம்.

அவன் வந்தான், கண்டான், நினைத்தான், கொன்றான். அவ்வளவுதான்.

ஆலிலை, கவிஞனின் கரத்தினின்றும் நழுவியது. அது ஜலத்தில் விழுமுன்னர், அவனது ரத்தத்தில் ஒரு துளியைத் தாங்கியது. அவ்வுதிரத் துளி, தண்ணீரில், இலைப் படகில் மிதக்கையில், வெயிலின் ஒளி அதன்மேல் பட்டதும், அது பவழமாய் மின்னியது.

வாய்க்காலில் குளிக்கும் பறைச்சி அவ்விலையைக் கையிலெடுத்துப் பார்த்தாள். அவளுக்கு வியப்பாயிருந்தது. ஏதோ சில கிறுக்குகள்; அவற்றின் பக்கத்தில் ஒரு துளிச் சிவப்பு!—

அது காலனின் கடிதம், அதில் அவன் வைத்திருக்கும் முத்திரையென்று அவள் எப்படிக் கண்டாள்!—

"தேவடியாச் சிறுக்கி!—பறநாயே!—" என்று பறையன் பாய்ந்தான்.

மீண்டும் அந்த எழுத்தாணி அவள்மார்பிலே அழுந்திய போது, அவளுக்கு வீறிடவும் நேரமில்லை. ஆணியின் வேகம் அவ்வேகம். அது செல்லும் பாதையும், அவ்வளவு சுகம்—காலன் அவ்வளவு ஆசையாய் அவளைத் தழுவினான்.

அவன் கை வீசிய வீச்சில், ஆலிலை, அக்கரையில் போய் விழுந்தது. இச்சமயம் அதன் கனமும் ஒற்றைக்கு இரட்டை ஆயிற்று. ஒரு துளி ஆண் இரத்தம், ஒரு துளி பெண் இரத்தம்: ஒன்றையொட்டியொன்று.—

அவளைக் கொன்ற பிறகுதான், பறையனுக்கு மூளைக் கொதிப்பு தணிந்தது. உணர்வு வந்ததும் உதறல் எடுத்துக் கொண்டது. ஆணியைக் கீழே எறிந்து விட்டு ஓடினான்.

அப்புறம், என்னென்னவோ நடந்தது—வாய்க்காலில் குளிப்பாட்டும் சவத்தைப் பற்றியும், கரையில் கிடக்கும் சவத்தைப் பற்றியும், சோற்று மூட்டையின் மேல் விழுந்திருந்த எழுத்தாணியைப் பற்றியும்—

அதையெல்லாம் பற்றி நமக்கென்ன?

இது இலையின் கதை.

அதுவும் இனிக் கொஞ்சம்தான்.

வெயிலில் காய்ந்து காற்றில் அலைந்து, எங்கெங்கோ சென்று, அது, கடைசியில், அடுப்புக்குச் செத்தை பெருக்கும் ஒருத்தியின் துடைப்பத்தில் சிக்குண்டது.

"எந்தக் கட்டையிலே போகிறவனோ புகையிலைச் சாறு துப்பியிருக்கான்—இல்லாட்டி, இலை தைக்கலாம்—இருந்தாலும், பரவாயில்லை; பெரிய இலை, காஞ்ச இலை, நல்லா எரியும்!—"

அவள் நினைத்ததும் சரிதான்.

அது நன்றாய்த்தான் எரிந்தது.



B.S. டைப் பம்பு

PSG

P. S. G. சாமான்கள் உயர்தர உலோகங்களைக் கொண்டு, நவீன சாதனங்கள் மிகுந்த தொழிற்சாலையில் சிறந்த வேலைப்பாட்டுடன் செய்யப்படுவதால், அவைகளின் சிறப்பு விற்பனையாளர்களால் மட்டுமின்றி, விவசாயிகளாலும், மற்றும் அவற்றை உபயோகித்தவர்களாலும், தேசம் முழுவதும் பரவி வருகிறது.



P.S.G. சைரன்



P.S.G. கரும்பாலை



P.S.G. காட்டன் ஜின்



P.S.G. கலப்பை



P.S.G. கும்மட்டி, பணியாரக்கல்



P.S.G. கவலை உருளை



ட்ரஸ் வேலை



P.S.G. எடை குண்டுகள்.

## தயார் செய்பவை

விவசாயக் கருவிகள்
விவசாய இயந்திரங்கள்

டெக்ஸ்டைல் இயந்திரங்கள்
வீட்டுச் சாமான்கள்

நாங்கள் தயார் செய்பவைகளின் ஜாபிதாவிற்கும், விபரங்களுக்கும் எழுதுங்கள்.

**விற்பனை ஸ்தலங்கள் :—**

(1) கார்டன் உட்ராப் & கோ., (மதராஸ்) லிமிடெட், தபால் பெட்டி நெ. 42 (கிளை ஆபீஸ்கள் : விசாகபட்டணம், விஜயநகரம், காகிநாடா & பெஜவாடா), மதராஸ். (2) V. குருசாமி, சைதாப்பேட்டை, மதராஸ். (3) ஜெனரல் & மெஷினெரி கம்பெனி, ஆஸ்மானியா பில்டிங்ஸ், ஸ்ரீ நரசிம்ம ராஜா ரோடு, பங்களூர். (4) வேலு & கோ., அருணாசல ஆசாரி வீதி, சேலம். (5) நியோ எலெக்டிரிக் சர்வீஸ், திருவண்ணாமலை. (6) S. ராமநாத ஐயர், தென்காசி. (7) K. L. சங்கம நாயுடு, மகாலட்சுமி விலாஸ் ஷோரூம்ஸ், தேனி. (8) R. M. S. ராமசாமி நாயுடு, அருப்புக்கோட்டை. (9) P. S. G. C. I. கிளை ஆபீஸ், தெற்கு மாசி வீதி, மதுரை. (10) P. S. G. C. I. கிளை ஆபீஸ், 113, தளி ரோடு, உடுமலைப்பேட்டை. (11) P. S. G. C. I. கிளை ஆபீஸ், பாண்டி ரோடு, விழுப்புரம். (12) எஷ்யன் டெக்ஸ்டைல் இஞ்சினீயரிங் கார்பரேஷன், ஸர் பிரோஷா மெத்தா ரோடு, பம்பாய்.

# எம்பயர் ஆப் இந்தியா லைப்
# அஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட், மதராஸ்.

இக்கம்பெனி 1897-ல் ஸ்தாபிக்கப் பெற்றது. சிக்கனமான நிர்வாகத்துக்கும் பக்காவான சேமிப்புக்கும் குறைந்த பிரீமியம் விகிதங்களுக்கும் பெயர் பெற்று விளங்குகிறது.

முன் இருந்த குறைந்த பிரீமிய விகிதங்களுக்கே இப்பொழுதும் அஷ்யூரன்ஸ் செய்கிறோம். கம்பெனியின் போனஸ் விகிதம் எப்போதும் நல்ல நிலையிலேயே இருந்து வருவதுடன் வளர்ந்துகொண்டும் வருகிறது. கம்பெனி உறுதியான நிலைமையில் இருப்பதாலும் மக்களுக்கிடையே நல்ல செல்வாக்குப் பெற்றிருப்பதாலும், ஆர்கனைஸ் செய்து பாலிஸிகள் சேர்ப்பது மிகவும் சுலபமாகும்.

**தேவை :—ஜில்லா ஆர்கனைஸர்களும் ஏஜண்டுகளும் தேவை. கவர்ச்சியான நிபந்தனைகள்.**

விரிவான விவரங்கள் வேண்டுவோர் பின்வரும் விலாசத்துக்கு எழுதவும்.

★

The Branch Secretary,

**EMPIRE OF INDIA LIFE ASSURANCE COMPANY, LTD.,**

**11, FIRST LINE BEACH, MADRAS.**

**செகாவ் சித்திரம்:**

# வாழ்க்கைச் சிடுக்குகள்

[கே. நடேசன்]

> திடீரென்று வந்தார். துப்பாக்கி கேட்டார். எதற்கு? ஒன்றுமில்லை. வாழ்க்கையிலே வெறுப்பு வந்துதான். வராதா? கேளுங்கள் அவர் கதையை.

மாலை வேளை. மாணிக்கம் தனது பங்களாவில் ஓர் அறையில் சுகமாகப் படுத்துக்கொண்டிருந்தான். எதிரே பல நாற்காலிகளும் சில மேஜைகளும் கிடந்தன. கொஞ்ச நேரத்துக்கெல்லாம், சில சில்லறைச் சாமான்களை இரு கைகளிலும் தூக்கிக்கொண்டு, களைப்புடன் பெருமூச் செறிந்தவண்ணம் செல்வபதி உள்ளே பிரவேசித்தார். அங்கும் இங்கும் வெறித்து நோக்கிவிட்டு, ஏதோ பித்துப் பிடித்தது போன்ற பார்வையுடன் ஒரு நாற்காலியில் அமர்ந்தார்.

தனது அன்பார்ந்த நண்பரின் வரவைக் கண்டு, குதூகலத்துடன் "வாங்கோ, செல்வபதி! வரணும்; வரணும். எப்போ பார்த்தது! எவ்வளவு நாளாச்சு! எங்கிருந்து வராப்போலே!" என்று மாணிக்கம் விசாரித்தான். "ஒரு காரியமுமில்லை" என்று பதிலளித்த செல்வபதி, சற்று நேரம் என்னவோ யோசித்தார். பிறகு, "மாணிக்கம்! சிநேகிதன் சொல்லைத் தட்டாதே! உன் கைத் துப்பாக்கியை ஒரே ஒரு நாளைக்கு இரவல் கொடு" என்றார்.

இதைக் கேட்ட மாணிக்கம் திடுக்கிட்டு விட்டான். "இவர் எதற்காக ரிவால்வர் வேண்டுமென்கிறார்?" என்று அவன் யோசித்துக்கொண்டேயிருக்கும்போது, அவர் "அப்பா! என்ன யோசனை? ......கொஞ்சம் தண்ணீர் கொடு; சீக்கிரம் கொண்டா!.........இன்றிரவு காட்டு வழியே போகணும். அதனால்......எதற்கும் முன் ஜாக்கிரதையாகப் போக வேண்டாமா?" என்றார்.

"காட்டு வழியாவது மண்ணாங்கட்டியாவது! ஏதோ உமக்குக் கெட்ட எண்ணம் பிடித்திருக்கிறது. உடம்பு சரியில்லையா? மனக் குழப்பம் போலிருக்கு. பார்த்ததுமே தெரிந்துவிட்டதே!"

"விஷயம் என்னவென்று சொல்லுகிறேன். சற்றுப் பொறு. களைப்பாயிருக்கு. முதலில் கொஞ்சம் மூச்சுவிட்டுக் கொள்ளுகிறேன்......உடம்பில் திராணியில்லை. வேட்டை நாய் மாதிரி இறைக்கிறது. தாங்கவே முடியவில்லை. சிநேகிதனுச்சே என்று கேட்டேன். விவரம் அப்புறம் விசாரிக்கலாம். நீ நல்ல பிள்ளையாயிற்றே! ரிவால்வரைக் கொஞ்சம் கொடேன். கெஞ்சிக் கேட்கிறேன், மறுக்காதே!" என்றார் மீண்டும் செல்வபதி.

இவர் பேச்சு மாணிக்கத்துக்குப் பிடிக்கவில்லை. அவன் மனம் சஞ்சலமடைந்தது. ஒரு குடும்பத்தின் தலைவராயும், பஞ்சாயத்து சபையில் ஓர் அங்கத்தினராயும் உள்ள செல்வபதிக்குப் புத்தி மாறுபாடு எப்படி ஏற்பட்டது? அவரது வாட்டத்துக்குக் காரணம் என்ன என்று யோசித்தான். இதை ஊகித்தறிந்த செல்வபதி பின்வருமாறு திரும்பவும் சொல்லலானார்: "அடிமைத் தொழில் சரியாயிருக்கு. உழைச்சு உழைச்சே பிராணன் போய்விடும்போலிருக்கு. நான் என்ன மூட்டை தூக்கி முத்தையனா? மனுஷனா, மாடா! சிமண்டினாலா என்னைப் பண்ணியிருக்கு! போதும் இவ்வுலக வாழ்க்கை. வேண்டியது அனுபவிச்சாச்சு."

அக்கம் பக்க வீட்டார்களின் காதில் இது விழப்போகிறதே என்று பயந்த மாணிக்கம், அவரை "உரக்கப் பேசவேண்டாம்" என்று வேண்டிக்கொண்டான். அதற்கு, தாம் முன் வைத்த காலைப் பின் வைக்கப்போவதில்லை என்றும் ரிவால்வரை வேறு எவனிடமிருந்தாவது வாங்கிக்கொள்ளுவதாகவும் அவர் சொன்னார். "இதேது விபத்து வந்துவிடுமோ" என்று நினைத்து, சற்று நிதானித்து, ஆத்திரக்காரனுக்குப் புத்தி மட்டு என்பார்களே என்று விசாரப்பட்டு, அவரிடம் நெருங்கி உட்கார்ந்து கொண்டு, அவருக்கு வாழ்க்கையிலே என்ன அவ்வளவு தொந்திரவு ஏற்பட்டுவிட்டது என்று மாணிக்கம் பரிவோடு விசாரித்தான்.

"தொந்திரவா? என்ன என்று கேட்கிறாய்? சொல்லுகிறேன், கேள்! மனதில் இருப்பதைச் சொல்லி அழுதால்தானே மனமும் சமாதானப்படும்.....இன்றுதான் பாரேன், என்ன நடந்தது தெரியுமா? காலை பத்து மணியிலிருந்து மாலை நாலு மணிவரையில், ஆபீசை விட்டு அசைய முடியவில்லை. இதுதான் உனக்குத் தெரியுமே? வேலையோ ஆளைக் கொல்லுது. மூச்சுவிடத் தேசகாலமில்லை. பேப்பர்க் கும்பல் தீர்ந்த பாடில்லை. மண்டை வறண்டு போகிறது. குமாஸ்தா சமயம் பார்த்து லீவிலே போய்விட்டான். இருக்கிற நாளிலும், அவனுக்குக் காது சுத்தக் கட்டை. வேலையோ சீக்கிரம் ஆகணும். வருகிறவர்களாவது கொஞ்சம் பதவிசாய் இருக்கலாகாதா? அவர்களும் காலில் கஞ்சியை வடித்துக்கொண்டு வருகிறார்கள். எப்பவும் அவசரம்தான். உதவிக்கு ஆளில்லாமல் நான் படுகிறபாடு சொல்லி முடியாது. எல்லாம் கந்திரகூளம்; குழம்பிக் கிடக்கு! ஒரு கடுதாசி எடுக்கப் போனால், இலகுவில் அகப்படுகிறதா! 'அவசரக் கோலம் அள்ளித் தெளி'தான்! சமுத்திர அலை ஓயறதேது? அநுமான் வால் நீளுகிறாப் போல் தொட்டுத் தொட்டு வேலையிலேயே சாகவேண்டியிருக்கு. விழி பிதுங்கிப் போகிறது......... கொஞ்சம் தண்ணீர் கொடு...... செத்துச் சுண்ணாம்பாய் ஆபீஸிலிருந்து வீட்டுக்கு வந்தால், 'ஏதோ தின்றோம்; படுத்தோம்' என்பதில்லை. ஒரு நாள் லீவு வந்தால் போதும். அது டவுனிலிருந்து சாமான் வாங்கவேண்டிய நாள் ஆகிவிடுகிறது. மனைவியின் ஜம்பர் சரியாய்த் தைக்கப்படாததினால் தையல்காரனிடம் போய் ரிப்பேர் செய்யவேண்டியது; பெண்ணுக்குச் செருப்பு மாத்தணும்; ஒட்டுப்போடக் கலர் சில்கும், ரிப்பனும் மச்சினிக்கு வாங்கணும்... இரு...வந்துட்டேன். இதை வாசிக்கிறேன், கேள்" என்று சொல்லி, சட்டைப் பையிலிருந்து ஒரு ஜாபிதாவைச் செல்வபதி எடுத்தார்.

அதில் பின்வருமாறு எழுதியிருந்தது : "ஹரிகேன் விளக்குச் சிம்னி இரண்டு. ஒன்றரை வீசை காப்பிக்கொட்டை. வெற்றிலைத் தட்டு, பூப்போட்டது. மூட்டைப் பூச்சிப் பௌடர். ஸ்பிரிட்டு பாட்டில். லாண்டிரியிலிருந்து உருப்படிகள்."

இவையெல்லாம் அவர் குடும்பச் சாமான்கள். சிநேகிதர்கள், அசலாத்துப் பேர்கள் இவர்களுடைய ஜாபிதாக்களைச் சொல்லி முடியாது. மறுநாள் தீபாவளிப் பண்டிகை. போதாக்குறைக்கு அடுத்த வீட்டு அம்மாளுக்குப் பிரசவமாம். அதற்குச் செல்வபதி கோஷா ஆஸ்பத்திரியிலிருந்து நர்ஸைக் கொண்டுவர வேண்டும். அவர் எந்தக் காரியத்தைச் செய்வார்? எந்தக் காரியத்தை விடுவார்? ஏதாவது மறந்துவிடும் என்று நினைத்து, கைக்குட்டை பூராவும் முடிச்சுக்கள் போட்டு வைத்திருக்கிறார். எல்லாவற்றையும் ஜாபிதாப்படி வாங்கினாலும், தட்டுக்கெடாமல் வண்ணாரப்பேட்டைக்கு ரயிலில் எடுத்துச் செல்ல வேண்டும். தூக்க முடியும், முடியாது என்பதைக் கவனிப்போர் யார்? உதைபட்ட கழுதை மாதிரி சும்மா விதியை நினைத்துக் கொண்டு, மருந்துக் கடைக்கும் துணிக் கடைக்கும் மார்க்கட்டுக்கும்போய் வருவார். நாக்குத் தள்ளிப் போகிறது. சில்லறைக் கணக்கு தட்டுக் கெடும். கடைக்காரனுடன் குஸ்தி ஏற்படும். சில இடங்களில் காசு கொடுக்க மறந்து போவார். மார்க்கெட்டில் யார் மேலாவது மூட்டையை இடிப்பார். அவர்கள் வாயில் வந்தபடி திட்டுவார்கள். சாதாரணமாய் ஒருவர் வாங்கின சாமானைக் கட்டிக்கொண்டு வருவதே பெரும்பாடு. இவர் வாங்கும் சாமான்களோ கட்டிக் கொண்டு வரக்கூடியவை அல்ல. பித்தளைத் தட்டையும், விளக்குச் சிம்னியையும், ஸ்பிரிட்டு பாட்டிலையும், எப்படிக் கொண்டுவர முடியும்? பிதிர்ப்போட்ட மாதிரி மனம் குழம்பித் திண்டாடுவார். ரயிலில் பத்திரமாக எடுத்துக்கொண்டு வர வேண்டுமே? பிரயாணிகளின் நெருக்கத்தில் வாயில்லாப் பூச்சி போல் திணறிக்கொண்டு வருவார்.

இவ்விதம் தட்டுக் கெட்டு வீடு சேர்ந்தால், இளைப்பும் களைப்பும் ஆற ஒரு கப் 'காப்பித் தண்ணி' வேண்டாமா! அது கிடைக்காது. ஆனால், "என்ன இத்தனை நாழி?" என்று அவர் சம்சாரம் வெள்ளென்று மட்டில் விழுவாள். அவளுக்கோ சினிமாவுக்கு நேரமாகி விட்டது. பாவம், என்ன செய்வாள்!

இத்தனைக்கும் பிறகு, செல்வபதிக்கு இரவில் தூக்கமும் வருமா? அப்படியே தவறி இரவில் தூக்கம் பிடித்தாலும், யானைக் கொசு படையெடுத்து வருகிறது. உடம்பெல்லாம் சுண்டைக்காய் மாதிரி தடித்துப் போகிறது. பக்கத்து அறையில் குழந்தைகள் கத்துகின்றன. பெண்டாட்டியோ கோபத்துடன் அவைகளைக் கண்டிக்கிறாள். கொசு காதிலே வந்து 'பாண்டு' வாசிக்கிறது. அதனுடைய இராகத்துக்குச் சரியாய் அவர் பிடில் வாசிக்கவேண்டியிருக்கிறது. சொறிந்து சொறிந்து தடித்துப் போகிறது. இராத்திரி சிவன்ராத்திரி தான். போது விடிந்தால், ஆபீசுக்கு ஓடவேண்டும். இல்லாமற் போனால், 'லேட்' ஆகிவிடுமே. மழை வெய்யில் பார்க்க முடியுமா? பார்த்தால் சோத்துப் பை கிழிந்துவிடுமே. திரும்ப ஆபீசில் கடிவாளம் மாட்டவேண்டியதுதான். உழைத்துப் பலன் உண்டா? உடம்பு வியாதிப் பிண்டமாகிறது. பைத்தியம் பிடிப்பதுதான் பாக்கி. உடம்பைப் பார்த்துக் கொள்ள அவருக்கு நேரமேது? சாகப் போதிருந்தாலும் வேகப் போதில்லையே, என்ன செய்வார்? யார் மேல் கோபிப்பார்?

இம்மாதிரியான வாழ்வு குடித்தனக்காரர்களுக்குச் சகஜமானு

லும், செல்வபதியிடம் மாணிக்கம் அநுதாபப்பட்டான். அவனுடைய இரக்க புத்தியைக் கண்டு, அவர் மெச்சினார். அவனைப் பார்த்து, "சரி, போய் வருகிறேன். இன்னும், பல்பொடி, கொண்டை ஊசி, பூநூல், இவையெல்லாம் வாங்கிக்கொண்டு வண்ணாரப்பேட்டை போகணும்" என்றார். அப்போது மாணிக்கம் தனக்கு ஒரு சிறிய உபகாரம் பண்ணினால் தேவலை என்று வேண்டிக்கொண்டான். "அது என்ன?" என்று அவர் விசாரித்தார்.

"ஒன்றுமில்லை. என் மச்சினிக்கு ஒரு கடிதம் தருகிறேன். அத்துடன் ஒரு தையல் மெஷின் கேட்டிருந்தாள்; வாங்கி ஒரு வாரமாகிறது. நல்ல வேளையாய் நீங்கள் நேரில் போகிறீர்களே. தெரிஞ்ச மனுஷாளிடம்தானே கொடுக்கணும்? அத்துடன் ஒரு கிளிக் கூண்டு. அவ்வளவுதான். கிளி பறந்து போகாதபடி ஜாக்கிரதையாய்க் கொண்டுபோய்ச் சேர்க்கணும்" என்றான் மாணிக்கம்.

இது கேட்ட செல்வபதி திடுக்கிட்டுப் பெருமூச்செறிந்து, "இவ்வளவுதானா!...நீயும் என் முதுகில் வந்து ஏறிக்கொள். உன்னையும் உன் மச்சினியிடம் கொண்டு போய்ச் சேர்க்கிறேன்..." என்று கத்தி, "அப்பா! ஒருவன் அகப்பட்டால், ஒழித்து விடுவீர்கள் நீங்கள். என்ன ஜன்மம் இது! இந்த வாழ்க்கை இல்லை என்று யார் அழுதார்கள்?" என்று சொல்லி முடித்தார்.

## கண்டதை நம்பவில்லை !

ஒரு விருந்து நடந்தது. பிரஞ்சுப் புரட்சிக்கு விதை யூன்றிய ஒருவரும், உலகின் சிந்தனைகளையே கலக்கியவரும், சுடச் சுடக் கேலி செய்வதில் நிபுணருமான வால்டேரும் வேறுசில பிரமுகர்களும் அதற்கு வந்திருந்தார்கள். ஒவ்வொருவரும் ஒரு தங்கக் காசு கொடுக்க வேண்டுமென்று கேட்டு, ஏதோ ஒரு தர்ம காரியத்துக்கு அங்கே நன்கொடை ஒன்று உண்டியல் மூலம் வசூலிக்கப் பட்டது. பணத்தைக் கடைசியிலே எண்ணிப் பார்த்தார்கள். ஒரு காசு குறைந்தது. விருந்தாளிகள் அனைவரது கண்களும் ஒரு கருமியை நோக்கின. "நான் போட்டுவிட்டேன்" என்று அந்தக் கருமி ஒரேயடியாய்ச் சாதித்தார்.

உண்டியல் பெட்டியைக் குலுக்கிய கனவான் "அவர் போட்டதை நான் பார்க்க வில்லை. ஆனால், அவர் சொல்லுவதை நம்புகிறேன்" என்றார்.

உடனே வால்டேர் "அவர் போட்டதை நான் பார்த்தேன். ஆனால், அதை நான் நம்பவில்லை" என்றார்.

அதாவது, "அவர் போடவேயில்லை : போட்டதாகச் சொல்வது சுத்தப் பொய்" என்று அர்த்தம்!

# ஜாலவித்தைக்காரர்கள் நம்பாத அதிசயம்

## —— இந்த இந்தியன் எப்படிச் செய்கிறான்?



1. "சாதாரணக் கயிறுதான்; பார்த்துக் கொள்ளுங்கள்" என்று குழந்தைகளிடம் காட்டுகிறான்.



2. கயிற்றைப் பிரித்து வீசிக்கொண்டே, ஏதோ மந்திரத்தை முணுமுணுக்கிறான்.



3. சற்று நேரத்துக்கெல்லாம் கயிறு மரம் போல் விறைத்து நிற்கிறது.

இது மகா ஆச்சர்யமானதோர் இந்திய ஜாலவித்தை. இதை நேரில் காண வேண்டுமென்ற ஆசையால், ஹௌடினி, தர்ஸ்டன் என்ற உலகப் பிரசித்தரான இரு மேனாட்டு ஜாலவித்தைக்காரர்களும் இந்தியாவுக்கு வந்தார்கள்; பல மாதங்கள் தங்கினார்கள். இந்த வித்தையையோ, இந்த வித்தையைப் பார்த்தவர்களையோ, அவ்விருவரும் எங்கும் காண முடியவில்லை! ஆனால், யுத்தத்துக்கு முன்னே, ஜெர்மனியில் இந்த வித்தையைச் செய்த ஓர் இந்தியனின் படங்கள் இதோ இருக்கின்றன. இவன் யார்? இப்போது எங்கே இருக்கிறான்? அதுதான் தெரியவில்லை.

இந்த வித்தை என்ன தெரியுமா? வித்தையாடி ஒரு கயிற்றை அந்தரத்தில் எறிவான். ஒரு பிடிப்புமின்றி அது ஆகாசத்திலே விறைத்து நிற்கும். ஒரு குழந்தை அதன் மீது ஏறி மறைந்துவிடும்.



4. கயிற்றின் மேல் ஒரு குழந்தை ஏறி இறங்குகிறது. கடைசியில் கயிறு தானாய் விழுந்துவிடுகிறது.

பின்னால் ஒரு வாளை ஏந்திக்கொண்டு, மந்திரவாதியும் கயிற்றின் மீதேறி மறைவான். பிறகு, குழந்தையின் உடலும் துண்டு துண்டாய்க் கீழே விழும். ரத்தம் தோய்ந்த வாளுடன் மந்திரவாதி திரும்பி வருவான். பின்னர், கயிற்றை ஒரு தட்டுத் தட்டுவான். அது விழுந்து விடும். குழந்தையின் சதைத் துண்டுகளை, அவன் ஒன்று சேர்ப்பான். அது உயிர் பெற்றெழும். இந்த வித்தையைச் செய்வோருக்குப் பத்தாயிரம் டாலர் இனும் அளிப்பதாக அமெரிக்க ஜால வித்தைக்காரர்களும், இருபத்தையாயிரம் டாலர் பரிசளிப்பதாகப் பிரிட்டிஷ் மந்திரவாதிகளும் விளம்பரம் செய்திருக்கிறார்கள். யாரும் இது வரை அவற்றைப்பெற முன் வரவில்லை. இந்த வித்தை மறைந்து விட்டதா? அல்லது எல்லாம் ஒரே புரளியா?

ராக்குடியும், ஜிமிக்கியும், ஜடைக் கோஸ்தும் போச்சு ;
ஆனால், பிரதிநிதிகள் வைத்து விட்டுத்தான் !

# மறைந்த நகைகள்

கோழி முதலில் உண்டாயிற்று, முட்டை முதலில் உண்டாயிற்று? முதலிலே உண்டானது வித்தா, அல்லது மரமா ?—இந்தக் கேள்விகளுக்கு ஆராய்ச்சிக்காரர்கள் யாராவது ஒருவேளை சரியான பதில் கண்டு பிடித்தாலும் கண்டு பிடித்து விடக்கூடும். ஆனால், 'கடவுள் முதலில் ஸ்திரீயை உண்டாக்கினாரா, நகையை உண்டாக்கினாரா ?' என்ற கேள்விக்கு மாத்திரம் அந்தக் கடவுளேதான் பதில் சொல்ல வேண்டும் ; வேறு யாராலும் திருப்திகரமான விடை யளிக்க முடியாது.

மிகப் பழைய காலம் முதற்கொண்டே ஸ்திரீகள் நகை போட்டுக்கொண்டு வருகிறார்கள். ஒரே ஒரு வித்தியாசம் : அதாவது, அடிக்கடி 'பாஷன்' மாறி வருகிறது. கால் முதல் தலை வரையில் நகைகள் இல்லாவிட்டால், ஒரு ஸ்திரீ மற்றவர்களின் முன்னிலையில் தன்னை ஒரு படி மட்டமாகவே நினைத்து வந்த காலம் ஒன்றிருந்தது. இப்போதோ வென்றால், நகைகளை எவ்வளவுக் கெவ்வளவு குறைவாகப் போட்டுக்கொண்டு—அடியோடு கை விடுவதல்ல—'பிறந்த மேனிக்கு' இருக்க முடியுமோ, அவ்வளவுக் கவ்வளவு நாகரிகமாகும் !

தலைக்கு 'ராக்குடி' 'திருகு வில்லை' 'ஜடைக்கொஸ்து' - இவையெல்லாம் முன்காலத்துச் சங்கதிகள். பச்சை, சிவப்பு முதலிய கற்கள் இழைத்த திருகுவில்லைஅல்லது ராக்குடியின் நடுவிலே அன்னமோ, தாமரைப்பூவோ சித்தரித் திருந்தால்தான், அவைகளுக்கு மதிப்பு. நாகரிகம் முன்னேற முன்னேற, சிவப்புக்கல் திருகுவில்லை, வைரக்கல் திருகுவில்லையாக மாறி, கடைசியிலே இப்போது 'கொண்டை ஊசி'க்குத் தன் இடத்தைச் சமர்ப்பணம் செய்து விட்டது. சாதாரணத் தேங்காய் எண்ணெயைத் தடவித் தலைவாரிப் பின்னிச் சிறிதளவு புஷ்பங்களைச் சொருகி நுனியில் ஜடைக் கொஸ்தைத் தொங்கவிட்டுக் கொள்ளும் பெண்கள் இக்காலத்தில் இல்லை. 'ஹேர் ஆயில்' தடவிக் காதையும் சேர்த்து வாரி, வைக்கோல் போர்போல டிஸம்பர், ஜனவரி, அக்டோபர் முதலிய பூக்களை வைத்து, அரைப் பின்னல் பின்னிக்கொண்டு, அதிலேயே ஒரு 'ரிப்ப'னைச் சுருக்குப் போட்டுக் கொள்வதுதான் தற்கால அழகு.

காதில் எட்டுக் கல் தோடும், 'மாட்டலும்' போய், நாலு கல் புஷ்பராகத் தோடும், லோலக்கும் வந்திருக்கின்றன. கொஞ்ச நாட்களுக்கு முன் டிராமில் ஒரு பெண்ணைப் பார்த்து, என்னிடம் ஒருவர், "அதோ அந்தப் பெண் ஹிட்லரின் ஐந்தாம் படை போலிருக்கு" என்றார். "ஏன் ?"

## கே. சீனிவாஸன்

என்று நான் கேட்டேன். "காதிலே பார், ஸ்வஸ்திகா லோலக்கு !" என்றார் அவர். வைர லோலக்கு, பொன் லோலக்கு, சாதாரணக் கல் லோலக்கு—இன்னும் பல விதம் இந்த லோலக்கிலே. கொஞ்ச காலத்துக்குப் பிறகு, பெண்கள் எல்லாரும் கிளிஞ்சல்களையும், கூழாங் கற்களையும், தங்கத்திலே சுற்றிக் காதில் தொங்கவிட்டுக் கொண்டாலும், நாம் ஆச்சரியப்படுவதற் கில்லை.

"ராஜிக்கு ரெண்டு மூக்கையுங் குத்தி ஈர்க்கைப் போட்டு வை, துந்து போகாமே. அப்புறம் மூக்குத்தியும் புல்லாக்கும் வாங்கலாம்" என்று பாட்டி சொன்னால், "சரி, சரி, பாட்டி ! நான் என்ன வண்டி மாடா ? மூக்கணாங்கயிறு மாதிரி என்ன புல்லாக்கு ! இந்தக் காலத்திலே எல்லாரும் ஒரு மூக்குத்தான் குத்திக்கிறா. அதுவும் வைரத்திலே பேஸரி வாங்கித் தரதுன்னாத்தான்" என்று சொல்லிவிட்டுக் கிளம்பி விடுகிறாள் பேத்தி.

"கழுத்துக் கொள்ளாமல் காறையும், கடியாரச் சங்கிலியும், காசுமாலையும், பவள மாலையும் பூட்டிக்கொண்டிருந்தாள் ஜட்ஜி ஸம்ஸாரம்" என்று யாராவது சொன்னால், 'லேடீஸ் கிளப்' முழுதும் 'கொல்' லென்று சிரிக்கிறார்கள். இரண்டு வடத்திலிருந்து எட்டு வடம் வரையில், பழைய காலத்தில் சங்கிலி போட்டுக் கொள்வது வழக்கம். இப்போதோ நூல் போன்ற சங்கிலியில் ஒரு 'பெண்டண்ட்' கோத்துப் போட்டுக் கொள்கிறார்கள். ஒரு சங்கிலிக்கு இரண்டாவது சங்கிலி போட்டுக் கொண்டால், 'பூம் பூம் மாட்டுக்கு மணி கட்டினாப்போல' இருக்கிறதாம் ! "நெக்லேஸாம்........என்னமோ காசைக் கொண்டுபோய்க் கரியாய் அடிக்கிறதுகள்" என்று பாட்டி முணுமுணுத்தால், யார் கேட்கிறார்கள் ?

"திண்டாட்டமா ரெட்ட வடம் சங்கிலி—புலிநகம் கோத்தது—ஒண்ணு உன் அகமுடையாளுக்கு வாங்கணும்டா" என்கிறாள் கோபுவின் தாயார். "ஐயையோ ! நான் சன்யாசம் வாங்கிக்கொண்டு விடுகிறேன் !" என்கிறான் கோபு. ஏன் ? "அவள் சாதாரணமாகத் தன் நகத்தால் கிள்ளினாலே எனக்குப் பிராணன் போகிறது...புலி நகத்தை வேறே வாங்கிக் கொடுத்து விட்டால்...... அப்புறம்......உம்" என்கிறான் பையன்.

வங்கியும் நாகொத்தும் அநேகமாக மறைந்து விட்டன. இரண்டு கைகளிலும் காப்பு, கொலுஸு, ஜோடி ஜோடியாக வளையல்கள்—இவைகளையெல்லாம் கண்ணாலும் காண முடிவதில்லை. ஒன்றிரண்டு வளையல் ; இடது கையில் கைக்கடியாரம், ஒரு தங்கச் சங்கிலி அல்லது 'ஸ்ட்ராப்'பில் கோத்தது—இதுதான் நாகரிகம். இதை விட்டு, ஜெயில் கைதிகளுக்கு விலங்கு போடறாப்லே, என்ன காப்பு வேண்டியிருக்கு !

"ஐயோ! நான் மாட்டேன். கல்யாணப் பெண்ணுட்டமா எனக்கு ஒட்டியாணம் வேண்டாம்" என்று கத்துகிருள் நவ நாகரிக நங்கை. 'ஸிம்பிளா' ஒரு 'பெல்ட்' போதுமாம்! காலில் காப்பும் கொலுஸும் போட்டுக் கொண்டு குழந்தைகள் 'ஜில்க், ஜில்க்'கென்று நடந்து வருவதைப் பார்த்தால், முன்னுளில் திருஷ்டி விழுந்து விடும். நகையைப் போட்டுக் கழற்றி வைத்துவிட்டு, "பார்த்தவா கண் பட படன்னு வெடிக்கணும்; முழிச்சவா கண் முளகாய் போல் வெடிக்கணும்; கரிச்சவா கண் கடுகுபோல வெடிக்கணும்" என்று சுற்றிப் போடுவார்கள். இந்தக் காலத்திலோ காப்பு ஏது, கொலுஸு ஏது? அவைகளுக்குப் பதிலாகத் தான், 'லேஸ்' வைத்துத் தைத்த 'ஸ்லிப்பர்'களும் 'பூட்ஸும்' வந்திருக்கின்றனவே?

ஐயையோ! உருட்டா? ஊஹூம்.........வேண்டாம்; வேண்டவே வேண்டாம். அதையும் மனுஷ்யாள் போட்டுக் கொள்வார்களோ!

இப்படியாக, பல நகைகள் மறைந்துவிட்டன. அவற்றின் மறைவைப்பற்றி வருந்துவோர் யார்? அவற்றுக்கொரு ஞாபகார்த்தச் சின்னமாவது கட்டுவோர்தான் எவருண்டு?

---

இந்த யுத்தத்திலே எங்கே போர் வீரர் இருக்கிருர்களோ அங்கே தேநீர் மோட்டார்களும் இருக்கின்றனவாம். சூடான தேத் தண்ணீரை விற்பனை செய்வதுதான் இவற்றின் வேலை. பிரிட்டனில் இப்போது போர்வீரர்களிடம் இம் மாதிரி 400 மோட்டார்க்கார்கள் தேநீர் வியாபாரம் செய்து கொண்டு திரிகின்றன.

* *

ஒரு ஸெக்கண்ட் நேரத்தில், 1,20,000 படங்கள் எடுத்துவிடக் கூடிய அபூர்வமான காமிரா ஒன்று அமெரிக்காவிலே சமீபத்தில் செய்யப்பட்டுள்ளது.

* *

டாக்டர் ஜான்ஸன் என்ற பிரபல ஆங்கில ஆசிரியர் பார்லிமென்ட் பிரசங்கங்களை எழுதுவதுண்டாம். ஆனல், மற்ற நிருபர்களைப் போல், பிரசங்கிகள் சொன்னதை அவர் எழுதுவதில்லை. அவர்கள் என்ன சொல்லியிருக்க வேண்டுமென்று தாம் நினைத்தாரோ அதைத்தான் எழுதுவாராம்!

இந்திய உபநிஷத்துக்களைப் படித்து, இந்தியக் கவிகளிடம் பேரன்பு கொண்ட ஐரிஷ் கவிஞர்.

# தாகூரை உலகறியச் செய்த ஏட்ஸ்

[வி. ஆர். எம். செட்டியார், பி. ஏ.]

ஏட்ஸ் ஐரிஷ் கவி பாடுவதில் அதிகத் திறமை யுடையவர். தம்மை ஒலியலைக் கைதியாகவே அல்லும் பகலும் கனவு காண்பார். கீதக் குரலிலே சிக்குண்டு, கீதமே கொட்டிக்கொண் டிருப்பார். வீணையில் உறங்கி விழிக்கும் இன்னிசைபோல், அவருடைய இதய பரவசத்தில் சொற்கள் உறங்கி விழிக்கும். அவருடைய முகம் அருள் நிறைந்தது. கவிதையின் அருட்சோபை அவருடைய முகத்திலும் கண்களிலும் மின்னி மின்னி வட்டமிடும்.

ஐரிஷ் இலக்கிய மறுமலர்ச்சிக்குக் காரணமான ஏட்ஸ், டப்ளினில் 1865-ஆம் ஆண்டு பிறந்தார். ஒன்பதாவது வயதில் தமது பெற்றோர்களுடன் லண்டனுக்குச் சென்ருர். ஹாமர்ஸ்மித்தில் உள்ள கொடால்பின் பள்ளிக்கூடத்தில் முதலில் படித்தார். அவருடைய தகப்பனர் ஜான் பி. ஏட்ஸ் சித்திரக் கலை நிபுணர். தாய் ஸ்லைகோ குடும்பத்தைச் சேர்ந்தவள். ஏட்ஸ் டப்ளினுக்குத் திரும்பி வந்ததும், ஹார்க்கோர்ட் வீதியிலுள்ள ஹைஸ்கூலில் படித்து, அதன் பின் மெட்ரோபாலிடன் கலைக் கலா சாலையில் ரஸ்ஸலுடன் துணை மாணுக்கனகப் படித்து வந்தார். ரஸ்ஸலுடன் நெருங்கிப் பழகியதில், அவருடைய ஆப்த நண்பனக மாறிவிட்டார். லண்டனிலும் டப்ளினிலும் அடிக்கடி வசித்து வந்தாலும், தாயின் ஊராகிய ஸ்லைகோவிலே அவருடைய கற்பனை வளர்ந்து கொழுந்துவிட் டெரிந்தது. 1891-ஆம் ஆண்டு அவர் வெளியிட்ட நாவலான 'ஜான் ஷெர்மன்' ஸ்லைகோ கிராமத்தின் வர்ணனையும் லட்சணங்களும் நிறைந்திருக்கிறது.

அவரது 'இன்னிஸ்ப்ரீ' என்ற பாட்டு, நிறைந்த கீதச் சுழற்சி யுள்ளது. சொற்கள் - சின்னஞ் சிறு சொற்கள் - வளைந்து வளைந்து வட்டமிட்டு, உண்மையைக் கொட்டி முழக்கிப் பாடி வருகின்றன. அதிலே இயற்கையின் இதய ஒலி ரீங்கார மிடுகிறது. சாந்தி நிறைந்த ஏரியின் அமைதிக் குரல் ஏட்ஸின் காதில் இன்பத் தேனைப் பொழிகிறது. ஏரி அலையின் மர்மத்தை, கவியின் இதய கீத அலை தொட்டுக் கொஞ்சுகிறது.

நாடக சிருஷ்டியே ஏட்ஸின் கலை யுள்ளத்தை அதிகமாய்க் கவர்ந்தது. ஐரிஷ் தேச முன்னேற்றத்தை ஓம்பவும் நாடகக்கலையை வளர்க்கவும், அவர் அநேக நாடகங்கள் எழுதி யிருக்கிருர். பல மன நிலை, குண நிலைகள் பற்றிய தத்துவங்களை விளக்கும் நோக்கத்துடன், பற்பல நாடகங்கள் எழுதி யிருக்கிருர் ஐரிஷ் நாடகமேடை நிபுணர் ஏட்ஸ்.

ஏட்ஸின் நடை ஆரம்பத்தில் கொஞ்சம் தெளிவு குன்றி யிருந்தது. கலை வளர வளர, எண்ணத்தின் கூர்மை மொழிக் கூர்மையாக மாறிவிட்டது. அனுபவ முதிர்ச்சியில், அவருடைய இன் சொற்கள் பாடிக் குதிக்கவும் ஆரம்பித்துவிட்டன. சொற்கள் எல்லாம் மொழி விந்தையாக மாறிவிட்டன. எளிமையே இனிமை; இனிமையே உண்மை—இந்த அனுபவத்தைக் கடைசியிலே அவர் பெற்றுவிட்டார்.

இவர் நமது வங்காளக் கவி ரவீந்திரநாத தாகூரை நன்கு உணர்ந்து அனுபவித்தவர்; ரவீந்திரரின் 'கீதாஞ்சலி' என்ற அருள் நிறைந்த நூலை ஆங்கில மொழி பெயர்ப்பில் லண்டனில் சதா படித்து அனுபவித்துத் தாகூரை உலகறியச் செய்ய முயற்சித்த பேரன்பர் கவிஞர் ஏட்ஸ். கீதாஞ்சலிக்கு ஒரு முன்னுரையையும் இவரே அன்புடன் எழுதியிருக்கிருர். 'கீதாஞ்சலி' அழகும் உண்மையும் நிறைந்த நூலென்றும், உலகத்தில் எவராலும் எழுத முடியாத அருமையான நூல் என்றும், அதுவே

இந்தியாவின் கலைப் பொக்கிஷம் என்றும், நீதிப் பொக்கிஷம் என்றும், மூல வங்காளியிலே தாகூரின் கீத அலை அடிக்கிறதென்றும், ஆங்கில மொழி பெயர்ப்பு வசன மொழி பெயர்ப் பென்றும், அருமையாக, நிறைந்த அன்புடனும் ஆர்வத்துடனும் இவர் எடுத்துக் கூறுகிறார்.

ஏட்ஸ் ஓர் உண்மைக் கவி. அவருடைய உள்ள நிலையே இதய ரீங்காரமாக ஓசை இன்பத்தை எழுப்புகிறது. அவர் எழுதும் முறையே அலாதியானது. வேறு எவராலும் நகல்செய்ய முடியாத உயர்ந்த மனோதத்துவம் வாய்ந்தது அவர் கவிதை. தாம் எழுதும் நடை யழகை அவர் கவனிப்பதில்லை; ஆத்ம பரிபூர்ணத்தை உண்டாக்கும் இதய சாந்தியையே அவருடைய கவிதா விமர்சனம் மொழியிலே நிலைக்கச் செய்கிறது. அவரது இதயச் சுடரே மொழி யோவியமாக வளர்கிறது. ஒவ்வொரு சொல்லிலும், அவர் தம்மையே கண்டு, தம்மையே அறிந்து, தம்மையே சிருஷ்டிக்கிறார். ஆரம்ப காலத்தில் அவர் எழுதிய கவிகளில் சில குறைகள் தோன்றினாலும், மன முதிர்ச்சியில் எழுந்து பின் வந்த பாசுரங்களில், இதயச் சித்திரம் இதய ரீங்காரமாகவே ஓசை யிடுகிறது. இதுவே உண்மை ததும்பும் இதய ஒலி; இதுவே உண்மை யொலிக்கும் இதய ஒளியுங்கூட. மொழியின் சிறகடிப்பில், கடவுள் காதலும் இன்ப ஓசையை எழுப்புகிறது.

ஏட்ஸ் எழுதிய ஐரிஷ் நாடகங்களில், அவருடைய மர்ம நடை சிலருக்கு ஐர்லாந்தில் விளங்கவில்லை. பொது ஜனங்கள் புரிந்து கொள்ளக்கூடிய தெளிந்த சாதாரண நடையில் அவர் எழுதாததே அவரது பெருங்குறை. சிறு சொற்களிலும், உள் அர்த்தம் நிறைந்து மர்ம நிலை யடைந்துவிட்டது. ஆயினும், அவரது நாடகங்கள், நடிகக் கலையைத் தாங்கிய ஓவிய சிருஷ்டிகளாகும்.

1920-ஆம்௵ ஓர் இரவு ஆக்ஸ்போர்டில் நமது இந்தியக் கவி ஹரீந்திரநாத் சட்டோபாத்தியாயாவை, ஐரிஷ் கவி ஏட்ஸ் விருந்துக் கழைத்தார். மேல் மாடிக்கு ஏறிச் செல்லும் படிகளில் வரிசையாக ஏராளமான மெழுகு திரிகளை ஏற்றி வைத்துவிட்டு, ஏட்ஸ் பாட ஆரம்பித்தார்; அவருடைய அறை ஒளி நிறைந்து ஜோதி பெருக்கியது; மெழுகு திரிகள் மணமாகாத கன்னிப்பெண்களின் கூட்டம் போல், அழகும் சுடரும் வீசிக் கொண்டிருந்தன. இதை ஹரீன் அனுபவித்துக் கொண்டிருக்கும்போது, காதல் பாட்டு ஒன்றை ஏட்ஸ் பாடி முழக்கினார்; அது ஹரீனின் இசைக் காதை நிறைத்து வழிந்தோடியது. ஏட்ஸின் இதயத்தில் காவிய உணர்ச்சி எழுந்து கூத்திடும் போது, அவர் பொழியும் இன்னிசைக்கடலில், வெளி உலக இரைச்சல் ஒன்றும் செவிப் படுவதில்லை; உள்ளோசை யின்பத்தின் ஆழ்ந்த அலையில் அவர் மூழ்கி விடுகிறார்.

இந்திய உபநிஷத்துக்களையும் இதர வேதாந்த நூல்களையும் நன்கு கற்றவர் ஏட்ஸ்; எல்லா வகையிலும் அறிவு நிறைந்தவர்; அத்துடன் இயற்கைப் புலவர், அருட் கவி, உணர்ச்சி நிறைந்த ஆத்மானுபவக் கவி. சிந்தனை தேக்கிய முகத்துடன், உலக நிலையை அவர் ஆராய்ந்து வந்தார். 1923-ஆம்௵ தமது 58-வது வயதில் நோபல் பரிசு பெற்று உலக மதிப்பில் உயர்ந்தார்.

1939-ஆம்௵ ஜனவரி௴ 29உ ஏட்ஸ் உயிர் நீத்தார். அப்போது அவருக்கு வயது 74. அவர் மறைவு காவிய உலகத்துக்கே நஷ்டமாகும்; அந்த நஷ்டத்தில் பெரும் பங்கு நமக்கு முரியதுதான்.

## அழகு எங்கே இருக்கிறது?

ஒரு பொருளுக்கு அழகு உண்டாயின் அவ்வழகு அதனுள்ளே அமைந்திருக்கிறது. பிறர் போற்றுவதனால் அது உண்டாவதில்லை. பிறர் கண்டு வியப்பதால் அதன் அழகு அதிகமாவது மில்லை, குறைவது மில்லை. புலனுக்குத் தோற்றமாகும் பொருள்களின் வெளி அழகே அவ்விதமிருக்க, பேரழகு கொண்ட உண்மைப் பொருள்களாகிய தருமம், நீதி, சத்தியம், தயை, அடக்கம் இவைகளுக்குப் பிறருடைய புகழ்ச்சி வேண்டியதில்லை. இந்த நற்குணங்களில் ஏதாவது பிறர் புகழ்வதால் அழகாகுமா? பிறர் குறை கூறுவதால் பழுது படுமா? அழகிய மரகத மணியை ஒருவன் புகழாமல் போனால், அதன் அழகு குறைந்து விடுமா? தங்கம், தந்தம், பட்டு அல்லது யாழ், வாள், புஷ்பம், செடி முதலியவைகளுக்கு இப்படித்தானே அதனதன் அழகு அதனதனுள்ளேயே அமைந்திருக்கிறது?

—மார்க்கஸ் ஒளரேலியஸ்

## மாறாத நாகரிகம்!



சிந்துவில் இன்னும் உபயோகத்திலிருந்துவரும் ஒரு கட்டை வண்டி. இதன் சக்கரங்கள், தேர் உருளைகள் மாதிரி முற்றிலும் கெட்டிக் கட்டையாயிருக்கின்றன. மொஹெஞ்சதாரோவில் 5,000 வருஷங்களுக்கு முன் இதே போன்ற சக்கரங்கள்தான் உபயோகத்தில் இருந்து வந்தனவாம்.

தொடர் கதை:




காசிநாதன் அதிகாலை நான்கு மணிக்கே எழுந்து விடுவான். உடனே குளித்துப் பூஜை செய்வான். பிறகு பண்டித தனஞ்சய பட்டாச்சார்யாவின் பள்ளிக் கூடத்துத் திண்ணையில் போய் உட்கார்ந்து கொள்வான். அப்படி உட்கார்ந்து, தர்சன சாஸ்திரத்தின் சூத்திரங்களை உருப்போட ஆரம்பித்து விட்டானானால், அப்புறம் அவனுக்கு வெளி உலகத்துச் சிந்தனையே யிருக்காது. அழகிய நெற்றியும் திடகாத்திரமான சரீரமும் படைத்த காசிநாதன், தர்சன சாஸ்திரத்தின் அடர்ந்த கானகத்தில் புகுந்த பிறகு, அதிலேயே வளைந்து வளைந்து சுற்றிக் கொண்டிருப்பான். அவனை இந்நிலையில் காணும் ஜனங்கள் விதம் விதமாகப் பேசிக்கொள்வார்கள்.

**சரத்சந்திர சட்டர்ஜீ**
**எழுதியது**

''தனது தந்தையைப் போலவே இவனும் ஒரு வித்வான் ஆவான்'' என்று ஒருவர் சொல்லுவார். ''படித்துப் படித்துத் தகப்பன் மாதிரி தானும் ஒரு பைத்தியமாகாதிருக்கட்டும்'' என்பார் இன்னொருவர். 'அவன் பைத்தியம் ஆகிவிடுவான்' என்று சந்தேகப்பட்டவர்களில், அவனுடைய மாமாவும் ஒருவர். அவர் அடிக்கடி, ''அப்பா! நீயோ ஏழைப் பையன்; இவ்வளவு படித்து என்ன செய்யப் போகிறாய்? இதுவரையிலும் நீ படித்திருக்கும் படிப்புக்கே எப்படியும் உனக்கு ஒரு பிடி அரிசியும் ஒரு முழத் துண்டும், சுலபமாகக் கிடைத்து விடும். இத்தனை படித்து விட்டுக் கடைசியில் நீயும் காலஞ்சென்ற வந்யோபாத்யாயாவைப் போல, வீட்டின் ஒரு மூலையிலே உட்கார்ந்து, தலையாட்டிக் கொண்டிருக்கப் போகிறாயா? இப்போது இருக்கிற துளிச் சொத்தும் அப்பொழுது போய்விடும்'' என்று சொல்வது வழக்கம்.

மாமாவின் இந்த உபதேசத்தைக் காசிநாதன் ஒரு காதால் வாங்கி, மறு காதால் விட்டு விட்டான்.

பைத்தியமாகிவிடுவானோ என்ற பயத்தினால், மாமா அவனை மிரட்டுவார். வீட்டு வேலைகள் ஒன்றும் செய்யாததால், மாமி அவனைக் கோபிப்பாள். வியாகரணத்திலே அவன் விற்பன்னனாயிருப்பதால், அவனை விட வயதில் மூத்தவர்களான மாமாவின் புதல்வர்கள் அவனைக் கேலி செய்வார்கள்.

ஆனால், காசிநாதன் இவற்றையெல்லாம் பொறுத்துக் கொண்டு, ஒன்றையும் காதில் போட்டுக் கொள்ளாமலிருந்தான்.

என்ன நடந்தாலும், பலன் ஒன்று தான். தான் இதுவரையில் தினசரி என்ன செய்து வந்தானோ அதையே தான் இன்னும் அவன் செய்து வந்தான். சாயங்காலம் வெளியிலே உல்லாசமாக உலாவுவான். சில சமயம் ஆற்றங்கரையின் அரசமரத் தடியில் உட்கார்ந்து கொண்டு அஸ்தமன சூர்யனின் ரத்தச் சிவப்பு எப்படி ஆகாயத்திலிருந்து மறைகிறதென்று பார்த்துக்கொண்டிருப்பான். சில சமயம் கிராமத்து ஜமீன்தார் வீட்டுச் சிவன் கோவிலுக்குச் சென்று, அங்கே செய்துள்ள தீபாலங்காரத்தைப் பாதி மூடிய கண்களுடன் பார்த்துக் களிப்பான். சில சமயம் எங்குமே போகாமல், மாமாவின் வீட்டுக்கூடத்தில் ஓர் இருண்ட மூலையில் ஆசனம் விரித்து மௌனமாக உட்கார்ந்து விடுவான்.

உலகத்திலே அவனுக்கு ஒரு வேலையோ, உத்தேசமோ, இச்சையோ எதுவுமே இல்லாதது போல்தான் இருக்கும் அவனது நடத்தைகள். பன்னிரண்டாவது வயதிலேயே அவனது தந்தை இறந்து விட்டார். இந்த ஆறு வருஷங்களும் தன் மாமாவின் வீட்டிலே இவ்விதம் அவன் வளர்ந்து வருகிறான். இதுவரை என்ன செய்தோம், இப்போது என்ன செய்கிறோம், இனி என்ன செய்யப்போகிறோம் என்பதையெல்லாம் அவன் சிந்திப்பதேயில்லை. எப்பொழுதும் அவனுக்கு இவ்விதம்தான் நாள் கழிகிறது.

**ஆர். ஷண்முகசுந்தரம்**
**மொழிபெயர்த்தது**

''எப்பொழுதும் வீட்டிலே இரண்டு வேளையும் அதட்டலும் மிரட்டலுமாய்ச் சாப்பிட்டுக் கொண்டேயிருக்கலாம்; எங்கும் போக வேண்டியதில்லை, ஒன்றும் செய்ய வேண்டியதில்லை'' என்றே அவன் நினைத்துக் கொண்டிருந்தான். அவனுடைய அந்த அமைதியான இருளடைந்த மூலை எப்பொழுதும் அவன் ஆளுகையில்தான் இருந்தது. யாரும் அதைப் பிடித்துக் கொள்ள வருவதில்லை; 'தள்ளி வேறொரு இடத்தில் உட்கார்' என்று அவனை எவரும் சொன்னதும் இல்லை. தெருவிலுள்ள சில மனிதர்கள் இரக்கமுற்று அவனைக் கூப்பிட்டு, ''காசிநாதா! இப்படியே எப்போதும் ஒருவர் வாழமுடியாது; நீயும் அப்படித்தான். ஏதாவது காரியம் செய்'' என்று சொல்வது வழக்

கம். காசிநாதன் ஒன்றும் பதில் அளிப்பதில்லை. 'என்ன செய்வது?' என்று மனதுக்குள் தானே கேட்டுக் கொள்வான். இவ்விதம் காசிநாதனின் நாட்கள் கழிந்து கொண்டிருந்தன.

## அத்தியாயம் 2

அந்தக் கிராமத்து ஜமீன்தாரின் பெயர் பிரியநாத முகோபாத்யாயா. பிரியநாத பாபு மிக உயர்ந்த குலத்தில் பிறந்தவர்; பெரும் பணக்காரர். தாம் இவ்வளவு பெரிய மனிதராயிருந்தும் கூட, குல மரியாதையைக் காப்பாற்றக் கூடிய சர்வகுண சம்பன்னனை ஒரு வரன் தமது மகளுக்குக் கிடைக்காமல் போகவே, அவருக்குத் தமது உயர்குலத்தின் மேலேயே எரிச்சல் உண்டாயிற்று! மனைவியிடம் இதை எப்பொழுது சொன்னாலும், அவள், "எனக்கு ஒரே ஒரு பெண்தான் இருக்கிறாள். நாம் உயர் குலத்தில் பிறந்து, என்ன பிரயோஜனம்?" என்பாள். அவருடைய குருதேவரும் அதே கிராமத்தில் தான் வசித்து வந்தார். அவரிடம் கேட்கவே, அவர் "ஹரி, ஹரி! இம்மாதிரியும் எங்கேயாவது உண்டா? உனக்குப் பணத்துக்கொன்றும் குறைவில்லை. உயர்ந்த வம்சத்தில் உதித்த யாராவது ஒரு ஏழைக்கு அவளைக் கன்னிகாதானம் செய்து கொடுத்து, மாப்பிள்ளையையும் பெண்ணையும் வீட்டிலேயே வைத்துக் கொள். அதுதான் பார்ப்பதற்கு நன்றாயிருக்கும். எவ்வளவு பெரிய வம்சம், எவ்வளவு உயர்ந்த குலம்! என்னவானாலும் இதன் பெருமை குறையலாமா?" என்றார்.

பிரியநாத பாபு வீட்டுக்கு வந்து இதைத் தமது மனைவியிடம் சொன்னார். அவள் மிகுந்த சந்தோஷத்துடன், "ஆம் அப்படியே செய்யுங்கள்; நான் உயிரோடிருக்கிறவரையிலும், கமலா என்னருகிலேயே இருக்கட்டும்" என்று, தன் சம்மதத்தைத் தெரிவித்தாள். இவ்விதம் உயர்குல ஏழைப் பையனுக்கு விவாகம் செய்து மகளையும் மருமகனையும் வீட்டிலேயே வைத்துக்கொள்வது என்ற எண்ணத்தை உறுதிப் படுத்திக் கொண்ட பிரியநாத பாபு, ஒரு நாள் பண்டித மதுசூதன முகோபாத்தியாயாவின் வீட்டை அடைந்தார். பண்டிதர் அப்பொழுது தமது எஜமானரின் வீட்டுக்கு நித்திய பூஜை செய்வதற்காகச் சென்றுகொண்டிருந்தார். திடீரென இவ்வளவு பெரிய ஜமீன்தார் வந்ததால், பண்டிதர் பெரிய சங்கடத்தில் ஆழ்ந்தார். ஜமீன்தாரை எங்கே உட்காரவைப்பது, எப்படி உபசரிப்பது என்று அந்த 'அப்பாவி'க்கு ஒன்றுமே தோன்றவில்லை.

மதுசூதனர் சங்கடப் படுகிறார் என்பதைப் பிரியநாதபாபு அறிந்து கொண்டார். அவர் சிரித்துக்கொண்டு, "உங்களிடத்தில் கொஞ்சம் ஜோலியிருக்கிறது. வாருங்கள், கொஞ்சம் உள்ளே போய் உட்காருவோம்" என்றார்.

"ஆஹா! வாருங்கள். ஆனால்—"

"ஆனால் கீனல் ஒன்று மில்லை—வாருங்கள், உட்கார்ந்து எல்லா விஷயமும் சொல்கிறேன்."

இரண்டு பேரும் வீட்டுக் கூடத்தில் சென்று உட்கார்ந்தார்கள். பிரியநாத பாபு, "உங்கள் மருமகன் எங்கே?" என்று கேட்டார்.

"எங்கேயாவது இருப்பான். பட்டாசார்யாவின் கலாசாலையில் படிக்கிறான்."

"கொஞ்சம் அவனைக் கூப்பிடுங்கள்."

"கூப்பிடுகிறேன். ஏதாவது முக்கியமான விஷயமோ?"

"ஆம், முக்கியமான விஷயந்தான்."

ஒரு விஷயமும் தெரியாத வெகுளியான அந்தப் பையனுடன் இவ்வளவு பெரிய ஜமீன்தாருக்கு என்ன காரியம் இருக்கமுடியும் என்பதை மதுசூதனர் எவ்வளவு யோசித்தும் ஊகிக்க முடியவில்லை! ஆனால், அவர் சிறிது பயந்து கொண்டு, "ஏதாவது குற்றம் செய்து விட்டானே?" என்று கேட்டார்.

"குற்றம் என்ன வந்தது?"

"பின்னே?"

பிரியநாத பாபு சிரித்து விட்டார்: "நான் அவனை எனது மாப்பிள்ளையாக்கிக் கொள்ளத் தீர்மானித்திருக்கிறேன். அந்த உறவிலே நீங்களும் எனக்குச் சொந்தம் ஆகி விட்டீர்கள்" என்று சொல்லி, கடகட வென்று நகைத்தார். அவர் எதை நினைத்து இப்படிச் சிரித்தார் என்பதைத் தாம் அறிந்திருந்தால், மதுசூதனர் மறுபடி ஒன்றும் சொல்லியிருக்க மாட்டார். பண்டிதர் ஆச்சரியத்தால் பிது பிது வென்று விழித்துக் கொண்டு, பாபுவை வெறித்துப் பார்க்கத் தொடங்கினார். சிறிது நேரத்துக் கப்புறம், "யாரை? காசிநாதனையா?" என்று கேட்டார்.

"ஆம்"

"எதற்காக?"

"இவ்வளவு நல்ல குலத்துப் பையன் எங்கே தேடியும் எனக்குக் கிடைக்கவில்லை. உங்களுக்கு இதில் ஏதாவது தடை உண்டோ?"

"தடையா! இது என் பாக்கியம் அல்லவா? ஆனால், அவன் பைத்தியமாயிற்றே!"

"பைத்தியமா? என்ன? நான் ஒரு பொழுதும் அப்படிக் கேள்விப்பட்ட தில்லையே?"

"அவனுடைய தகப்பனார் பைத்தியமாயிருந்தார்."

காசிநாதனின் தந்தையைப் பிரிய பாபுவுக்கு நன்றாய்த் தெரியும். அவரை அநேகர் பைத்தியமென்று சொன்னதும் அவருக்குத் தெரியும். பிரிய பாபு சிறிது நேரம் யோசித்து விட்டு, "பையனின் பெயர் என்ன?" என்று விசாரித்தார்.

"காசிநாத வந்யோபாத்யாயா."

"அவனைக் கூப்பிடுங்கள்—நான் பார்க்கிறேன்."

அப்படியே அவனை அழைத்து வர, மதுசூதனர் தமது சிறிய மகனை அனுப்பினார். அவன் போய், "காசிநாத அண்ணா!" என்று கூப்பிட்டான்.

காசிநாதன் நிமிர்ந்து பார்த்து, "ஏன்?" என்றான்.

"அப்பா கூப்பிடுகிறார்."

"ஏன்?"

"அது எனக்குத் தெரியாது. ஜமீன்தார் பாபு வந்திருக்கிறார். அவர் உன்னைக் கூட்டிவரச் சொன்னார்."

காசிநாதன் மெதுவாகப் புஸ்தகத்தை மூடி வைத்து

விட்டு, எழுந்து நடந்தான். அவன் வந்து இவர்களுக்கு எதிரில் உட்கார்ந்ததும், பிரிய பாபு அவனை மேலும் கீழும் உற்றுப் பார்த்துவிட்டு, "காசிநாதா! இந் நேரம் எங்கிருந்தாய் நீ?" என்று கேட்டார்.

"பட்டாசார்யாவின் பள்ளிக் கூடத்தில் படித்துக்கொண்டிருந்தேன்."

"நீ வியாகரணம் படித்திருக்கிருயா?"

காசிநாதன் தலையை அசைத்து, "ஆம், படித்திருக்கிறேன்" என்று பதில் அளித்தான்.

"இலக்கியம் படித்திருக்கிருயா?"

"ஏதோ கொஞ்சம் படித்திருக்கிறேன்."

"இப்பொழுது என்ன படிக்கிருய்?"

"காவ்யதர்சனம்"

"சரி, போய்ப் படி" என்று பிரிய பாபு சொன்னுர்.

**கா**சிநாதன் போய் விட்டான். தன்னை ஏன் அழைத்தார்கள், ஏன் போகச் சொல்லி விட்டார்கள் என்ற ஒன்றும் அவனுக்குத் தெரியாது; அதைப் பற்றி அவன் கவலைப்படவு மில்லை. பள்ளிக் கூடத்துக்குச் சென்று, மறுபடியும் புஸ்தகத்தை எடுத்து வைத்துக் கொண்டு நிம்மதியாய் முன் போலவே உட்கார்ந்து விட்டான்.

**அ**வன் சென்ற பிறகு, பிரிய பாபு, "உம், அவன் பைத்தியமென்றல்லவா நீங்கள் சொன்னீர்கள்?" என்ருர்.

மதுசூதனர், "இல்லை, அவன் பூராப் பைத்திய மல்ல. ஆனல், கொஞ்சம் விசித்திரமா யிருக்கிருன்; அதனல் ஊராரெல்லாம் அவனைப் பைத்தியமென்று சொல்கிருர்கள்" என்ருர்.

"அதெப்படி?"

"அவன் எப்பொழுதும் புத்தகமும் கையுமாகவே உட்கார்ந்து கொள்கிருன்; அல்லது தன் மனம் போனபடி அங்குமிங்கும் திரிகிருன். ஒரு விஷயத்திலும் ஒரு வேலையிலும் மனம் நிலைத்திருப்ப தில்லை—இதெல்லாம் கொஞ்சம் விநோதமா யில்லையா?"

"இவ்வளவு தானு? இன்னும் ஏதாவது செய்கிருனே?"

"ஆஹா! இன்னு மொன்றுண்டு. எப்பொழுதாவது வீட்டின் ஓர் இருண்ட மூலையில் மணிக்கணக்காகத் தனியே உட்கார்ந்து கொள்கிருன்."

பிரிய பாபு சிரித்துக் கொண்டு, "இன்னும் ஏதாவ துண்டோ?" என்ருர்.

இந்தச் சிரிப்பின் அர்த்தத்தை மதுசூதனர் கொஞ்சம் கொஞ்சம் அறிந்து கொண்டார். சிறிது மென்று விழுங்கிக் கொண்டே, "இல்லை, வேறு ஒன்று மில்லை" என்ருர்.

"ஆனல், வீட்டிலே கொஞ்சம் கேட்டுப் பாருங்கள். அவர்களுக்கும் சம்மதமானல், இந்த மாதத்திலேயே விவாகத்தை நடத்தி விடலாம்."

பண்டிதர் உள்ளே சென்று இங்கே நடந்ததை யெல்லாம் தமது மனைவியிடம் சொன்னுர். அதைக் கேட்ட அவள், ஆகாசத்திலிருந்து விழுந்தவள் போலத் திகைத்து விட்டாள். ஆச்சரியம் சிறிது குறைந்ததும், "காசி பிரிய பாபுவின் மாப்பிள்ளையா! உங்களுக் கொன்றும் பைத்திய மில்லையே?" என்று கேட்டாள்.

"இதில் பைத்தியம் என்ன வந்தது?"

"பைத்திய மில்லாமல் வேறே என்ன?"

"காசிநாதன் எவ்வளவு உயர்ந்த வம்சத்துப் பையன்? அதைக் கொஞ்சம் நினைத்துப் பார்."

பண்டிதரின் மனைவி பெருமூச்சு விட்டுக் கொண்டு, "இந்தச் சம்பந்தம் நம்ம ஹரிக்குக் கிடைக்கலாகாதா!" என்ருள். அது ஆகாத காரியம் என்பதை இருவரும் அறிந்தே யிருந்தார்கள்.

பண்டிதரும் ஒரு பெருமூச்சுடன், "உன் அபிப்பிராயம் என்ன?" என்று கேட்டார்.



"சரி, போய்ப் படி" என்று பிரிய பாபு சொன்னுர்.

பண்டிதரின் மனைவி துக்கத்தோடு, "என் அபிப்பிராயம் என்னவானாலென்ன?—கலியாண மாகட்டும்?" என்றாள்.

பண்டிதர் வெளியில் வந்து, ஒரு வறட்டுச் சிரிப்புடன், "அவள் என்ன ஆனந்தப்படுகிறாள் தெரியுமோ! அடங்கா ஆனந்தம்! அவள்தான் இப்போது காசியின் தாய். எனது தங்கை இறந்தபோது, அவனுக்கு இரண்டு வயசு கூடப் பூர்த்தியாக வில்லை. அப்போதிருந்து இவள்தான் அவனைக் காப்பாற்றி வந்து ஆளாக்கினாள். அதற்கப்புறம் மைத்துனரும் இறந்துவிட்டார். அதுமுதல் காசி இங்கேயே இருந்து வருகிறான்" என்றார்.

"எனக்கு அதெல்லாம் தெரியும். இன்றைக்கே எல்லா விஷயத்தையும் தீர்மானம் செய்து விடுங்கள்" என்றார் பிரிய பாபு.

"தீர்மானம் என்ன செய்ய வேண்டும்? தங்களுக்கு எப்பொழுது சௌகர்யமோ அப்பொழுது அழைத்தால், ஓடிவந்து ஆசீர்வாதம் செய்கிறேன்."

"அதல்ல நான் சொல்வது; குல வழக்கத்தைப் பற்றியே கேட்கிறேன்."

"அது விஷயமாக நான் என்ன தீர்மானம் செய்வது? தாங்கள் என்ன உத்திரவு இடுகிறீர்களோ, அப்படியே நடக்கிறேன். ஆனாலும், தங்களுடைய மாப்பிள்ளையின் மாமியிடம்—ஒரு விதத்தில் அவன் தாயும் அவள் தானே—கொஞ்சம் கலந்துகொள்வது நல்லது."

"ஆமாம், அவசியம் கலக்க வேண்டும். அதைத்தான் நானும் சொன்னேன்."

இதன் பிறகு, பையனுடைய மாமியின் அபிப்பிராயம் விசாரிக்கப்பட்டது. அவனது தாய்க்குச் சமதையான மாமி, ஓர் ஆயிரம் ரூபாய் ரொக்கம் வாங்காமல், காசிக்கு எவ்விதத்தும் விவாகம் செய்யமுடியாது என்று கண்டிப்பாய்க் கூறிவிட்டாள். கடைசியில் அப்படியேதான் நடந்தது. பிரிய பாபு அதற்கொன்றும் தடை சொல்லவில்லை. (தொடரும்.)

---

# மண் கூஜா

[எஸ். விசாலாக்ஷி]

அவரைப் பார்த்தால் முஸ்லீம் கனவானைப் போலிருந்தது. அந்தஸ்தாய் உடுப் பணிந்திருந்தார். நேரே வாடகை மோட்டார்க் கார்கள் நிற்கும் இடத்துக்குச் சென்றார். ஒரு பெரிய வண்டியினருகே போய், "இன்று பூராவும் சவாரி செய்ய என்ன வாடகை!" என்று அதன் டிரைவரை விசாரித்தார்.

"அது தூரத்தைப் பொறுத்தது" என்று டிரைவர் பதிலளித்தான்.

"நான் பெட்ரோல் போடுகிறேன். உனக்கு என்ன வாடகை கொடுக்கவேண்டும்?" என்று அந்தக் கனவான் கேட்டார்.

"பதினைந்து ரூபாய்" என்றான் டிரைவர்.

கனவான் பதில்பேசாமல் வண்டியில்ஏறி உட்கார்ந்துகொண்டு, பெட்ரோல் கடைக்கு வண்டியை ஓட்டச்சொன்னார். அவரிடம் ஒரே ஒரு மரத் தூக்கு மாத்திரம் இருந்தது. வேறு ஒரு சாமானும் இல்லை. பெட்ரோல் கடையை அடைந்தவுடன், இரண்டு காலன் பெட்ரோல் பிடித்துக் கொள்ளச் சொல்லி, அதற்குப் பணம் கொடுத்துவிட்டு, வண்டியை ஓட்டச் சொன்னார். வண்டி ஒரு சட்டிபானைக் கடைக்கெதிரில் போய்க்கொண்டிருந்த பொழுது, வண்டியை நிறுத்தி ஒரு மண் கூஜா வாங்கித் தம்மிடமிருந்த தூக்கில் வைத்துக்கொண்டார். பிறகு, மாம்பலத்தில் உள்ள ஒரு பங்களாவின் விலாசத்தைக் கூறி, அங்கே வண்டியை ஓட்டச் சொன்னார். வண்டி அந்தப் பங்களாவுக்குப் போய்ச்சேர்ந்த போது, பங்களாவின் கதவு சாத்தியிருந்தது.

கதவண்டை சென்று, கனவான் தட்டினார். பிறகு, கதவைத் திறந்துகொண்டு, உள்ளே போய், இரண்டு பெரிய துப்பட்டிகளைக் கொணர்ந்து வண்டியிலிருந்து கதவுக்கு மறைவு கட்டினார். கோஷா ஸ்திரீகள் வண்டியில் ஏறுவதாக, டிரைவருக்குச் சொன்னார். வண்டியின் ஜன்னல்களுக்கும் நீல வர்ணச் சீலைகள் கட்டப்பட்டன. டிரைவர் சாலைப் பக்கம் பார்த்துக்கொண்டு நின்றிருந்தான். காலடிச் சத்தத்திலிருந்து, மூன்று ஸ்திரீகள் வண்டியின் பின் பாகத்தில் ஏறியிருக்கக் கூடுமென்று ஊகித்தான்.

கனவான் கதவைச் சாத்தி, உள்புறம் தாழிட்டுக் கொள்ளும்படி உரக்கக் கூறிவிட்டு, டிரைவர் அருகில் தாம் வந்து உட்கார்ந்துகொண்டார். பெரிய வைர வியாபாரிகளான துந்துபி லால் கம்பெனிக்கு வண்டியை விடச் சொன்னார். சில நிமிஷங்களில் வண்டி அந்தக் கம்பெனியின் எதிரில் போய் நின்றது.

கனவான் உள்ளே சென்று, பல வைர நகைகளைப் பார்வையிட்டார். பிறகு, சுமார் 5000 ரூபாய் பெறுமானமுள்ள நகைகளைப் பொறுக்கிக்கொண்டு, "காரில் வந்திருக்கும் கோஷா ஸ்திரீகளுக்குக் காட்ட வேண்டும்; ஒரு குமாஸ்தாவிடம் நகைகளைக் கொடுத்தனுப்புங்கள்" என்று வியாபாரியை வேண்டினார். வியாபாரி ஒரு குமாஸ்தாவை, நகைப் பெட்டிகளுடன் வண்டியிடம் அனுப்பினார். நகைகளைக் குமாஸ்தாவிடமிருந்து கனவான் வாங்கி, திரையைச் சற்று நீக்கி, வண்டிக்குள்ளே நீட்டி, தாழ்ந்த குரலில் ஏதோ சொன்னார். பிற்பாடு மண்கூஜாவைக் கையிலெடுத்துக்கொண்டு, குமாஸ்தாவை நோக்கி, "நகைகளை ஸ்திரீகள் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள்; அதற்குள் நான் போய்க் கொஞ்சம் தண்ணீர் கொண்டு வருகிறேன். அருகில் எங்கே தண்ணீர்க் குழாய் இருக்கிறது?" என்று கேட்டார்.

சுமார் 100 கஜ தூரத்திலிருந்த ஒரு குழாயைக் குமாஸ்தா சுட்டிக் காட்டினார். கனவான் நிதானமாகக் குழாயை நோக்கி நடந்தார். ஆனால், சென்றவர் பல நிமிஷங்களாகியும் வரவில்லை. ஸ்திரீகள் வண்டியிலிருக்கும்போது, அவரைக் குறித்து விசாரப் படுவானேன் என்று நினைத்த குமாஸ்தா, பராக்குப் பார்த்துக்

கொண்டு நின்றார். சுமார் அரை மணி நேரமான பின்னும் கனவான் திரும்பாமல் போகவே, உள்ளேயிருக்கும் நாரீமணிகளைப் பலமுறை கூப்பிட்டார். பதில் ஒன்றும் வரவில்லை. குமாஸ்தாவுக்குச் சந்தேகம் ஏற்பட்டு, முதலாளியைக் கூப்பிட்டு, நடந்ததையெல்லாம் சொன்னார். திரைக்குள் ஆளரவமே இல்லாமல் போகவே, அருகிலிருந்த ஒரு ஸ்திரீயை அழைத்துத் திரைக்குள்ளே பார்க்கச் சொன்னார்கள். "ஒருவருமில்லை" என்று அவள் கூறியதும், எல்லோருக்கும் 'பகீர்' என்றது. திரைகளை மிக ஆத்திரமாய்ப் பிய்த்தெறிந்தார்கள். வண்டி காலி!

டிரைவரைக் கேட்டால், தனக்குத் தெரிந்த வரையில் மூன்று ஸ்திரீகள் வண்டியில் ஏறியதாகவும் அவர்கள் மாயமாய் மறைந்து விட்டது அதிசயமாயிருப்பதாகவும் சாதித்தான். உடனே போலீசுக்குத் தகவல் கொடுக்கப்பட்டது.

போலீஸ் சப் இன்ஸ்பெக்டர், இரண்டு கான்ஸ்டேபிள்கள் சகிதம் விஜயம்செய்து, விசாரணை நடத்தினர். அந்த முஸ்லீம் கனவானின் பெயரென்ன? அவருடைய தகப்பனர் பெயரென்ன? அவர் எங்கே வசிக்கிறார்? அவருக்கு எத்தனை பெண்சாதிகள்? எத்தனை குழந்தைகள்? அவருடைய அங்க அடையாளங்கள் என்ன? இந்த விவரங்களையெல்லாம் அறிய அவர் முயன்றார். ஆனால், ஒரு தகவலும் கிடைக்கவில்லை.

கனவானைப் பலர் கண்டிருந்த போதிலும், அவருடைய அங்க அடையாளங்களை விவரிக்க ஒருவராலும் முடியவில்லை. அவர் ஒரு முஸ்லீம் மாதிரி உடையணிந்திருந்தார் என்ற ஒன்றுதான் விசாரணையில் உள்ளங்கை நெல்லிக் கனி போல் தெளிவாயிற்று.

போலீஸ் விசாரணை முடிவடைந்து, இன்ஸ்பெக்டர் போய் விட்டார். ஸ்திரீகள் எப்படி மாயமாய்ப் போயிருக்கக் கூடும்? நகைகளை அவன் எப்படி எடுத்துச் சென்றான்? இந்தக் கேள்விகள் எவராலும் பிரிக்க முடியாத புதிர்களாகவேயிருந்தன. மாம்பலத்திலிருந்த பங்களாவைப் போய்ப் பார்த்தால், அது காலியாக இருந்தது. வீட்டுச் சொந்தக்காரரை

> மரத்தூக்கிலே ஒரு மண் கூஜா. செப்படி வித்தைக்காரனின் மந்திரக்கோல் போல, அதைச் சாதகத்துக்கு வைத்துக்கொண்டு, அந்த ஆசாமி செய்துவிட்ட ஜால வேடிக்கை எத்தனை பேரை ஏமாற்றி விட்டது!

விசாரித்ததில், அன்று காலைதான் ஒரு முஸ்லீம் கனவான் தம்மிடம் வந்ததாகவும், "கொஞ்சம் சாவியைக் கொடுங்கள்; கோஷா ஸ்திரீகளை அழைத்து வந்து வீட்டைக் காட்டி, அவர்களுக்குப் பிடித்தால், வீட்டை அமர்த்திக்கொள்கிறேன்" என்று அவர் தம்மிடம் சொல்லிச் சாவி வாங்கிக்கொண்டு போனதாகவும், போனவர் இன்னும் திரும்பி வரக் காணோம் என்றும், அந்த வீட்டுக்காரர் சொன்னார்.

பல நாளைக்குப் பிறகு, 'ஆக்ரா' நகரத் தபால் முத்திரையுடன், வைர வியாபாரி துந்துபிலால் அவர்களுக்கு ஒரு கடிதம் வந்தது. அதாவது:

"அன்பார்ந்த ஐயா!

"தங்களுக்கு நான் மிகுந்த சிரமம் கொடுத்து விட்டதற்காக வருந்துகிறேன். எனக்குக் கொஞ்சம் பணமுடையாயிருந்தது. தங்களுடைய வைர நகைகளை வாங்கி விற்கவேண்டிய அவசியம் நேரிட்டது. நான் முஸ்லீமல்ல; என்னிடம் கோஷா ஸ்திரீகளுமில்லை. மண் கூஜாதான் என் பொக்கிஷப் பெட்டி. தங்களுடைய வைரங்கள் உயர்ந்த ரகமானவை என்பதற்குப் போதிய அத்தாட்சி நான் அவற்றை அதிகச் சிரமமில்லாமல் விற்றதுதான். இதைத் தங்கள் விளம்பரத்துக்காக உபயோகித்துக் கொள்வதில் எனக்கு எவ்வித மான ஆட்சேபணையுமில்லை.

"தங்களுடைய உதவிக்கு அநேக வந்தனம்.

"தங்கள் கீழ்ப்படிதலுள்ள

"அநாமதேயன்"

கடிதம் போலீஸார் வசம் சேர்ப்பிக்கப்பட்டது. அவர்கள் தீவிரமாக விசாரணை செய்து வருகிறார்கள். ஆசாமி மாத்திரம் இதுவரையில் அகப்படவில்லை.

---

## அரசனில்லாத சதுரங்கம்

சதுரங்க விளையாட்டிலே, எதிரி அரசனைக் கட்டுவதுதான் வெற்றி-தோல்வி முடிவாகும். ஆனால், ருஷிய ஸோவியத் சர்க்காருக்கோ, அரசன் என்றால் வேப்பங்காய் ஆகும்.

ஆகையால், காக்கஸ் பிரதேசக் குடியானவன் ஒருவன், சதுரங்கக் காய்களில் சில மாறுதல்கள் செய்துள்ளான். ராஜாவை ஜனங்களின் 'கமிஸார்' ஆகவும், மந்திரியை அந்தக் கமிஸாரின் மனைவியாகவும் மாற்றினன். ஒட்டை, துப்பாக்கி தாங்கிய வேட்டைக்காரன் ஆயிற்று. யானை, குடியானவனின் குடிசையாய் மாறியது. பொது உடைமைத் தத்துவத்தின் கௌரவம் இவ்வாறாகக் காப்பாற்றப் பட்டுவிட்டது.

ஆனால், ஜனங்களின் 'கமிஸா'ரான ஸ்டாலின் இருக்கிறாரே அவருக்கு, இது பிடிக்குமா? ஏனென்றால், யார் தோற்றாலும், அவர் அன்றோ கட்டுப் படவேண்டும்?

* *

## வெறும் பேச்சுக்காரர்

பிரசங்கம் பண்ணும்போதெல்லாம், கேட்போருடைய மனத்தை உருக்கக்கூடிய சக்திவாய்ந்த பிரசாரகர் ஒருவர் இருந்தார். ஆனால், அவரிடம் யோக்கியதை மட்டும் இல்லை. அவருடைய வாழ்க்கையைக் கண்டு இரங்கி நான் ஒருநாள் "அநேக ஜனங்களுடைய மனத்தை உருக்கக்கூடிய நீர் ஏன் இப்படித் தகாத காரியங்களைச் செய்கிறீர்?" என்று கேட்டேன். அவர் என்னை நமஸ்கரித்து, "ஸ்வாமி! துடைப்பக்கட்டை எல்லாராலும் புறக்கணிக்கப்படுவதானாலும் தரையிலும் தெருவிலும் உள்ள குப்பை கூளங்களைக் கூட்டி அப்புறப்படுத்துகிறதல்லவா?" என்று சொன்னார். அவருடைய வார்த்தைக்கு என்னால் தகுந்த பதில் சொல்ல முடியவில்லை.

—ஸ்ரீ பரமஹம்ஸர்

# காந்தி  வாக்கு

ஹிந்து - முஸ்லீம் ஒற்றுமைப் பிரச்னை குறித்துச் சொல்ல, எனக்குத் துணிவில்லை. அது மனிதன் கைகளை மீறிப் போய் விட்டது; ஆண்டவனின் கைகளுக்கு மாறிவிட்டது. கணவர்களாலும் மனிதர்களாலும் தேவர்களாலும் கைவிடப் பட்டு, ஆண்டவனை—ஆண்டவனையே—அவனது தவறா உதவியை அருளும்படி வேண்டிய திரௌபதியைப் போலவே நானும் இருக்கிறேன்; நாம் ஒவ்வொருவரும் இருக்கிறோம். சர்வ வல்லமை யுள்ள ஆண்டவனது உதவியை நாம் வேண்டுவோம். அவனது அற்ப சிருஷ்டிகளான நாம் செய்ய வேண்டியதைச் செய்யத் தவறி விட்டோம். நாம் ஒருவரிடம் ஒருவர் குரோதப் படுகிறோம், ஒருவரிடம் ஒருவர் அவநம்பிக்கை கொள்ளுகிறோம்; ஒருவரை ஒருவர் மென்னியை நெருக்க ஓடுகிறோம்; கொலைபாதகரு மாகிறோம்—இதை யெல்லாம் அவனிடம் சொல்லுவோம்.

நமது இதயம் கதறட்டும். பின்னர் அவனது அரியாசனத்தை அணுகி, அவனது திருவடிகளை ரத்தம் தோய்ந்த நமது கண்ணீரால் கழுவுவோம். நம்முள்ளே யிருக்கும் சகல பகைமைகளையும் களைந்து, நம்முள்ளத்தைத் தூய்மை செய்யுமாறு, அவனைப் பிரார்த்திப்போம். நாம் ஒருவரிடம் ஒருவர் அவநம்பிக்கையும் பயமும் கொள்ளுவதால், அவனது பூமிக்கும் அவனது திருநாமத்துக்கும் இந்தப் புனித நாட்டுக்குமே அவமானம் தேடிவருகிறோம். நாம் அனைவரும் ஒரே தாய்நாட்டின் புதல்வரும் புதல்விகளுமாயிருந்தும், ஒரே உணவை உண்டு வந்தும், ஒருவருக்கொருவர் இடமில்லை யென்கிறோம். நமக்குப் புத்தியும் ஞானமும் அருளும்படி, ஆண்டவனைப் பிரார்த்திப்போம்.

* * *

## எண்ணிக்கை வேண்டாம்

நமக்குள் ஓர் ஐக்கிய பாவமும் திட்டமும் புத்தி பூர்வமான ஒத்துழைப்பும் பரஸ்பர இணக்கமும் ஏற்படும் வரையில், நாம் சிலராகவே இருப்பதுதான் பத்திரமாகும். நூறு காலிகளைவிட, ஒரே ஒரு சத் புத்திரன் மேல்; நூறு கௌரவர்களை விட ஐந்தே ஐந்து பாண்டவர்களே மேலாயிருந்தார்கள். கட்டுப் பாடற்ற எண்ணில்லாப் படைத்திரள்களை, பொறுக்கிய சில நூறு பேரே அடங்கிய கட்டுப்பாடுள்ள சேனை எத்தனையோ தடவை வென்றிருக்கிறது. காங்கிரஸ் விதித்திருக்கும் லட்சணங்களைப் பூர்ணமாய்த் திருப்தி செய்யும் மிகச் சில அங்கத்தினர்களே இருந்தாலும் போதும். பத்து லட்சம் 'நாம்கேவாஸ்தே' அங்கத்தினர்கள் காங்கிரஸ் ரெஜிஸ்டரில் இருந்து ஒரு பயனு மில்லை.

* * *

## ஐதீகம் பொருந்துமா?

ஒரு குறிப்பிட்ட காலத்தில் பொருத்தமாயிருந்த தொரு வழக்கத்தை, மற்றொரு காலத்தில் கண்மூடித்தனமாய் அனுஷ்டித்தால், அது ஜனங்களைப் பாவச்சேற்றில் தான் அழுத்தும். ஒரு காலத்தில் மிருகபலி வழங்கியதால், அதை இன்று புத்துயிர் பெறச் செய்வோமா? ஒரு காலத்தில், மாட்டிறைச்சி தின்னும் வழக்க மிருந்ததால், இப்பொழுதும் அதைத் தின்போமா? ஒரு காலத்தில் திருடர்களின் கையையும்காலையும்வெட்டி வந்தார்களாதலால், இன்றும் அந்தக் காட்டுமிராண்டித் தனத்தைக் கைக்கொள்ளுவோமா? ஒரு ஸ்திரீ பல புருஷர்களை மணக்கும் வழக்கத்தைத்தான் மீண்டும் கொணர்வோமா? பாலிய மணங்களைப் புத்துயிர் பெறச் செய்வோமா? ஒரு காலத்தில் மனித வர்க்கத்தின் ஒரு பகுதியை நாம் தள்ளிவிட்டதற்காக, இன்னும் அவர்களைப் பிரஷ்டர்கள் என்று சொல்லி ஒதுக்கி விடலாமா?

* * *

## கதரும் சாத்விக எதிர்ப்பும்.

கதர் நமக்குள்ளே யிருக்கும் சக்தியை நாம் உணரும்படி செய்யும்; ஓர் அமைதியை நல்கும்; அதே சமயத்தில் அந்த அமைதிக்குப் பின்னே, தளரா உறுதியொன்றையும் தரும். கதருக்குள்ள இந்தச் சக்திகள்தான், சாத்விக எதிர்ப்புக்கு வேண்டிய மனோபாவத்தை நமக்கு உண்டாக்குவன. 'சாத்விக எதிர்ப்பு, சாத்விக எதிர்ப்பு' என்று சும்மா வாயால் உச்சரித்துக் கொண்டிருக்கும் அநேகர், உண்மையிலே அது என்ன என்று அறியாதவர்களாகவே யிருக்கிறார்கள். எந்த நிமிஷத்திலும் நிதர்சனமான பலாத்காரத்திலே கொண்டு போய் விட்டுவிடக் கூடிய அபரிமிதமான பரபரப்பு ஊட்டும் நிலைமையையே, சாத்விக எதிர்ப்பென்று அவர்கள் மயங்கிக் கொண்டிருக்கிறார்கள். உண்மையில், சாத்விக எதிர்ப்பு, முற்றிலும் இதற்கு நேர்விரோதமானது. கதரானது பொருளாதார வெற்றியடையா விட்டால், அரசியல் பலனும் ஏற்படாது; சாத்விக எதிர்ப்புக்கு வேண்டிய அமைதியான நிலைமையும் ஏற்படாது.

* * *

## 'உன்னைப்போல் பிறனும்'

என் எதிரிகளைச் சுட்டுத் தள்ளி வீரன் என்ற பெயரை நான் வாங்கிக் கொள்ளத்தக்க, அநேக சந்தர்ப்பங்கள் எனக்குக் கிடைத்தன. ஆனால், அவர்களில் எவரையும் அப்படிச் சுட எனக்கு மனம் வரவில்லை. ஏனெனில், என் வழிகளை அவர்கள் எவ்வளவுதான் வெறுத்தாலும், என்னை அவர்கள் சுடலாகாது என்பது என் விருப்பம். அவர்கள் வழி தவறானது என்று அவர்களது மனதுக்குத் திருப்தி உண்டாகும்படி செய்யவே நான் முயலுகிறேன். அதேமாதிரிதான், என் வழி தவறென்று, என் மனதுக்குத் திருப்தி யுண்டாகும்படி செய்ய, அவர்களும் முயல வேண்டும். 'பிறர் உன்னிடம் எப்படி நடந்துகொள்ள வேண்டுமென்று நீ விரும்புகிறாயோ அப்படியே பிறரிடம் நீயும் நடந்து கொள்.'

## யுத்தம்

இருந்த போதிலும்



இந்தியாவில் தயாரிக்கப்பட்ட மின்சார

### மணிக்கூண்டு

அல்லது

தெருக் கடிகாரங்கள் எதுவும்
எங்களால் சப்ளை செய்யக்கூடும்

பூரா விவரங்களுக்கும்

# WEST CLOX

அமெரிக்கன் புதுமாடல்

## அலாரம் டைம்பீஸ்




பிக்பென் (புதுமாடல்) ரூ. 15 8




பேபி பென் (புதுமாடல்) ரூ. 16 8

அலாரம் இருதொனிகளில் அடிக்கும்




ஹஸ்லர் ரூ. 10

பாக்கிங் போஸ்டேஜ் தனி

(எல்லா கடிகாரங்களும் 2 வருஷ உத்திரவாதமுள்ளது)

# கனி & சன்ஸ்

கடிகார வியாபாரிகள்

ஹெட் ஆபீஸ் :
55-57, ராட்டன் பஜார்

மதராஸ்

பிராஞ்சு :
190, மௌண்டு ரோடு

# ஸௌத் இந்தியா பயர் அண்டு ஜெனரல் இன்ஷியூரன்ஸ் கம்பெனி (கோயமுத்தூர்) லிமிடெட்

|||

நாங்கள் சந்தோஷத்துடன் அறிவித்துக் கொள்வதாவது:

★

## யுனைடெட் டிரேடிங் கம்பெனி

**22, ஸெகண்ட் லயன் பீச், சென்னை**

|||

இந்தக் கம்பெனியாரைச் சென்னை நகருக்கும் புதுக்கோட்டை சமஸ்தானத்துக்கும் இராமநாதபுரம் ஜில்லாக்களுக்கும் எங்களுடைய தலைமை ஏஜண்டுகளாக நியமித்திருக்கிறோம்.

தாராளமும் கவர்ச்சியுமான நிபந்தனைகளோடு ஏஜென்ஸி அளிக்கப்படும். வேண்டுவோர், பின் கண்டவர்களுக்கு விண்ணப்பித்துக் கொள்ளவும்:

தலைமை ஏஜண்டுகள்—அல்லது—தலைமை ஆபீஸ்

**SOUTH INDIA FIRE & GENERAL INSURANCE CO., (COIMBATORE) LIMITED.**

**RACE COURSE ROAD :: COIMBATORE**

பிரபலஸ்தர் வரிசை :

# சுதந்திர வீரர் ஜவஹர்

பத்து வருஷங்களுக்கு முன்னே இந்தியா முழுவதும் பிரமிக்கத்தக்க பெருந் தியாகமொன்று நடந்தது. மன்னர்களைப்போல் பெரும் போகங்களுடன் வாழ்ந்த ஒரு பிரபு, அரண்மனைபோன்ற தங்கள் மாளிகையை, தமது அருமை மகனுடைய சம்மதத்தோடு, தேசத்துக்கு—தேசீய இந்தியாவின் ஆத்மாவான காங்கிரஸுக்கு—தானங் கொடுத்துவிட்டார். அதுதான் **சுயராஜ்ய பவனம்.** மோதிலால் நேருவே, தமது மாளிகையான ஆனந்த பவனத்தைக் காங்கிரஸுக்குக் கொடுத்து, இவ்வாறு சுயராஜ்ய பவன மாக்கினர். இது பற்றித் தகப்பனுக்கும் மகன் நேருவுக்கும் அக்காலத்திலே கடிதப் போக்குவரத்து நடந்ததாம். ஜவஹர்தான் இந்தத் தியாகத்தைச் செய்யுமாறு, தந்தை மோதிலாலை வற்புறுத்தினராம். "இந்த மாடமாளிகையெல்லாம் யாருக்காக வைத்திருக்கிறீர்கள்? எனக்கு வேண்டாம். பின்னே யாருக்கு?" என்று மகன் கேட்டாராம். தந்தையின் உள்ளம் இளகிவிட்டது. அந்த மகத்தான தானத்தைச் செய்துவிட்டார்.

ஜவஹரின் குடும்பம் புராதனமான காஷ்மீரப் பிராம்மண வம்சத்தைச் சேர்ந்தது. தந்தை மோதிலால், இந்தியாவின் மிகச் சிறந்த வக்கீல்களில் ஒருவர். பெரும் செல்வர். ராஜபோகமாய் வாழ்ந்து, பின்னல் அதையெல்லாம் துறந்து, தேசப்பணியில் ஈடுபட்டுச் சிறையும் சென்றவர். நவ இந்தியாவின் சிருஷ்டிகரில் ஒருவர். இத்தகைய உத்தமரின் புதல்வர் ஜவஹர்.

ஜவஹர் 1889-ஆம் வருஷம் நவம்பர்மீ 14-ஆந் தேதி அலஹபாத்தில் ஜனித்தார். சிறு வயதிலேயே ஓர் ஆங்கிலேயரை உபாத்தியாயராகப் பெற்று மேல்நாட்டுக் கல்வி பயின்றார். 1905-ஆம் வருஷம் இங்கிலாந்து சென்று, ஹாரோவிலும், கேம்பிரிட்ஜ் கல்லூரியிலும் படித்தார். 1912 - ஆம் வருஷம் இந்தியாவுக்குத் திரும்பி வந்து,



சட்டக்கல்வி பயின்று, அலஹபாத்தில் ஓர் அட்வொகேட் ஆகத் தொழிலில் இறங்கினர். ஆனல், வெகு சீக்கிரத்திலே ராஜீயம் அவரைப் பிடித்து இழுத்துக்கொண்டது. 1918-ஆம் வருஷம் இந்தியன் ஹோம் ரூல் லீக் காரியதரிசியானர். அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டி அங்கத்தினருமானர். 1929-ஆம் வருஷம் அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டியின் பொதுக் காரியதரிசியானர். 1929, 1935, 1936 இம்மூன்று வருஷங்களிலும் திரும்பத் திரும்பக் காங்கிரஸ் அக்கிராஸனர் பதவி வகித்தார். முன்னே ஏழுதடவை சிறை சென்று, இப்போது எட்டாந் தடவையாகச் சிறைவாசம் செய்கிறார்.

ஜவஹர் முதன்முதலாக அலஹபாத்தில் ஒரு பொதுக்கூட்டத்தில் அரசியல் பிரசங்கம் செய்தார். அப்போது அவருக்கு மகா கூச்சம். மிகுந்த அவநம்பிக்கையோடுதான் பேசினர். என்றாலும், பேச்சு முடிந்ததும், டாக்டர் ஸாப்ரூ ஆனந்தமடைந்து, மேடைக்கு ஓடிவந்து, ஜவஹரைக் கட்டித்தழுவிக் கொண்டுவிட்டார். ஆனல், அந்த ஸாப்ரூவின் ராஜீயம் ஜவஹருக்கு இன்று துளிக்கூடப் பிடிக்காது.

அதிகாரிகளின் அநாவசிய கெடுபிடிகளைக் கண்டால், அதற்குப் பணிய ஜவஹருக்கு என்றுமே மனம் வருவதில்லை. 1919-ஆம் வருஷம் தாய் ஸ்வரூபராணியையும் மனைவி கமலாவையும் வைத்தியத்துக்காக வடக்கே முஸோரிக்கு அழைத்துச் சென்றார். அப்போதுதான் ஓர் ஆப்கன் போர் நடந்து, பிரிட்டிஷ் இந்திய சர்க்காருக்கும் ஆப்கன் சர்க்காருக்கும் சமாதானப் பேச்சு வார்த்தைகள் நிகழ்ந்து கொண்டிருந்தன. முஸோரியில் எந்த ஹோட்டலில் ஜவஹர் தங்கியிருந்தாரோ, அதே ஹோட்டலில் ஆப்கன் சர்க்காரின் சமாதான தூதர்களும் வந்து தங்கி யிருந்தார்கள். என்றாலும், அவர்கள் யாரோ, இவர் யாரோ; அவர்களிடம் பேசும் உத்தேசமே இவருக்குக் கிடையாது. ஆயினும், ஸ்தலப் போலீஸ் அதிகாரிகள் மிரட்சியடைந்து, இவரிடம் ஓடிவந்து, அந்த ஆப்கன் தூதர்களுடன் இவர் பேசக்கூடாது என்று ஒரு கட்டளையைச் சாதரா செய்தார்கள். "இந்தக் கட்டளைக்கு நான் கீழ்ப்படியமாட்டேன்" என்று தெரிவித்தார் ஜவஹர். உடனே ஜவஹரை அதிகாரிகள் கைது செய்து, முஸோரி ஜில்லாவைவிட்டு வெளியே கொண்டுபோய் விட்டுவிட்டார்கள். அப்போதுதான், கிஸான்களிடம் பழக, முதன்முறையாக ஜவஹருக்கு நல்ல சந்தர்ப்பம் கிடைத்தது.

முதன் முதலில் அபேதவாதப் பற்றுக்கொண்ட பிரபல இந்தியத் தலைவர் ஜவஹர்தான். 1927-ஆம் வருஷம் ருஷியாவுக்கு நேரே சென்று வந்தபின், ஸோவியத் ருஷிய வாழ்க்கை முறையைப்பற்றி, அனுதாபத்துடன் அவர் எழுதிய சில கட்டுரைகள், இந்தியப் பத்திரிகைகள் பலவற்றில் தொடர்ச்சியாக வெளிவந்தன. காங்கிரஸுக்

'ஸரஸி'

குள்ளேயே அபேதவாதக் கருத்துக்களைப் பரப்பவும் ஜவஹர் முயன்றார். அவரும் ஸ்ரீ எஸ். சீனிவாசையங்காருமாகச் சேர்ந்து, பூரண சுயேச்சைக் கட்சியொன்றையும் காங்கிரஸுக்குள்ளே அமைக்க முயன்றார்கள். 'பூர்ண சுயேச்சையே காங்கிரஸின் லட்சியம்' என்று காங்கிரஸ் தீர்மானம் செய்யும்படி செய்தது இவர்களின் இந்த முயற்சியின் பலன்தான்.

ஜவஹரின் மனைவி கமலா பல வருஷங்களாக நோய் வாய்ப்பட்டிருந்தாள். ஜவஹர் சிறையிலிருக்கும்போது, கமலாவின் நோய் மிகவும் அதிகரித்தது. "மீதியுள்ள தண்டனைக் காலம் பூராவும் ராஜீயத்தில் கலப்பதில்லை என்று வாய்மொழியாகச் சொன்னால் போதும். உம்மை விடுதலைசெய்து விடுகிறோம். நீர் உமது மனைவியின் பக்கத்தில் போயிருக்கலாம்" என்று அதிகாரிகள் எவ்வளவோ சொன்னார்கள். ஜவஹர் இசையவில்லை. "அப்படி வாக்குக் கொடுக்கவே கொடுக்காதீர்கள்" என்று கமலாவுங்கூட ஜவஹரை வேண்டிக்கொண்டாள்! அவளும் அவ்வளவு தன்மதிப்பும் தியாக உணர்ச்சியும் நிறைந்தவள். இத்தகைய அருந் துணைவியை 1936-ஆம் ௵ ஜவஹர் இழந்துவிட்டார். வியாதியிலிருந்து மீளாமல் அவள் காலமாகிவிட்டாள்.

காந்திஜிக்கும் ஜவஹருக்கும் அபிப்பிராய வேற்றுமைகள் ரொம்ப உண்டு. என்றாலும், இருவரும் பரஸ்பரம் மிகுந்த வாத்ஸல்யம் கொண்டவர்கள். ஜவஹரைத் தமது உத்தம புத்திரன்போல் மகாத்மா பாவிக்கிறார். ஜவஹருக்கும் காந்திஜியிடம் மிகுந்த மரியாதை. இந்தியாவில் மட்டிலும் அல்ல, உலக மதிப்பிலேயே, காந்திஜிக்கு அடுத்தபடியான இந்தியத் தலைவர் ஜவஹர்லால்தான். காந்திஜிக்கு மேனாட்டு லோகாயத நாகரிகம் பிடிக்காது; ஜவஹருக்கு அதிலே ஓரளவு பிரேமையுண்டு. காந்தியின் 'ராம ராஜ்ய'த்திலே முதலாளிக்கும் தொழிலாளிக்கும், மன்னனுக்கும் பிரஜைகளுக்கும் இடமுண்டு. ஆனால், அந்த மன்னனும் முதலாளிகளும் தர்மகர்த்தாக்களைப்போல் நடந்துகொள்வார்கள். ஜவஹரின் லட்சியமான அபேதவாத உலகில் அதெல்லாம் கிடையாது. சுதந்திர இந்தியாவின் தீமைகள் ஒழிவதற்கு மட்டிலுமல்ல, இந்தியா சுதந்திர மடைவதற்கே கூட, அபேதவர்தமே தேவை என்ற கருத்துக் கொண்டவர் ஜவஹர். ஆனால், 'கம்யூனிஸம்' என்ற சமதர்ம வாதிகளின் பலாத்காரம் ஜவஹருக்குப் பிடித்தமில்லை. மகாத்மாஜியின் அஹிம்சா தர்ம தத்துவத்தில் ஜவஹருக்கு வரவர அதிகப் பற்றுதல் ஏற்பட்டு வருகிறது.

சில கிராமவாசிகளை அஹிம்சா தர்மத்துக்குத் தாம் தயார் செய்த விதத்தை ஒரு முறை தீனபந்து ஆண்டிரூஸிடம் ஜவஹர் சொல்லியிருக்கிறார்:

"உங்கள் கண்ணுக்கு முன்னே போலீஸார் என்னைக் கைது செய்து விலங்கிட்டார்களானால், நீங்கள் என்ன செய்வீர்கள்?" என்று, அந்த ஜனங்களை ஜவஹர் கேட்பார்.

"அவர்கள்மேல் பாய்ந்து விழுந்து, உங்களைத் தப்புவித்து விடுவோம்" என்று பதில் வரும்.

"இல்லை, இல்லை. அதுதான் நீங்கள் செய்யக்கூடாது. நீங்கள் கலங்காமல் பரிபூரண அமைதியோடு இருக்கவேண்டும். ஓர் அடிகூட இருந்த இடத்தைவிட்டு நகரக்கூடாது" என்பார் ஜவஹர்.

அவர்களுக்கு இது விசித்திரமாய் இருக்கும். ஒன்றும் புரியாமல் ஆச்சரியத்துடன் விழிப்பார்கள்.

"இது மட்டிலுமல்ல. என்னை அவர்கள் தடியால் அடித்தாலும் நீங்கள் அப்படியே பொறுமையோடிருக்கவேண்டும்."

"அதை எங்களால் சகிக்க முடியாதே?"

"சகித்துத்தான் ஆகவேண்டும்."

இம்மாதிரியே திரும்பத் திரும்ப உபதேசித்து, அந்த ஜனங்களை ஜவஹர் பக்குவப்படுத்தினாராம்.

ஜவஹர் அருமையாய் ஆங்கிலம் எழுதுவார். அவருடைய நடை மிக உயர்தரமானதென்றும் உலகிலேயே ஐந்தாறு பேர்தான் அவர் மாதிரி ஆங்கில மெழுதக் கூடியவர்கள் இருக்கிறார்கள் என்றும் ஜான் கந்தர் என்ற பிரபல அமெரிக்க எழுத்தாளர் கூறுகிறார். ஜவஹரின் பூர்விக சொத்தெல்லாம் அநேகமாய்த் தேச கைங்கர்யத்துக்குப் போய்ச் சேர்ந்துவிட்டது. தமது எழுத்துக்களின் மூலம் கிடைக்கும் பணத்தைக் கொண்டே அவர் ஜீவிக்கிறார்.

ஜவஹருக்குப் பிரிட்டிஷாரிடம் பகைமை கிடையாது. பிரிட்டனின் ஏகாதிபத்திய வெறியையும் இந்தியாவைப் பிரிட்டன் சுரண்டுவதையுந்தான் வெறுக்கிறார். அப்படியிருந்தும், பிரிட்டிஷாருக்கு காந்திஜியிடம் உள்ள பயத்தைவிட, ஜவஹரிடம்தான் அதிக பயமாம். காரணம் அவருடைய அபேதவாதந்தான். ஆயினும் இந்திய அபேதவாதிகளுடன் ஒன்றுபடாமலும் காந்தி தர்மத்திலே அடியோடு மூழ்கிவிடாமலும், ஜவஹர் தன்னந் தனியராய் நிற்பது ஒரு விசித்திரமல்லவா?

## வெல்ஸ் திருடினார்!

எச். ஜி. வெல்ஸ் என்ற பிரபல ஆங்கில எழுத்தாளருக்குத் தலை ரொம்பப் பெரிசு. தமது தலைக்கேற்ற தொப்பி கிடைக்காமல் வெகு காலமாக அவர் கஷ்டப்பட்டுக்கொண்டிருந்தாராம்.

சிறிது காலத்துக்கு முன் அமெரிக்காவில் ஒரு பெரிய தொப்பியை அவர் கண்டார். உடனே அதைக் கையிலே எடுத்துக்கொண்டு கிளம்பிவிட்டார். அந்தத் தொப்பி, மெஸாசுஸெட்ஸிலுள்ள கேம்பிரிட்ஜ் மேயர் பெக் என்பவருடையது. ஆகையால், கொஞ்சமும் கூசாமல், பெக் அவர்களுக்கு ஆசிரியர் வெல்ஸ் பின்வருமாறு ஒரு கடிதம் எழுதினார்:

"தங்கள் தொப்பியை நான் திருடிவிட்டேன். அது எனக்கு ரொம்பப் பிடிக்கிறது. அதை நான் வைத்திருப்பேன். அதற்குள்ளே நான் பார்க்கும்போதெல்லாம், எனக்கு உங்கள் நினைவும் நீங்கள் அளித்த ஷெர்ரி பானத்தின் ஞாபகமும் கேம்பிரிட்ஜ் நகர நினைவும் வரும். கேம்பிரிட்ஜ் கல்லூரியை விட, கேம்பிரிட்ஜ் நகரம் பழமையானதல்லவா? உங்கள் தொப்பியைத் தூக்கி உங்களுக்கு இதோ வணக்கம் செலுத்துகிறேன்."

சென்னை-600 008.
134189

# தத்தளிக்கும் தாய்லந்து — 'ஸஞ்சாரி'

கீழ் நாட்டிலே, இதுவரையிலும் தப்பிச் சுதந்திரமாய் இருந்து வந்த ஒரு நாடு இன்று தவியாய்த் தவிக்கிறது. அதுதான் தாய்லந்து. இரானுக்கும் ஜப்பானுக்கும் இடையில் ஆசியாவிலே யுள்ள ஒரே ஒரு சுதந்திர நாடு தாய்லந்து தான். அதன் பெயருக்கே 'சுதந்திரர் நாடு' என்று அர்த்தம். ஏற்கனவே ஸையாம் என்று அதற்கு உலகிலே பெயர் வழங்கிவந்தது. அந்தப் பெயர் கூடாதென்றும் 'தாய்லந்து' என்றே வழங்கி வரவேண்டும் என்றும், 'தாய்லந்து சர்க்கார் 1939-ஆம் வருஷம் அறிவித்தது. அது முதல் 'ஸையாம்' என்ற பெயர் மறைந்து, 'தாய்' என்ற பெயரே வழங்கி வருகிறது. 'சுதந்திரர் நாடு' என்ற பொருள் கொண்ட 'மூவாங் தாய்' என்பதே தாய்லந்தின் முழுப் பெயராகும். இந்தத் தாய்லந்தின் நிலைமை இன்று மிக நெருக்கடியான கட்டத்தை அடைந்திருக்கிறது. ஜப்பான் இந்த நாட்டைத் தன் கைக்குள்ளே அடக்கி வைத்துக் கொள்ள, இப்போது பிரம்மப் பிரயத்தினம் செய்து வருகிறது.

ஐரோப்பியப் போரில் பிரான்ஸ் விழுந்தவுடனே, கீழ் நாட்டில் ஜப்பான் தனது 'தில்லுமில்லு'களைத் தொடங்கிவிட்டது. பிரஞ்சு இந்தோ-சீனவுக்கும் தாய்லந்துக்கும் வெகு நாளாக எல்லைப் புறத் தகராறு இருந்தது. 1941-ஆம் ஸ்ரீ ஜனவரிமீ ஜப்பானின் தூண்டுதலால், இந்தோ-சீனமீது தாய்லந்து ஒரு குட்டிப் போர் தொடுத்தது. பிள்ளையையும் கிள்ளி விட்டுத் தொட்டிலையும் ஆட்டுவது போல, பிரான்ஸுக்கும் தாய்லந்துக்கும், தானே மத்தியஸ்தம் செய்துவைப்பதாகவும் முன்வந்தது ஜப்பான். திக்கற்ற பிரான்ஸ் அதற்குச் சம்மதித்தது. சமாதான உடன்படிக்கையும் நடந்தது.

இதோடு விடவில்லை ஜப்பான். தானே பிரான்ஸை மிரட்டி, இந்தோ-சீனவின் தென் பகுதி பூராவும் ஜப்பானிய சைன்யம் ஆக்ரமித்துக் கொள்ளவும் ஜப்பானியக் கப்பல் தளங்களும் விமான நிலையங்களும் அங்கே அமைத்துக்கொள்ளவும், சில வாரங்களுக்கு முன் உரிமை பெற்றுக் கொண்டது. அதன் பின், தாய்லந்து எல்லையிலும் பர்மா எல்லையிலும் ஜப்பானியப் படைகள் குவிந்துவருகின்றன. ஜப்பானுக்கு இதற்கென்ன அவசியம் வந்தது? ஜப்பானியப் பிரதம மந்திரி கோனோயி, ஹிட்லரின் கையாளாய் 'ஆக்ட்' செய்து, உலக யுத்தத் தீயைக் கீழ்த் திசையிலும் பரப்பிவிட முயற்சிக்கிறார் என்றே எண்ணவேண்டியிருக்கிறது.

தாய்லந்து சம்பந்தமான போட்டோப் படங்களை 72, 73-ஆம் பக்கங்களில் பார்க்கவும்.

ஆசியாவிலே பெரிய ஜப்பானிய சாம்ராஜ்யம் ஒன்றை ஸ்தாபித்துக் கீழ்நாட்டு ஹிட்லராய் விளங்க ஆசைப்படும் ஜப்பானியப் பிரதமர் கோனோயி இதோடாவது நின்றாரா? இல்லை. தாய்லந்தையும் பயமுறுத்தத் தொடங்கினர். தாய்லந்து ஜப்பானுக்கு இரையாகுமானல், பர்மாவுக்கும் சிங்கப்பூருக்கும் மிக அபாயமாகும். ஆகையால், பிரிட்டனும் தாய்லந்துடன் ரகஸ்யப் பேச்சுக்கள் நடத்தித்தான் இருக்கவேண்டும். சின்னஞ்சிறிய தாய்லந்துக்கு நடுநிலைமையாயிருக்க ஆசை. ஆகையால், ஜப்பானுடன் சண்டையிடாமல், ஒருவித ஸமரஸத்துக்கு வந்தது. சீனவில் ஜப்பானின் கைப் பொம்மையாய்ச் சிருஷ்டியான மஞ்சுகோ ராஜ்யத்துக்கு, அங்கீகாரமளித்து, அதனுடன் பொருளாதாரத் தொடர்புகள் வைத்துக் கொள்ள, தாய்லந்து இசைந்து விட்டது. மேலும், ஜப்பானின் யோகோஹாமா ஸ்பீஷி பாங்கிக்கு ஒரு கோடி என் (சுமார் 10-லட்சம் பவுன்) கடன் கொடுக்கவும் தாய்லந்து சம்மதித்தது. தாய்லந்தின் அரிசி, தகரம், ரப்பர் ஆகியவற்றை ஜப்பான் வாங்கிக்கொள்ளுவதற்காகவே இந்த ஏற்பாடு. ஆனல், இத்துடனவது தாய்லந்து அமைதியாயிருக்க, ஜப்பான் விடுமா? படைத்தளங்கள் வேண்டுமென்று அது மறுபடியும் தாய்லந்தை மிரட்டாதென்று யார் சொல்ல முடியும்?

இந்தத் தாய்லந்தையும் இதற்கும் ஜப்பானுக்கும் உள்ள பழைய சம்பந்தா சம்பந்தங்களையும் பற்றிச் சில விவரங்களை இப்போது நாம் கவனிக்கலாம். மேற்கே பர்மா, கிழக்கே இந்தோ-சீன, தெற்கே பஸிபிக் கடலும் சிங்கப்பூரும்—இந்த எல்லைக்குட்பட்ட, இரண்டு லட்சம் சதுர மைலும் ஒன்றரைக்கோடி ஜனத்தொகையும் கொண்ட நாடு தாய்லந்து. இதன் மன்னர் 15-வயதுடைய (1926-ஆம் ஸ்ரீ ஜனனம்) பாலியர் ஆனந்தா. ஏறக்குறைய ஒரு சர்வாதிகாரியாகத் தாய்லந்தை ஆண்டு வருபவர் அதன் பிரதம மந்திரி லுவாங் பீபுன் ஸாங்கிராம் தான். ஜனநாயக அரசியல் உரிமைகளுக்காகப் போராடி, பழைய மன்னரின் ஏதேச்சாதிகார ஆட்சியை 1932-ஆம் ஸ்ரீ கவிழ்த்த புரட்சித் தலைவர்களில் ஒரு முக்கியஸ்தர் லுவாங் பீபுன். ஜப்பானிடம் கொஞ்சம் பற்றுதல் உள்ளவர் என்று இவரை ஏற்கனவே சொல்லி வந்தார்கள். முன்னே விவசாய மந்திரியாகவும் ராணுவ மந்திரியாகவும் இருந்துவந்து, 1938-ஆம் ஸ்ரீ டிசம்பர்மீ 15-ஆம் உ தான் பிரதம மந்திரியானர்.

லுவாங் பீபுன் மகா உறுதி வாய்ந்தவர். மூன்று முறை அவரை எதிரிகள் சுட்டுக் கொலைசெய்ய முயன்றார்கள். மூன்று முறையும் அவர் ஆச்சர்யமாய்த் தப்பித்துக் கொண்டார். தேர்தல் மூலம் ஜனப் பிரதிநிதிகளைப் பொறுக்கியெடுத்து, நிர்வாகம் புரிவதில் அவருக்கு நம்பிக்கையில்லை. தமது புரட்சிக் கட்சியினரைக் கொண்ட ஒரு செனேட்டை அமைத்து, 'பாஸிஸ்டு'களையும் 'நாஜிக'ளையும் போல் சர்வாதிகார ஆட்சி புரிவதில் தான் விருப்பமாம். ஆனல், பழைய பிரபுக்களின் ஆட்சியை மட்டில் திரும்பத் தலைதூக்காதபடி அவர் ஒழித்துவிட்டார்.

ஒன்பது வருஷத்துக்கு முன் வரையில் தாய்லந்திலே மன்னர் இட்டதுதான் சட்டம். ஜனங்களுக்குத் துளிக்கூட அரசியல் உரிமை எதுவும் கிடையாது. 1932-ஆம் ஸ்ரீ நடந்தது ஒரு புரட்சி. அப்போது பிரஜாதிபக் என்ற மன்னர் ஆண்டுவந்தார். நல்ல புத்தி

(தொடர்ச்சி 74-ஆம் பக்கத்தில்)



1



2

(1) [illegible]யில்ந்துப் பிரதம மந்திரி லுவாங் பீபுன் [illegible]ங்கிராம். (2) பாலிய அரசர் ஆனந்தா [illegible]டன் கலாசாலைத் தோட்டத்தில் தோழ மாண வருடன் வேலை செய்தல். (3) தாய்லந்துக்கும் பிரஞ்சு இந்தோ சைனவுக்கும் சமீபத்தில் ஜப் பானிய ம[illegible]தியஸ்தர்கள் வந்து நடத்திவைத்த சமாதான மகாநாடு. (4) பாங்காக் ஆலயத்தில் உள்ள [illegible]சார்ண இலைப் புத்தர் சிலைகள். (5) ஜப் பானிய பிரதமர் கோனேயி. (6) தாய்ப் பிரதமர் பிரசங்கம். (7) அரச உடையில் ஆனந்தா. (8) கோனேயி பல வருஷங்களுக்கு முன் ஒரு மாறு வேஷப் போட்டியில் ஹிட்லர் வேஷம் போட்டது.





3



5







(71-ஆம் பக்கத் தொடர்ச்சி)

மான். நகைச்சுவை நிறைந்தவர். புரட்சிக்காரர்களின் கோரிக்கைகளுக்கு மாறு பேசாமல் உடனே அவர் பணிந்தார். தாங்கள் அரசரைக் கடுமையான மொழிகளால் தாக்கி அவருக்கு விடுத்த இறுதிக் கடிதத்தின் வாசகத்துக்கு, புரட்சிக்காரர்கள் மனம் வருந்தி, மன்னரிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டார்கள். பிறகு, பார்லிமென்டரி முறையில் ஓர் அரசியல் திட்டத்தை, அவர்களே தயாரித்தார்கள். மன்னரும் இருக்க அதில் இடமளிக்கப்பட்டது. மீண்டும் ஒரு பிளவு ஏற்பட்டது. போவராதேஜ் என்ற கோமகன், பல பிரபுக்களைச் சேர்த்துக் கொண்டு, புதிய பார்லிமென்டரி அரசியலுக்கு விரோதமாக எதிர்ப் புரட்சி செய்ய முயன்றார். இச் சமயம் ராஜா பிரஜாதிபக், கண் வைத்தியத்துக்காக ஐரோப்பாவுக்குச் சென்றிருந்தார். பிரபுக்கள் கட்சியினரில் பலர், ஜனங்கள் கட்சிச் சர்க்காரால் கைது செய்யப்பட்டு மரண தண்டனை விதிக்கப்பட்டார்கள். மன்னரான பிரஜாதிபக்கை மிக மதிப்புடன் நடத்துவதாக உறுதி கூறி, நாட்டுக்குத் திரும்பி வரும்படி அவரை ஜனநாயக மந்திரிகள் நட்போடு வருந்தி யழைத்தார்கள். ஆனால், நாடு திரும்ப அவருக்கு இஷ்டமில்லை. கைதியான எதிர்ப் புரட்சிக்காரப் பிரபுக்களின் மரண தண்டனையை நிறைவேற்ற, சட்டப்படி அரசனின் அனுமதி வேண்டும். ஆனால், அவ்வனுமதி தரவும் மறுத்து, லண்டனிலிருந்தவாறே தமது பட்டத்தை, அரசர் பிரஜாதிபக் துறந்துவிட்டார். இது 1935-ஆம் ௵ நடந்தது. இதன் மேல்தான் பிரஜாதிபக்கின் அண்ணன் மகனை குழந்தை ஆனந்தாவைச் சிம்மாசன மேற்றினார்கள்.

1932-ஆம் வருஷத்துக்கு முன் பல முக்கிய அரசியல் சொற்கள் தாய்லந்தில் கிடையாது. ‘அரசியல் சட்டம்’, ‘ராஜீய சாஸ்திரம்’, ‘சீர்திருத்தம்’, ‘புரட்சி’ என்பவைபோன்ற பல சொற்களுக்கு, தாய்லந்து மொழியில் புதிய பதங்களைச் சிருஷ்டிக்கும் வேலையில் ஈடுபட்டவர் யார் தெரியுமோ? மேனாட்டுக் கல்வி பெற்ற வார்ன் வித்ய வாவராணி என்ற ஒரு தாய்லந்துக் கோமகன் தான். தாம் ராஜவம்சத்தைச் சேர்ந்தவரா யிருந்தும், ஜனங்கள் கட்சியில் அவர் அனுதாபங் கொண்டார். இது ஆச்சர்யமில்லையா?

பொதுவாகவே ஜப்பானிடம் தாய்லந்து ஜனங்களுக்குப் பெரிய பிரமிப்பு உண்டாம். ஏனெனில், தாய்லந்தில் பெரும் பகுதியும் காடு. விவசாயந்தான் முக்கியத் தொழில். ஆகையால், ஏழை நாடு. ஜப்பானோ நவநாகரிகக் கைத்தொழிலில் ஓங்கி நிற்கிறது. ஜப்பானைப்போலவே தாய்லந்தும் புத்த மதத்தைப் பின்பற்றுவது. இக் காரணங்களால் தான் அந்தப் பிரமிப்பு. பீபின் ஆட்சிக்குமுன் முதலே, ஜப்பானியர்களுக்குத் தாய்லந்தில் பூர்ண உரிமைகளும் வழங்கப்பட்டு வந்தன. ஜப்பானியர்கள் தாய்லந்திலே சிறந்த மதிப்புடன் கௌரவிக்கப்பட்டார்கள். என்றாலும், ஜப்பானோடு தாய்லந்து பரிபூர்ண நட்புக்கொள்ள முடியாதபடி, ஒரு பெரிய தடங்கல் இருக்கிறது.

அது என்னவென்றால், தாய்லந்தின் பொருளாதார வாழ்க்கை பூராவும் சீனர்களின் கையி லிருப்பதுதான். ஜப்பானியன், சீனரின் பரம சத்துரு அல்லவா? தாய்லந்தின் மிக முக்கிய வியாபாரம் அரிசி வர்த்தகந்தான். அரிசி வர்த்தகர் அனைவரும் சீனாக்காரர்களே. அடுத்தபடி தகர ஏற்றுமதி. தகரச் சுரங்கங்களின் முதலாளிகளும் சீனர்தான். ரப்பர்த் தோட்டக்காரர்களும் ரப்பர் வெட்டுவோரும் பெரும்பாலும் சீனர்; ரப்பர் வாங்குவோர் அனைவரும் சீனர். படகு கட்டுவோர், தரகுக் கடைக்காரர், தையல்காரர், செருப்புத் தைப்போர், தச்சர், கொல்லர், தோட்டக்காரர், மீன் வியாபாரிகள் இவரெல்லாம் சீனர். மனிதனுக்குத் தெரிந்த எந்தத் தொழிலிலும், தாய்லந்தில், சீனரே தலைதூக்கி நிற்கின்றனர். பாங்கி முதலாளிகளும், பலவித வர்த்தகர்களும் பெரும்பாலும் சீனர்தான். ஆகையால், தாய்லந்து சர்க்கார் சுலபத்தில் ஜப்பானுடன் நெருங்கிய நட்புக்கொள்ள முடியாது. மீறினால், பெரிய உள்நாட்டுப் புரட்சி ஏற்படுவதோடு, பிரிட்டன், அமெரிக்கா இந்த இரு நாடுகளின் விரோதத்தையும் சம்பாதித்துக் கொள்ள நேரும். பிறகு, தாய்லந்து பன்னெடுங்காலமாய்த் தான் போற்றி வந்த சுதந்தரத்தை இழந்து, ஒரு நாளும் விமோசனமில்லாத நிலையை அடைந்துவிடும்.

## ஹிட்லரின் மாயப் பெட்டி

ஹிட்லர் அதிகாரத்துக்கு வந்தவுடனே முதன் முதலாக ஒரு காரியம் செய்தார். ஜெர்மனியிலுள்ள சகல விவசாயப் பண்ணைகளுக்கும் மின்சார சப்ளைக்கு ஏற்பாடு செய்தார். பிறகு, விவசாயத்துக்கென்றே தயாரிக்கப்பட்ட சிறிய மோட்டார் இயந்திரங்களை, அந்தப் பண்ணைகளுக்கெல்லாம் அளித்தார்.

1937-ஆம் ௵ ஒவ்வொரு விவசாயப் பண்ணைக்கும் நன்றாய் ஸீல் போட்ட இயந்திரப் பெட்டி ஒன்று, நாஜி சர்க்காரிடம் மிருந்து வந்தது. “பொம்மைகள் உற்பத்தி செய்யும் பிரமாதமான ஒரு தொழிலுக்கு வேண்டிய இயந்திரங்கள் இந்தப் பெட்டியிலே இருக்கின்றன. இவற்றை எப்படி உபயோகிக்க வேண்டும் என்பதை, பெர்லின் நிபுணர்கள் வந்து உங்களுக்குக் கற்றுக்கொடுப்பார்கள். அதுவரையில் இதைத் திறக்காமல் பத்திரமாய் வைத்திருங்கள்” என்று ஒரு தாக்கீதும் கூடவே வந்தது. கிராமத்து விவசாயிகள் அப்படியே காத்திருந்தார்கள். பெட்டிகள் இரண்டு மூன்று வருஷ காலம் மூடியபடியே தூங்கிக் கொண்டிருந்தன.

சுமார் இரண்டு மூன்று வருஷத்துக்கு முன் போலந்து மீது பாயச் சிறிது காலத்துக்கு முன்னே, அந்தப் பெர்லின் நிபுணர்கள் காளான் முளைப்பதுபோல், ஜெர்மன் விவசாயப் பண்ணைகளில் புகுந்தார்கள். அந்த மாயப் பெட்டிகளையும் உடைத்தார்கள். உள்ளே பற்பல ஆயுதங்கள் இருந்தன. அவற்றைக் கைக்கொண்டு, யுத்த டாங்கிகளுக்கு வேண்டிய வெவ்வேறு பகுதிகளை வெவ்வேறு பண்ணைகளிலும் விவசாயிகளைக்கொண்டு, அந்த நிபுணர்கள் செய்யத்தொடங்கி விட்டார்கள்! இப்படி ஒவ்வொரு பண்ணையிலும் தயாராகும் தனித்தனிப் பகுதிகளெல்லாம் வேறிடம் சென்று ஒன்றுசேர்ந்து, டாங்கிகளாய் மாறி, போர் முனையை நாடிச் சாரை சாரையாய் ஊர்வலம் தொடங்கி விட்டனவாம்!

குழந்தைகள் அறிவு:

# பழமையும் புதுமையும்

(லியோ டால்ஸ்டாய்)

ஒரு மாணுக்கன் : 15 வயது (புதுமைப் பித்தன்)
ஒரு மாணுக்கன் : 16 வயது (பழமைப் பக்தன்)
வலோத்யா :
பெட்ருஷ்கா : } 8 வயதுள்ள இரட்டைக் குழந்தைகள்.

**புதுமைப்பித்தன் :** லத்தீனும் கிரேக்கும் எனக்கென்ன பிரயோசனம்? அவற்றிலே பிரயோசனமாயிருக்கக் கூடிய சகல விஷயமுந்தான் நமது தாய்ப் பாஷைகளில் மொழி பெயர்க்கப்பட்டுவிட்டனவே.

**பழமைப்பக்தன் :** கிரேக்க பாஷையை நீ படிக்காவிட்டால், 'இலியட்'டை நீ புரிந்து கொள்ள முடியாது.

**பு-பித்தன் :** அந்தக் காவியத்தைப் படிக்கவேண்டிய தேவையே எனக்குக் கிடையாது. அதைப் படிக்க எனக்கு ஆசையுமில்லை.

**வலோத்யா :** 'இலியட்' என்றால் என்ன?

**பு-பித்தன் :** ஒரு கதை.

**ப-பக்தன் :** ஆமாம். ஆனல், அதுமாதிரி இன்னொரு கதை உலகத்திலேயே கிடையாது.

**பெட்ருஷ்கா :** அப்படி என்ன அதற்கு உயர்வு வந்தது?

**பு-பித்தன் :** ஒன்றும் இல்லை. மற்றக் கதைகள் மாதிரிதான் அதுவும் ஒரு கதை.

**ப-பக்தன் :** அந்தக் கதைகளை நீ அறிந்துகொள்ளாவிட்டால், பழமையை நீ ஒரு நாளும் நன்ருய்ப் புரிந்து கொள்ள முடியாது.

**பு-பித்தன் :** இது ஒரு மூட நம்பிக்கை என்றே என் அபிப்பிராயம்; மத சித்தாந்தங்கள் என்ற மூட நம்பிக்கை



கள் இல்லையா, அந்தமாதிரி தான் இதுவும்.

**ப-பக்தன் :** (ஆத்திரமுற்று) மத சித்தாந்தங்கள் அர்த்தமற்ற வெறும் மூட நம்பிக்கைகள்தான். ஆனல், இதுவோ உலக சரித்திரமும் ஞானமுமாகும்.

**வலோத்யா :** மத சித்தாந்தங்கள் உண்மையிலேயே அபத்தமானவையா?

**ப-பக்தன் :** நீ எதற்காகக் குறுக்கே வந்து விழுகிருய்? இதையெல்லாம் பற்றி உங்களுக்கொன்றும் தெரியாது.

**வலோத்யா, பெட்ருஷ்கா :** (இருவரும் வருத்தமுற்று) எங்களுக்கு ஏன் தெரியாது?

**வலோத்யா :** ஒருவேளை உங்களுக்குப் புரிந்ததை விட அதிக நன்ருய் எங்களுக்குப் புரிந்திருக்கலாம்.

**ப-பக்தன் :** ஓ! பேஷ்! அப்படியா!! ஆனல், பேசாமல் வாயை மூடிக்கொண்டு உட்கார்ந்திருங்கள்; எங்கள் சம்பாஷணையிலே குறுக்கிடாதேயுங்கள். (புதுமைப் பித்தனைப் பார்த்து) புராதன பாஷைகள், நவீன வாழ்க்கைக்கு உபயோகப்பட மாட்டா என்ரு சொல்லுகிருய்? அப்படியானல், சிற்றுயிர் ஆராய்ச்சி, ரசாயனம், பௌதிகம், வான சாஸ்திரம் ஆகியவை பற்றியும் நீ சொல்லுகிறபடியே சொல்லிவிடலாம் அல்லவா? நட்சத்திரங்களின் தூரங்களையும் பரிமாணங்களையும் யாருக்கும் பயனற்ற இவை போன்ற பிற விவரங்களையும் அறிவதால் என்ன பிரயோசனம்?

**பு-பித்தன் :** இந்த விஷயங்களெல்லாம் பயனில்லை என்று ஏன் சொல்லுகிருய்? இவை மிக உபயோகமாயிற்றே.

**ப-பக்தன் :** எதற்கு உபயோகம்?

**பு-பித்தன் :** எதற்கா? சகலத்துக்குந்தான்—உதாரணமாக, கப்பல் ஒட்டுவதற்கு இவை உதவும்.

**ப-பக்தன் :** அதற்கு வான சாஸ்திரம் தேவை யில்லை.

**பு-பித்தன் :** சரிதான். விவசாயம், வைத்தியம், கைத்தொழில் இவைகளுக்கெல்லாம் விஞ்ஞான சாஸ்திரம் பிரயோகமாகிறதே, அதற்கென்ன சொல்லுகிருய்?

**ப-பக்தன் :** அதே விஞ்ஞான சாஸ்திரம், குண்டுகள் செய்யவும் யுத்தங்களிலும் புரட்சிக்காரர்களாலும் உபயோகிக்கப்படுகிறதே! ஜனங்கள் சிறப்பாய் வாழ விஞ்ஞான சாஸ்திரம் உதவுமானல்........

**பு-பித்தன் :** உன் சாஸ்திரமிருக்கிறதே, அதைக்கொண்டு ஜனங்கள் சிறப்பாய் வாழ முடியுமா?

**வலோத்யா :** எந்த விதமான சாஸ்திரம், ஜனங்களைச் சிறப்படையச் செய்கிறது?

**ப-பக்தன் :** மூத்தவர்கள் பேசும்போது நீ குறுக்கிடாதே என்று உனக்குச் சொன்னே னல்லவா? ஏன் உளறிக்கொண்டே யிருக்கிறாய்?

**வலோத்யா, பெட்ருஷ்கா :** (இருவரும் சேர்ந்து) உளறலோ, என்னவோ; ஆனல், எந்த விதமான சாஸ்திரம் ஜனங்களைச் சிறப்படையச் செய்கிறது என்று சொல்லேன், பார்ப்போம்.

**பு-பித்தன் :** அந்த மாதிரி ஒரு சாஸ்திரமும் கிடையாது. ஒவ்வொருவனும் தான்தானே அப்படி வாழவேண்டும்.

**ப-பக்தன் :** அவர்களோடு ஏன் பேசுகிறாய்? அவர்களுக்கு ஒன்றுமே புரியாது.

**பு-பித்தன் :** ஏன் புரியாது? (வலோத்யா, பெட்ருஷ்கா இருவரையும் நோக்கி) எப்படி வாழ்வது என்று பள்ளிக்கூடத்திலே சொல்லித்தர மாட்டார்கள்.

**வலோத்யா :** அதைச் சொல்லித் தராவிட்டால், அந்தப் பள்ளிக்கூடங்களில் படிக்க வேண்டிய தேவையே இல்லை.

**பெட்ருஷ்கா :** நாங்கள் பெரியவர்களாகும்போது, அநாவசியமான விஷயங்களைக் கற்கவே மாட்டோம்.

**வலோத்யா :** ஆனல், நாங்களாகவே சிறப்பாய் வாழ்வோம்.

**ப-பக்தன் :** (நகைப்புடன்) சகலத்தையும் இந்த ரிஷீசுவரர்கள் எப்படிச் சுருக்கிக் கூறிவிட்டார்கள், பார்த்தாயா!

---

*யுத்த காலத்தில், ஒற்றர்கள் எதிரி நாடுகளில் புகுந்து, அவ்விடத்து ரகஸ்யங்களைத் தங்கள் நாட்டுக்கு அனுப்பப் பலவிதத் தந்திரங்களைக் கையாளுகிறார்கள். ஸ்திரீகளின் விரல் நகங்களில் படங்களைத் தீட்டி, அதற்கு மேலே வர்ணப் பூச்சுச் செய்து வந்தானும் ஓர் ஒற்றன். அந்த ஸ்திரீகள் தங்கள் நாடு சென்று நகங்களின் வர்ணப் பூச்சை அழித்தால், படங்கள் பழயபடி தெளிவாய்த் தெரிந்துவிடும்!*

---

கற்பனைச் சித்திரம் :

# ஒரு கனவு

[வி. வாஸுதேவன்]

அழகுத் தெய்வத்தின் இருப்பிடம் போன்று அவ்வளவு அலங்காரமாக அந்த இடம் விளங்கியது. ஆம், ஸௌந்தர்ய தேவி அங்கே கொலு வீற்றிருக்கிறாள் என்பதில் சந்தேகமில்லை. உயர்ந்த மலைப் பிரதேசத்திலிருந்து தவழ்ந்து தவழ்ந்து, குன்றுகளுக்கிடையே ஓடிவரும் நீர் ஊற்றுக்களும், பச்சைப் புல் மைதானமும், அதன் மரகதப் பச்சையை வாரி அணைத்துக்கொண்டே செல்லும் ஆற்றுப்பிரவாகமும், பல நிறங்கொண்ட பட்சி ஜாதிகள் மெல்லெனப் பறந்து செல்வதும், பார்க்கப் பார்க்கப் பரவசத்தை அளிப்பனவா யிருந்தன. நிமிஷத்துக்கு நிமிஷம் பல அற்புதக் கனவுகளை இந்த வெளிச் ஸௌந்தர்யங்கள் என் மனதிலே சிருஷ்டித்துக் கொண்டே யிருந்தன.

நான் சாய்ந்துகொண் டிருந்த மகிழ மரம் கணத்துக்கொருதரம் மலர்களைத் தூவி என் கற்பனையைத் தூண்டியது. எண்ண அலைகள் வட்டமிட்டன: "ஆகா! விடியற் காலத்திய நட்சத்திரத்தைப்போல மேரு சிகரத்தின் உச்சியிலிருந்து, இவ்வானந்தங்களை அநுபவிக்க, நாம் என்ன பாக்கியம் செய்தோம்? ஆனல் அந்தோ! சிலர் இன்பத்தின் உச்சாணிக் கிளையிலிருந்தாலும், இன்னும் பலர் அதலபாதாளத்தில் விழுந்து, தத்தளித்துக்கொண்டிருக்கிறார்களே! அப்படி ஏக்கத்தில் வருந்திச் சாகும் மக்களைக் கரையேற்ற ஒரு வழியில்லையா? படைப்பின் ரகஸ்யம்தான் என்ன? வாழ்க்கை!—இந்த நான்கெழுத்துப் பெயருக்குள்ளே அடங்கிக் கிடக்கும் தத்துவம்தான் என்ன?" என்று பலவிதமாகச் சிந்தனையைச் செலுத்திக்கொண்டிருந்தேன்.

அந்தச் சமயத்திலே என்னவோ மெல்லிய நாதம் கேட்டது. அடடா! அந்த இசையின் அழகை நான் எவ்வாறு வர்ணிப்பேன்! வஸந்தத்தின் தென்றலிலே, மல்லிகைக் கொடிகளிடையே இருந்து எழும் ஓசை விவரிக்க முடியாத கிளர்ச்சியை உண்டாக்குகிற தல்லவா? அம்மாதிரி கிளர்ச்சி எனக்குண்டாயிற்று. திரும்பிப் பார்த்தேன்.

வெண்பட்டுப் போர்த்திய ஒரு இளம் மங்கை என் எதிரிலே நின்று கொண்டிருந்தாள். அவளுடைய தோற்றமும் பார்வையும் எவர் உள்ளத்திலும் பெரும் பக்தியை ஏற்படுத்துவதா யிருந்தது.

அவள் சற்றே புன்னகை காட்டி, மலர்ந்த முகத்துடன் பேசத் தொடங்கினாள்: "கொம்பிலிருந்து உதிர்ந்த மலரால் சூர்யனுடைய உஷ்ணத்தைத் தாங்க முடியாது. வாஸ்தவம் தான். ஆண்டவனின் நிழலிலிருந்து விலகிப் போனவர்களுக்கு அவனுடைய செய்கைகள் விளங்க மாட்டா என்பது உண்மையே. சற்று முன் நீ சிந்தித்தது நியாயமானதுதான். அந்தச் சந்தேகத்தைத் தீர்க்கும் பொருட்டே இங்கே வந்தேன். அதோ, அங்கே பார்" என்றாள் அத்தேவதை.

நான் அத்திசையில் பார்வையைச் செலுத்தினேன். முன்பு நான் கண்ட காட்சி எல்லாம் எப்படி மாயமாய் மறைந்ததோ தெரியாது.

புதிய காட்சிகள் தோன்றின. அழகும் ஒளியும் இன்பமும் நிறைந்த விடத்திலே, மனிதத் திரள் புகுந்தது. மலரைக் கசக்கி, ஒளியை மறைத்து, இன்பத்தைத் துன்ப மாக்கும் ரஸவாதத்திலே வெறிகொண்டு நின்றது அது.

"தாயே! புரியவில்லையே. என்ன இது? அவர்கள் ஏன் இப்படிச் செய்கிறார்கள்?" என்றேன் நான்.

"அறிவு மனிதனின் பாக்கியம். ஆனல், உணர்ச்சியால் பதப்படுத்தாத அறிவு, சாபமாகும். அனுபவத் தீயிலே இன்னும் அதை எத்தனை காலம் புடமிடவேண்டுமோ, தெரியவில்லை. அதுதான் இதோ நடந்து வருகிறது" என்றாள் அன்னை.

என் கனவு கலைந்தது.

---

## உண்மையான இன்பத்தை அனுபவிக்க

"டாக்டர் மஹாம்ப்ஸ் நைட் பில்ஸ்கள்"

உபயோகியுங்கள்



இவ்வுலகில் ஒவ்வொருவரும் பணக்காரனாயினும், ஏழையாயினும், ஆணாயினும், பெண்ணாயினும், யௌவனராயினும், வயோதிகராயினும், வீர்யத்துடனிருப்பதையே விரும்புவார்கள். அவர் யாருக்காவது வாழ்க்கையின் இன்பங்களை அனுபவிக்க முடியாதென்று தோன்றினாலோ அல்லது இனத்தின் இன்பங்களை அனுபவிக்க முடியாவிட்டாலோ, அல்லது நல்ல திடகாத்திரமுள்ள குழந்தைகள் பிறக்கவேண்டிய சக்தி யில்லாவிட்டாலோ அவர்கள் எப்பவும் **"டாக்டர் மஹாம்ப்ஸ் நைட் பில்ஸ்களை"** உபயோகிக்க வேண்டும். இந்த மாத்திரைகள் ஆச்சர்யமான குணத்தைக் கொடுக்கும். ஒவ்வொரு பெட்டியிலும் பத்து டோஸ்களிருக்கின்றன. வயது என்னவா யிருந்தாலும், விவாக வாழ்வின் இன்பங்களை பூரா திருப்தியுடன் அனுபவிக்க ஒரு டோஸ்கூடப் போதுமானது. இன்றைக்கே **"டாக்டர் மஹாம்ப்ஸ் நைட் பில்ஸ்கள்"** ஒருபெட்டி வாங்கி உபயோகித்துப் பாருங்கள். நீங்கள்முன்னால் அனுபவிக்க முடியாத இன்பத்தை அது தரும் என்பதற்கு சந்தேகமில்லை. ஒரு பெட்டியின் விலை ரூபாய் 5. தபால்கூலி அணா 9. எல்லா மருந்து வியாபாபாரிகளிடமும் கிடைக்கும்.

ஏஜண்டுகள்: **அப்பா & கம்பெனி**

அப்பா பில்டிங்ஸ், சைனா பஜார், மதராஸ்.



குணத்தில் மேலானது

## எல். ஜி.

**மிஸ்கி பெருங்காயம்**

மார்க்கை கவனித்து

வாங்கவும்



**சொல்லிக்கொள்ள முடியாமல் கஷ்டப்பட்டு வருகிறீர்களா?**



**மாதவிடாய் தடைபடுகிறதா?**

தற்கால விஞ்ஞான சாஸ்திரம் பெண்களுக்கு வரும் எல்லா விதமான நோய்களுக்கும் கடைசியாக மருந்து கண்டு பிடித்துவிட்டது. மாதவிடாய் தாமதத்திற்கு காரணம் எதுவானாலும் உலகில் பிரசித்திபெற்ற **நோவ்ரிஸ்** மிகவும் இயற்கையான ரீதியில் குணப்படுத்தும்.

**ஜாக்கிரதை:** கருவுற்றிருப்பதாக துளி சந்தேக மிருந்தாலும் உபயோகிக்கலாகாது; இல்லாவிட்டால் கருச்சிதைவு ஏற்படும். **(பாக்கிங் தபால் தனி.)**

**நோவ்ரிஸ் ½ பாட்டில் ரூ. 6-8-0**

**,, முழு பாட்டில் ரூ. 10-8-0**

**பிரசுரங்கள் இலவசம்:**

**நோவ்ரிஸ்—எல்லா ஸ்திரீ நோய்களுக்கும் ஏற்றது**

கிடைக்குமிடம்

**ரிவீரா டிரேடிங் கோ,**

P. O. Box 993 Bombay

# பந்தோபஸ்துக்கும் சேவைக்கும்




மாறிக்கொண் டிருக்கும் ஒரு உலகில், ஒவ்வொரு தனிப்பட்ட, வர்த்தக அபாயத்திற்கும் பாலிஸிகளுடன் கூடிய **யுனைடெட் இந்தியா லைப் ஆபீஸ்** உறுதி, பந்தோபஸ்து, நேர்மை இவைகளுடன் கூடியதாயிருக்கிறது. லைப் அஷ்யூரன்ஸின் நிகரற்ற மதிப்பு, கவர்ச்சி தரும் அம்சங்கள் ஆகியவை லைப் அஷ்யூரன்ஸை சாதாரண காலங்களில் ஒரு அவசியமாகச் செய்தன. யுத்தம், மதிப்புகள் மாறி வரும் இந்நாட்களில் புத்திசாலித்தனமாகச் சேமித்து வைத்துக்கொள்ள வேண்டுமென்பதும் இந்த அவசியத்தில் இப்போது சேருகிறது. **யுனைடெட் இந்தியா லைப் அஷ்யூரன்ஸை** நம்புங்கள்; தாமதமின்றி உங்கள் ஆயுளை இன்ஷ்யூர் செய்யுங்கள்.

# யுனைடெட் இந்தியா

**லைப் அஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்**

**1906**-ல் ஸ்தாபிக்கப்பட்டது.

யுனைடெட் இந்தியா லைப் பில்டிங்
பி. ஓ. பெட்டி 281, மதராஸ்.

டிரஸ்டி :

**சென்னை சர்க்காரின் அபிஷியல் டிரஸ்டி.**

இந்தியா, பர்மா, இலங்கை, மலேயா
ஆகிய இடங்களில் கிளைகளும்,
ஏஜென்ஸிகளும் இருக்கின்றன.

Sure Safe Healer for Family use
Kills Sceptic Germs, Promotes Growth of New Skin.

# VANISH

## [Ringworm Cure]

## "வானிஷ்"

**சர்மரோக நிவாரணி**

முகப்பரு, வேனல் கட்டி, கக்கூஸ்பத்து கரப்பான், பித்தவெடிப்பு, தீப்பட்ட புண் மற்றும் எல்லாவித சர்ம ரோகங்களுக்கும் சிறந்த ஔஷதம்.

Prepared by

**Dr. V. S. S. MONI & Brother,**
**NATIONAL PHARMACY,**
**KARAIKUDI**

# அகஸ்தியர் அமிர்தம்

## (18 வித குஷ்டரோக நிவாரணி)

இந்த அமிர்தம், ஹிமாலய பர்வதத்திலும், திபெத்திலும் இன்னும் அநேக மலைப்பிரதேசங்களிலுமுள்ள அபூர்வ மூலிகைகளைக் கொண்டு இந்து, சீன, புத்த சாஸ்திர முறைப்படியும் மகா யோகீஸ்வராள் அருளியபடியும் மிக்க கவனத்துடன் அதிக பொருட் செலவில் தயாரிக்கப்பட்ட ஒப்பற்ற மருந்து.

எப்பேர்ப்பட்ட நாளான வியாதியாக இருந்தபோதிலும், சரீர முழுதும் அழுகி ஜலம் சொட்டிக் கொண்டிருந்தாலும் ஐந்து மாதத்தில் கண்டிப்பாய் பூர்ண சுகம் தந்து பழைய திரேகம் போலாக்கும். ரத்த பரீக்ஷையும் செய்து கொள்ளலாம்.

தயாரிப்பவர்கள் :

**அம்பிகா ஔஷதாலயம் லிமிடெட்**
**17, அரிசிக்காரத் தெரு, மைலாப்பூர், மதராஸ்.**

வெயிலின் புழுக்கத்தைத் தணிக்க வழி யில்லையா? பல உபாயங்கள் உண்டு.

# கோடையிலே குளிர்ச்சி

கோடையில் காறை வீடுகளை விட, மண் சுவர்களைக் கொண்ட கூரை வீடுகள் மிகக் குளுமையாக இருக்கின்றன. ஆனால், சுண்ணாம்பும் செங்கல்லும் சேர்த்துக் கட்டிய நாகரிக வீடுகளில் வசிப்போர் கோடையிலே புழுங்கி வதங்கவேண்டியதுதானா? இல்லை. அந்த வீடுகளைக் குளிர்ச்சியாக வைத்துக்கொள்ளவும், பல முறைகள் கையாளப் படுகின்றன. அவற்றில் ஒன்றிரண்டு எல்லாருக்கும் தெரிந்தவைதான். உதாரணமாக, ஜன்னல்களில் விளாமிச்சை வேர்த் தட்டிகளைக் கட்டி அவை ஈரமாக இருக்க ஜலம் விட்டு வைத்துக்கொள்ளும் வழக்கத்தைக் கூறலாம். இன்னும் சில முக்கிய முறைகளை இங்கே கவனிப்போம்.

ஜன்னல்களின்மேல் காற்றோட்டம் கொடுக்கும் சிறிய ஜன்னல்களைச் சில வீடுகளில் நீங்கள் பார்த்திருக்கலாம். கோடைக் காலத்தில் இரவிலே இந்தச் சிறிய ஜன்னல்களைத் திறந்து வைத்துவிட வேண்டும். அப்படிச் செய்தால் இரவில் அறைக்குள் குளிர் காற்று நிரம்பிவிடும். அதிகாலையில் இந்தச் சிறு ஜன்னல்களையும் பெரிய ஜன்னல்களையும் சேர்த்து மூடிவிட வேண்டும். சூரிய உஷ்ணத்தினால் சூடாகிக் கொண்டே வரும் வெளிக்காற்று, அறையின் குளிர் காற்றுடன் கலக்க முடியாதபடி தடுப்பதற்குத்தான் இந்த உபாயம். அறையின் மச்சுக்கு மேல் உள்ள சூடு, அறைக்குள்ளே இருக்கும் காற்றைத் தாக்காதபடியும் ஏற்பாடு செய்ய வேண்டும். மச்சின் அடிப்பக்கத்தில் உஷ்ணத்தைக் கிரகிக்காத மரப் பலகைகளையும் காகித அட்டைகளையும் கொண்டு அடைத்து விட்டால், அறை குளிர்ச்சியாக இருக்கும். இவையெல்லாம் சாமான்யமாக யாரும் செய்து கொள்ளக்கூடிய வசதிகள்.

அறையை இன்னும் நல்ல குளுமையாக வைத்துக்கொள்ள, 'ஐஸ் கூலர்' என்ற ஒருவிதப் பெட்டியை உபயோகிக்கலாம். (படத்தைப் பார்க்கவும்.) இந்தப் பெட்டியை அறையின் ஒரு ஜன்னலின் பக்கமாக வைக்கவேண்டும். மற்ற ஜன்னல்களையெல்லாம் மூடிவிடவேண்டும். பெட்டியின் மேல்புறம் ஒரு விசிறி இருக்கிறது. விசிறியின் கீழே பனிக்கட்டி வைக்கும் இடம் இருக்கிறது. அதன் கீழே பனிக்கட்டியைத் தாங்கும் வலைக்கம்பிகளும், வலைக்கம்பியின் கீழே காற்று புகும் வழியும் இருக்கின்றன. விசிறி சுழலுகிறது. பெட்டியின் கீழே இருக்கும் வாசல் வழியாக உள்ளே புகும் காற்று, பனிக்கட்டியின் மேல் பட்டு மேலே வருகிறது. பனிக்கட்டிமீது பட்டுக் குளிர்ந்துவரும் இந்தக் காற்றை, அறைக்குள்ளே அந்த விசிறி வீசுகிறது. அறை குளிர்ச்சி யடைந்து விடுகிறது. இந்தப் பெட்டியில் வைக்க இருநூறு பவுண்டு பனிக்கட்டி தேவைப்படும்.




(1) கான்வாஸ் உறை. (2) விசிறி (3) மேல் பாகத் திறப்பு. (4) கதவு (5) பனிக்கட்டித் துண்டுகள் வைக்குமிடம். (6) பெட்டியின் கால்கள். (7) பனிக்கட்டிகளைத் தாங்கும் இரும்புக் கம்பிகள். (8) காற்று புகும் வழி. (9) சொட்டும் ஜலத்தை ஏந்தும் தட்டு. (10) அந்த ஜலம் வெளியே செல்லும் குழாய்.

இதே பெட்டியில் பனிக்கட்டிக்குப் பதிலாக, தண்ணீரில் நனைத்து ஈரமான பஞ்சுப் பட்டைகளை வைத்தும் அறையைக் குளுமை செய்யலாம். 'ஐஸ்-கூலர்' பெட்டியில் பனிக்கட்டி வைக்கும் இடத்தில் ஈரமான பஞ்சுப் பட்டைகளை வைக்கவேண்டியது. அந்தப் பட்டைகள் காற்றினால் சீக்கிரம் உலர்ந்துவிடுமாதலால், அந்தப் பட்டைகளின்மேல் ஓயாமல் கொஞ்சம் கொஞ்சமாக ஜலம் ஊற்றிக்கொண்டே யிருக்க, ஒரு தண்ணீர்க்குழாய் அமைக்கவேண்டும். அவ்வளவுதான். வேறே அதிக மாறுதல் எதுவுமில்லை.

வெயில் காலத்தில், உடம்பை ஆரோக்கியமாய்ப் பாதுகாக்க, இப்படி நமது அறைகளைக் குளிர்ச்சியாய் வைத்திருப்பது மட்டும் போதாது. இன்னும் சில நியமங்களையும் அனுஷ்டிக்க வேண்டும். லேசான உடைகளையே நாம் உடுக்கவேண்டும். கோடைக் காலத்தில் வியர்வையின் வழியாக நமது உடம்பிலிருந்து உப்பு வெளியே சென்றுவிடுகிறது. அப்படி இழந்த அளவு உப்பை மறுபடியும் நம் உடம்பு பெறுவதற்காக, கொஞ்சம் அதிகமாய்க் கோடையில் நாம் நமது உணவுடன் உப்பு உட்கொள்ள வேண்டும். குளிர்ச்சியான நீரையும் அதிகமாய்க் குடிக்கவேண்டும். ஆனால், பனிக்கட்டி யிட்ட தண்ணீரைக் குடிப்பது உடலுக்கு நன்மை செய்யாது.

காற்றோட்டமுள்ள இடத்திலேயே தங்கி யிருக்கவேண்டும். அறையின் குளிர்ச்சியி லிருந்து விட்டு, மிக உஷ்ணமான வெளிப் பக்கத்துக்குச் சென்றால், திடீரென்று உஷ்ணந் தாக்கிக் கெடுதல் உண்டாகக் கூடும். ஆகையால், வெளி உஷ்ணத்துக்கும் அறையின் உஷ்ணத்துக்கும் 15-டிகிரிக்கு மேல் வித்தியாச மில்லாமலிருக்கும்படிதான், நமது குளிர்ச்சிக் கருவிகளை நாம் அமைத்துக் கொள்ளவேண்டும்.

வ. சு. மணி

**சிறு கதை :**

# விசாலி

[ஸரோஜா]

> அவள் எங்கேயோ? கங்கையில் நீர்க்குமிழிகள் 'டப்' பென்று வெடிக்கின்றனவே, அதை ஏன் என்று கேட்போருண்டோ?

உடைந்த மனது. நீர் வழியும் கண்கள். துக்கத்தின் நடுவில் ஆறுதல் அளிக்கும் அக்குழந்தை ஒன்று. அது தன் சிறிய வாயைத் திறந்து சிரிக்கும் போதெல்லாம், வெம்பியிருக்கும் உள்ளத்தில் மகிழ்ச்சி தோன்றி மறையும். குழந்தைக்கு வயது ஒன்றிருக்கலாம். அவரையே உரித்துக் கொண்டு வந்திருந்தது. சகலமும் அவரே! இதென்ன வீண் சோதனை? மறைந்த எண்ணங்களை மண்ணில் புதைக்க வொட்டாமல், ஒவ்வொரு நிமிஷமும் அந்த முகத்தை நினைவூட்டிக் கொண்டேயிருந்தது அந்தப் பாலகனின் முகம்.

அவளும் எப்படியோ இரண்டு வருஷத்தைக் கழித்துவிட்டாள், ஏதோ ஒரு நம்பிக்கையைக் கொண்டு. பழைய ஞாபகங்கள் ஒரு கோவையாக அவள் மனக் கண்முன் வந்து நின்றன.

* *

அன்று பிரயாணத்துக்கு வேண்டிய எல்லா ஏற்பாடுகளும் நடந்துகொண்டிருந்தன. வீட்டில் ஒவ்வொருவர் முகத்திலும் பிரிவின் 'சோகம்' எழுதி ஒட்டியிருந்தது. மாடியில் நீர் நிறைந்த நேத்திரங்களுடன் அவனைப் பார்த்துக்கொண்டு விசாலி நின்றாள். பரந்த வானில் மின்னும் மின்மினிகள். சாய்வு நாற்காலியில் மிகுந்த கவலையுடன் உட்கார்ந்திருந்தான் நடராஜன். இருவரும் பேச முடியாமல் ஏதோ ஒருவிதச் சக்தியால் தடுக்கப்பட்டிருந்தனர். நடராஜனே முதலில் பேச ஆரம்பித்தான்.

“விசாலி! ஏன் நிற்கிறாய்? இப்படி உட்காரக் கூடாதா?” விசாலி முகத்தை மூடிக்கொண்டு தேம்பினாள். அந்தத் தேம்பல்களுக்கிடையே, “நீங்கள் போய்த்தான் ஆகவேண்டுமா?” என்ற தீனமான குரல் எழுந்தது.

“போகாமல்? ஐந்து வருஷம் பல்லைக் கடித்துக்கொண்டிரு. அப்புறம் நான் கைநிறையச் சம்பாதிக்கும்போது நீ எப்படியிருக்கப் போகிறாய், தெரியுமா? அப்பொழுது என் காரை நீதானே 'டிரைவ்' செய்யவேண்டும்?” என்றான் நடராஜன்.

தான் ஐந்து வருஷத்துக்குப் பிறகு கார் 'டிரைவ்' செய்வது, பெரிய பங்களா, வேலைக்காரர்கள் இத்யாதி அவள் கண் முன் மின்னி மறைந்தன. அந்தத் துக்கத்திலும் சிரித்துவிட்டு, “ஊரில் எல்லோரும் என்னமோ சொல்றாளே” என்றாள்.

“என்ன சொல்றா, ஸார், ஊரிலே?” என்று அவள் கன்னத்தை நெருடினான் நடராஜன்.

“சீமையில் பெண்கள் இங்கே மாதிரி இல்லையாம். புருஷர்களைப் பசப்பி விடுவார்களாமே” என்றாள் விசாலி.

நடராஜன் சிரித்துவிட்டு, “இந்த ஊரிலிருக்கும் மஹா ஜனங்களின் வாக்கை நம்பி விட்டாயோ நீ? பைத்தியம்! அப்படியெல்லாம் இல்லை” என்று சமாதானம் கூறினான்.

விசாலி நாற்காலிக் கட்டையின்மேல் உட்கார்ந்தாள்.

“போகட்டும். நான் ஒன்று கேட்கிறேன், தருவீர்களா?” என்றாள் குனிந்தபடியே.

“என்ன அது?” என்றான் நடராஜன்.

“கல்யாணத்தின்போது எடுத்த போட்டோ நன்றாகவேயில்லை. நாளைக்கு வேறே ஒன்று எடுத்துக் கொடுத்துவிட்டுப் போகவேண்டும். என்ன, தெரியுமா?”

“அப்படியே ஆகட்டும், விசாலி!” என்றான் நடராஜன்.

மறுநாள் இரவு பம்பாய் மெயிலில் புறப்பட்டான் நடராஜன். ஸ்டேஷனுக்கு வந்திருந்த விசாலி வண்டி கிளம்புகிறவரையில் சந்தோஷமாயிருந்தாள். வண்டி நகர்ந்ததும், அவனைப் பார்க்கக்கூட முடியாமல் அவளது கண்களில் நீர் நிரம்பிவிட்டது. அவனும் கைக்குட்டையால் கண்ணைத் துடைத்துக்கொண்டு, “விசாலி! அழாதே” என்று அவள் கையை ஆவலுடன் பிடித்துக் குலுக்கினான். விசாலி நிமிர்ந்து பார்ப்பதற்குள் வண்டி வெகுதூரம் போய்விட்டது. அதன் பிறகு ஒரு வருஷம் வரை கடிதம் வந்துகொண்டிருந்தது. விசாலிக்குக் குழந்தை பிறந்த செய்தியை எழுதின பிறகு, நடராஜனிடமிருந்து கடிதமே வரவில்லை. தெரு ஜன்னல் பக்கம் தபாலைப் பார்த்து வாடி வதங்கி நின்ற தினங்கள் அனந்தம். 'இன்று வரும்' என்று ஒவ்வொரு நாளும் நம்பிக்கை துளிர்த்துக்கொண்டே வந்தது. அந்த எண்ணமும் அடியோடு ஒழிந்துவிட்டது சில நாளில். வறண்ட அந்த மனதுக்கு இன்று ஆறுதல் அளிப்பது அந்தக் குழந்தையே. எத்தனையோ தடவை தற்கொலையை நாடியது அவள் உள்ளம். ஆனால், பாலு? அந்தக் குழந்தை எங்கே போகும்? “அப்பாவைத் தெரியாத அதற்கு அம்மாவும் போய்விட வேண்டுமா?” என்ற எண்ணம் தடுத்துவிட்டது.

அறிவின் எல்லைக்குள் எட்டாமல் வருஷங்கள் ஓடுகின்றன. அப்பா இருக்கும் வரையில் அந்தக் குடும்பத்தில் மதிப்பு இருந்தது அவளுக்கு. மாப்பிள்ளை நல்ல நிலைமைக்கு வரவேண்டும் என்று பாடுபட்ட மாமனாரில் அவரும் ஒருவர். 'நடராஜன் புத்திசாலி, விசாலிக்குத் தகுந்த புருஷன்' என்று அவர் எண்ணியதெல்லாம் பொய்த்தா போகவேண்டும்? ஹூம்! யாரை என்ன சொல்ல இருக்கிறது? அதே ஏக்கத்தால் அவரும் போய்விட்டார். தங்கை புருஷனுக்கு அப்பா என்னவோ சாதித்து விட்டதாக, அவளது தமையன் துவேஷம் கொண்டான். சகோதர பாசம்கூட அறுந்துவிட்டது பணத்தால்.

தன் 'பந்துக்கள்' என்ற மனுஷர்களை விட்டு, பாலுவுடன் விசாலி கல்கத்தாவுக்கு வந்துவிட்டாள்.

பாலுவைக் காப்பாற்ற வேண்டும். எப்படி? கண்ணியமாய் உழைத்து. ஆமாம், சமூகம் சுயநலம் நிறைந்தது. அதுவும் ஓர் இள மங்கையிடம் எப்படி அது நடந்து கொள்ளும் என்று சொல்லவா வேண்டும்?

2

மனதை மயக்கும் மாலை. உமாபதி ஒரு சீர்திருத்த வாதி. சமூகத்தின் ஊழல்களைப் பலமாகக் கண்டிப்பவன். கங்கைக் கரையில் குழந்தையோடு நிற்கும் விசாலியைக் கண்டான். முதலில் பேசத் தயக்கம். திரும்பவும், 'தென்னாட்டைச் சேர்ந்தவள் போலிருக்கிறதே' என்ற ஆவல் மிகுதியால் பேசத் தீர்மானித்தான்.

"உங்கள் ஊர் சென்னையா?"

"இல்லை. அதற்கருகில்........" என்று விசாலி தயங்கினாள்.

"இங்கே யார் இருக்கிறார்கள்?" என்று கேட்டான் உமாபதி.

"யாருமில்லை. நானும், குழந்தையும்" என்று பாலுவைப் பரிதாபமாகப் பார்த்தாள்.

"அப்படியானால் எங்கள் வீட்டுக்கு வாருங்கள். இப்படித் தனியா யிருப்பது நல்லதில்லை" என்று அழைத்தான் உமாபதி.

முதலில் திகைத்துத் தயங்கிய விசாலி, உமாபதியின் களங்கமற்ற வார்த்தைகளைக் கேட்டு, கொஞ்சம் திடங்கொண்டாள். என்றாலும், பயந்த மனதுடனேயே அவன் பின்னே நடந்தாள். அவள் நடையின் தளர்வைக் கண்ட உமாபதி, பாலுவை வாங்கிக்கொண்டான். விசாலிக்கு அவனிடத்தில் ஒருவித நம்பிக்கை விழுந்துவிட்டது.

உமாபதி உள்ளே நுழைந்ததும், அவன் தங்கை (பத்து வயதுப் பெண்) குழந்தையை வாங்கிக் கொண்டாள்.

உள்ளே ஒரு ஸ்திரீ. வயோதிகம் அணுகும் வயது. உமாபதியை அவள் ஆச்சர்யத்தோடு பார்த்தாள்.

"சென்னைப் பக்கமாம். சாண் வயிற்றுக்காகக் கல்கத்தாவைப் பார்த்துக்கொண்டு வந்திருக்கிறாள். என்ன பரிதாபம், பார்!"

"ஐயோ, பாவம்!" என்று இரக்கப்பட்டாள் அவன் அன்னை.

விசாலி சுவரோடு ஒட்டிக்கொண்டு நின்றாள். பாலு, தன் அம்மாவைக் காணோமே என்று ஹாலைச் சுற்றிப் பார்த்துக்கொண்டிருந்தான்.

"வா, அம்மா, உள்ளே" என்றாள் உமாபதியின் தாயார் மீனாக்ஷி. அன்று இரவு பூராவும் தன் துக்கம் நிரம்பிய கதையை மீனாக்ஷியிடம் சொன்னாள் விசாலி.

மறுதினத்தி லிருந்து அவள் எல்லோருடைய நம்பிக்கைக்கும் பாத்திர மாகிவிட்டாள். பாலுவின் அழகிய முகத்தைக் கண்டு இரங்காத இருதயம் இல்லை. விசாலி மறைவிலிருந்தே எல்லா வேலைகளையும் செய்துவிட்டு ஹாலுக்குப் போய்விடுவாள்.

"நடராஜன்? அவர் என்னை இப்படி அடியோடு மறந்துவிடுவாரோ?" என்று விசாலி உள்ளம் உருகும்போதெல்லாம், கண்ணீர் மடை திறந்ததுபோல் பெருகிவிடும். இப்பொழுது அவளது நிலைமை இரண்டுங் கெட்டானாகிவிட்டது. நடராஜன் உயிரோடு இருந்தால், தான் 'சுமங்கலி'. அதன் சின்னத்தை விபரம் அறியாமல் குறைக்க முடியுமா?

நடராஜன் இறந்து போய்விட்டானா? அதை அவளால் கற்பனை கூடச் செய்ய முடியவில்லை. அப்படி நினைக்கும்போது, "அம்மாடி! என்ன கொடூர சிந்தனை?" என்று அவள் மனது சொல்லும். அதனால், முகத்தைத் துடைத்துச் சிறிய குங்குமப் பொட்டு ஒன்று இட்டுக் கொள்ள வேண்டி யிருந்தது. அதுவே போதும் அவள் முகக் களையை எடுத்துக் காட்ட!

விசாலி வந்த எழெட்டு மாதங் கழித்து, மீனாக்ஷி தன் பெண் பிரசவத்துக்காகப் போகவேண்டியிருந்தது. முதலில் கொஞ்சம் 'வீட்டில் சிறிசை விட்டுவிட்டுப் போவது நல்லதா?' என்று யோசித்தாள். பிறகு 'உமாபதி அப்படிப்பட்ட பிள்ளையா என்ன?' என்ற தைரியத்துடன் போகவேண்டி யிருந்தது. விசாலிக்கு ரொம்பப் பயம். 'இந்த வீட்டில் எப்படித் தனியா யிருப்பது?' என்று கவலைப்பட்டாள். மீனாக்ஷி போய்ப் பத்து தினங்கள் வரையில் விசாலியின் மனம் 'திக் திக்' கென்று அடித்துக்கொண் டிருந்தது. நாளடைவில் காரண மற்ற அந்தப் பயம் நீங்கிவிட்டது.

3

உமாபதி சாயந்திரம் ஆபீஸிலிருந்து வந்ததும் பத்மாவுடன் சிறிது நேரம் சிரித்துப் பேசிக்கொண்டிருப்பான். பிறகு நண்பர்கள். அதற்குப் பிறகு, தனியாய்த் தோட்டத்தில் தூக்கம் வரும்வரை இயற்கையோடு சல்லாபம். பத்மா தூங்காமல் அவனோடு பேசிக்கொண் டிருப்பாளா? விசாலியும் சமையல் உள்ளுக் கடுத்த அறையில் வேலையை முடித்துவிட்டுப் படுத்துக்கொண்டு விடுவாள்.

ஒரு தினம் இயற்கைக்கு வெறி பிடித்தது. கூத்தாட வேண்டும் போலிருந்தது அதற்கு. சுழற்றிச் சுழற்றி ஒரு காற்று. வானத்தில் கறுத்த மேகங்கள். 'ஜோ' வென்று மழை. அந்த மழையில் நனைந்ததால் விசாலிக்கு உடம்பு என்னவோ போலிருந்தது. உள்ளூர ஜுரம். அதை வெளிக்காட்டிக்கொள்ளாமல், இரண்டு நாள் வேலை செய்துவந்தாள். அவளும் மனுஷிதானே? உமாபதிக்கு அவள் படுத்த பிறகுதான் தெரிந்தது. பத்மாவிடம் மருந்து கொடுத்து, விசாலிக்குக் கொடுக்கச் சொன்னான். ஜுரம் அதற்கெல்லாம் அசையவில்லை. பிதற்றல். நெருப்புப் பறந்தது. பத்மா ஒவ்வொரு நிமிஷமும், "அண்ணா! விசாலியைப் பார்த்தாப் பயமாயிருக்கே" என்றாள். அவளைப் பார்த்ததும், உமாபதி திடுக்கிட்டான்.

"நல்ல சங்கோஜம்! ஆபத்துக் காலத்தில்கூடவா பாவம் வந்து ஒட்டிக்கொள்ளும்?" என்று, விசாலியின் நெற்றியைத் தொட்டுப் பார்த்தான். அத்தனை ஜுரத்திலும் அவள் உடம்பு சிலிர்த்தது. திடுக்கிட்டுக் கையை எடுத்தான். மறுதினம் காலை கண்ணைத் திறந்து பார்த்தாள் விசாலி.

"என்ன பைத்யம் நீ? ஜுரமாயிருக்கும்போதே ஒரு வார்த்தை சொல்லமாட்டாயா?" என்று கடிந்துகொண்டான் உமாபதி.

விசாலி அவனைப் பார்த்ததும் திடுக்கிட்டு எழுந்து உட்கார முயன்றாள்.

"ரொம்ப நல்ல வேலே! நேற்று இருந்ததற்கு இன்று எழுந்திருக்க வாவது?"

"ஜுரம்தானே என்று பேசா திருந்துவிட்டேன்."

"இந்த வீட்டுக்கு நீ வந்து ஒரு வருஷத்துக்கு மேலாயிற்று. இன்னும் ஏன் இப்படிப் பயந்து நடுங்குகிறுய்?" என்றுன் உமா பதி.

விசாலி அவனேப் பரிதாபமாகப் பார்த்துவிட்டுத் திரும்பிப் படுத்துக்கொண்டாள். அந்தப் பார்வை அவன் உள்ளத்தையும் உயிரையும் ஒருங்கே கலக்கிவிட்டது.

"பாவம், என்ன வாழ்க்கை! புருஷன் பிரிந்து எத்தனே நாளாயிற்று! திக்கற்ற பேதை. அர்த்தமற்ற பயம் அவளே ஊமையாக்கி விட்டது" என்று நினேத்தான் உமாபதி. விசாலிக்கு உடம்பு தேறிவிட்டது. பழையபடி வேலே செய்ய ஆரம்பித்தாள். உமாபதிக்கு மாத்திரம் அவளேப் பார்க்கப் பரிதாபமாயிருந்தது. என்ன செய்வது? அவள் வாய் இருந்தும் ஊமை.

4

மனதில் துன்பம். அதன் இடையில் ஏதோ ஒருவித இன்பம். அது பூரணமாயில்லே. கனவு கண்டு சிரிப்பதுபோல், அவளது துக்கங் கலந்த முகத்தில் புன்முறுவல். காரணம்? தெரியவில்லே.

இரவு மணி ஒன்பது. பாலு தூங்கிவிட்டான். பத்மாவுங்கூட. உமாபதி இல்லே என்ற ஒரு தைர்யத்துடன் தோட்டத்தில் நுழைந்தாள் விசாலி. அடர்ந்த தென்னங் கீற்றுக்களில் நிலா படிந்திருந்தது. அவள் திடுக்கிடும்படியாய், "விசாலி" என்றுன் உமாபதி.

"நீங்களா?" என்றுள் விசாலி.

"பயம், பயம்! எனிப்படிப் பயப்படுகிறுய்?" என்றுன் உமாபதி.

"நான் போகிறேன்" என்றுள் விசாலி.

"எங்கே?"

"வீட்டுக்குள்" என்ற வண்ணம் திரும்பினுள் அவள். அவளது புடவைத் தலேப்பு மரத்தில் போட்டிருந்த ஊஞ்சல் வளேயத்தில் சிக்கிக்கொண்டது.

உமாபதி அவளேச் சேர்த்து அணேத்துக் கொண்டான்.

ஒரு நிமிஷம் — இல்லே, ஒரு வினுடி அவளுடைய மனம் அவனது இதய ஒலத்துக்கு எதிரொலித்தது.

"ஐயோ! என்ன காரியம் செய்தீர்கள்!" என்று அவனே நோக்கினுள்.

"பாவமில்லே, பேதையே! மனிதன் செய்யும் பாவத்தில் ஒரு துளிக்கூட நீ செய்யவில்லே. கோபித்துக் கொள்ளாதே. உன் மனம் துணிந்தால், பகிரங்க விவாகம். இல்லாவிட்டால் மனிதர் கண்ணுக்கு அகப்படாமல் எங்காவது........."

"ஐயோடி!" என்று வீறிட்டாள் விசாலி.

ஆனுல், அந்தச் சப்தம் வெளியே வரவில்லே. தொண்டையில் ஏதோ அடைத்தமாதிரி இருந்தது. 'என்ன பாவத்தைச் செய்துவிட்டாய் நீ!' என்று அவள் இதயம் அலறியது.

அருணேதயம்.

வீட்டில் அந்தகாரம்.

"விசாலி எங்கே?"

பாலு தினம்போல் எழுந்து நிம்மதியாய் விளேயாடிக்கொண்டிருந்தான்.

விசாலி எங்கேதான் போயிருப்பாள்?

கங்கையில் அளவிறந்த நீர்க் குமிழிகள் தினம் தோன்றி 'டுப்' பென்று வெடிக்கின்றன.

விசாலியும் இந்தப் பிரபஞ்ச சாகரத்தில் ஒரு நீர்க்குமிழிதானே!

ஆனுல், பாலு?

அவன் உமாபதியின் மனதுக்கு ஆறுதல் அளித்து வருகிறுன்.

## தெய்வ தரிசனம்

சூரிய அஸ்தமனத்தின் அற்புதத்தையோ, சந்திரனின் அழகையோ நான் வியந்து போற்றுகையில், என் ஆத்மா குதூகல முற்று, அனேத்தையும் படைத்த ஆண்டவனே வணங்குகிறது. இந்தச் சகல சிருஷ்டிகளிலும், **அவனேயும் அவனது** கருணே வெள்ளத்தையும் காண, நான் முயற்சிக்கிறேன். ஆனுல், சூரிய அஸ்தமனங்களும் சூரியோதயங்களும் **அவனே** நான் நினேக்க உதவாவிட்டால், அவையுங்கூட, வெறும் இடையூறுகளே யாகும். ஆத்மா உயர்ந்தெழுவதற்குத் தடையான எதுவும், வெறும் மயக்கமும் மாயவலேயுமாகும். தேகமும்கூட அப்படித்தான் பல சமயம் மோட்ச மார்க்கத்தைத் தடுக்கிறது.

—**மகாத்மா காந்தி.**

* * *

## காகிதமே கடவுள்!

பத்திரிகைகளெல்லாம் காகிதத்துக்குத் தவிக்கும் இந்தக் காலத்தில், ஜப்பானேப்பற்றிய இந்தத் தகவல் மிக ரஸமாயிருக்கும்.

காகிதத்தை ஜப்பானியர் கடவுளின் சின்னமாகவே மதிக்கிறுர்கள். காகிதத்துக்கும் கடவுளுக்கும் ஜப்பானிலே 'காமிக்' என்ற ஒரே பெயர்தான். ஜப்பானியர் எந்தச் சிலேகளேயும் வணங்குவதில்லே. காகிதத்தையே வைத்து வணங்குகிறுர்கள். காகிதம் செய்வதற்குத் தேவையான ஒரு மரத்துக்கு, 'கோஜோ' என்பது ஜப்பானியப் பெயர். 'கோஜோ' என்றுல், 'கடவுளின் ஆடை' என்று அர்த்தம்.

மகாத்மா காந்தி ஹரிஜன இயக்கத்தை எப்படி ஆரம்பித்தார்? தீண்டாதோருக்கு 'ஹரிஜனங்கள்' என்ற பெயரை ஏன் சூட்டினார்?

# : ஹரிஜன இயக்க ஆரம்பம் :

—[டி. எஸ். அவிநாசிலிங்கம் செட்டியார்]

வட்டமேஜை மகாநாட்டில் தீண்டாதார் பிரச்சினையைப் பற்றிய விவாதம் வந்தபோது, மகாத்மாஜி அங்கே சொல்லிய வார்த்தைகள் குறிப்பிடத் தக்கன: "தீண்டாதாரைப்பற்றி உங்கள் பேச்சு எனக்கு மிகுந்த வருத்தத்தை உண்டாக்கிற்று. சீக்கியர்கள் சீக்கியர்களாகவே சாசுவதமாயிருக்கலாம். முஸ்லீம்களும் கிறிஸ்தவர்களும் அப்படியே. ஆனால், தீண்டாதார்கள் சாசுவதமாகத் தீண்டாதார்களாயிருக்கப் போகிறார்களா? தீண்டாமை இருப்பதைவிட, ஹிந்து தர்மமே அழிவுறுவதைத்தான் நான் விரும்புவேன். தீண்டாதாருக்குத் தனித்தொகுதி கொடுக்க வேண்டுமென்று சொல்லுகிறவர்கள், இந்திய சமூகத்தின் அமைப்பை நன்றாக உணரமாட்டார்கள். ஆதலால், ஒரு விஷயத்தை இங்கே கண்டிப்பாகச் சொல்ல விரும்புகிறேன். நான் தனியாக ஒருவனே இருந்தாலும், இந்த ஏற்பாட்டை என் உயிரைக் கொடுத்தும் எதிர்ப்பேன்" என்று அவர் உரைத்தார். இந்த வார்த்தைகள், வெறும் பிரசங்க வேகத்தில் சொல்லப்பட்டன வென்று அப்பொழுது எல்லோரும் நினைத்தார்கள்.

சிறுபான்மையோர் பிரச்சினை வட்டமேஜை மகாநாட்டில் முடிவு செய்யப்படாதது நம் துரதிர்ஷ்டம். பிரிட்டிஷ் பிரதம மந்திரி தாமே அது விஷயத்தில் ஒரு முடிவு சொல்லுவதாக ஏற்றுக் கொண்டார். இந்தியா திரும்பிய பிறகும் மகாத்மாஜி அது சம்பந்தமாகத் தம் அபிப்பிராயத்தைத் தெளிவுபடுத்தி, ஒரு கடிதம் (மார்ச் 11, 1932) ராம்சே மாக்டொனால்டுக்கு (அப்பொழுது பிரிட்டிஷ் பிரதம மந்திரியாக இருந்தவர்) எழுதியிருந்தார். தீண்டாதோருக்குத் தனித்தொகுதி கொடுக்கப்படுமானால், தாம் சாகும் வரை பட்டினியிருந்து அதை எதிர்க்கப் போவதாக, அதில் குறிப்பிட்டிருந்தார். ஆனால் பிரிட்டிஷ் பிரதம மந்திரி ஆகஸ்டு 17-ஆம் தேதி தெரிவித்த முடிவில் தீண்டாதாருக்குத் தனித்தொகுதியே கொடுக்கப்பட்டிருந்தது. எனவே, செப்டம்பர் 20-ஆம் தேதி தம் உண்ணாவிரதத்தை ஆரம்பிக்கப் போவதாக, பிரிட்டிஷ் கவர்ன்மெண்டாருக்கும் இந்தியா கவர்ன்மெண்டுக்கும் தெரிவித்து, தாம் குறிப்பிட்டிருந்த தேதியில் குறிப்பிட்ட காலத்தில் தம் விரதத்தைத் தொடங்குவதென மகாத்மா முடிவு செய்தார்.

காந்திஜிக்கும் பிரிட்டிஷ் பிரதம மந்திரிக்கும் நடந்த கடிதப் போக்குவரத்துக்கள் செப்டம்பர் 12-ஆம் தேதியே பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்டுவிட்டன. மகாத்மாஜியின் உண்ணாவிரதச் செய்தியைக் கேட்டுத் தேசமுழுதும் திடுக்கிட்டது. லட்சக்கணக்கான மக்களின் மனதில் அளவில்லாப் பீதி குடிகொண்டது. கணக்கற்ற தந்திகள் இந்தியாவின் எல்லாப் பாகங்களிலிருந்தும் வெளிநாடுகளிலிருந்தும் வந்து குவிந்தன. இக்கொடும் வேதனைக்குள்ளாக வேண்டாமென்று அவை எல்லாம் மகாத்மாஜியைக் கேட்டுக் கொண்டன. காந்திஜியின் கோரிக்கைக்கிணங்கி அவர் உயிரைக் காப்பாற்றும்படி, பல ஸ்தாபனங்களும் பெரியோர்களும் பிரிட்டிஷ் பிரதம மந்திரிக்குத் தந்தியடித்தார்கள். ஹிந்து சமூகத்தின் பிரதிநிதிகளும் தீண்டாதார் சமூகப் பிரதிநிதிகளும் சேர்ந்து தனித்தொகுதியை விலக்க வேண்டுமென்று கூறினால், அதை அனுசரித்துத் தனித்தொகுதியை விலக்குவதில் தமக்கு ஆட்சேபமில்லையென, பழியைப் பொதுஜனங்கள் மேலேயே அவர் போட்டார். நாட்கள் பறந்துகொண்டிருந்தன. செப்டெம்பர் 20-ஆம் தேதியும் வந்தது. அன்று மத்தியானம்தான் மகாத்மா குறித்திருந்த நேரம். அன்று அவர் உண்ணும் உணவே கடைசி உணவாகிவிடுமோவென்று பயந்து, பலர் கதறியழுதனர். இவ்வளவுக்கும் மனஞ்சலியாத அவர் புன்சிரிப்புடன், "என்னைக் காப்பாற்ற ஆண்டவன் இருக்கிறான். நீங்கள் ஏன் பயப்படுகிறீர்கள்?" என்று சொல்லி, தம் உபவாசத்தை ஆரம்பித்தார்.



உபவாச காலத்திலேகூட, காந்திஜி நிம்மதியாக எழுதிக் கொண்டும் படித்துக்கொண்டுமே யிருந்தார்.

இந்த பீஷ்மப் பிரதிக்ஞையைக் கேட்டு உலகம் நடுங்கிற்று. மகாத்மாஜியின் உயிர், அனைத்தினும் உயர்ந்ததல்லவா? எனவே, எதைக் கொடுத்தும் அவரைக் காப்பாற்ற வேண்டும் என்று எல்லோரும் விரைந்தோடி வந்தனர். காங்கிரஸ்

தாத்தாவாக விளங்கும் பண்டித மதன் மோஹன மாளவியா, டாக்டர் சப்ரூ, ஸ்ரீ ஜயகர், ஸ்ரீ அம்பேத்கார், ஸ்ரீ எம். சி. ராஜா, ஸ்ரீ ஜி. டி. பிர்லா முதலிய எண்ணிறந்த தலைவர்கள் கூடி, இது விஷயமாக ஆலோசித்தனர். இக்கூட்டம் முதலில் பம்பாயில் கூடிற்று. ஒரு முடிவுக்கு வரவேண்டுமென்ற எண்ணம் எல்லோர் மனதிலும் இருக்கும்போது, முடிவு ஏற்படுவதில் என்ன சந்தேகம்? எல்லோர் மனதிலும் ஒரே எண்ணமே குடிகொண்டிருந்தது: அதுதான் மகாத்மாஜியைக் காப்பாற்ற வேண்டுமென்பது. அவர்கள் காந்திஜியின் முன்னிலையில் கூடி, தங்கள் முடிவை அவருக்குத் தெரிவித்தார்கள். இதுவே பூனா ஒப்பந்தம் என்று வழங்குகிறது. இவ்வொப்பந்தம் பிரிட்டிஷ் சர்க்காருக்கு அனுப்பப்பட்டு அவர்களாலும் ஒப்புக்கொள்ளப் பட்டது. இந்தியாவின் ஒப்பற்ற பொக்கிஷமாக விளங்கும் மகாத்மாஜியின் உயிரும் உலகின் நன்மைக்காகக் காப்பாற்றப்பட்டது.

இம் மகத்தான காரியங்கள் நடைபெறும் போது, நாங்கள் கடலூர்ச் சிறையில் இருந்தோம். மகாத்மாஜி சாகும் வரையில் உண்ணாவிரதம் இருக்க உத்தேசித்திருக்கிறார் என்ற செய்தி இடி போல் எங்களுக்கு வந்தது. முழு விபரங்களும் அறிய அங்கே அசக்தர்களா யிருந்தபடியால், எங்கள் புத்தியை அச் செய்தி குழப்பிற்று. பிறகு, கொஞ்சம் கொஞ்சமாக விஷயம் தெரிந்தது. தமக்கு அனுதாபமாக எவரும் பட்டினி யிருக்கக் கூடாதென அனைவரையும் மகாத்மாஜி கேட்டுக் கொண்டிருந்தார். எனினும், மகாத்மாஜி விரதம் ஆரம்பித்த தினத்தன்று உணவு உண்ணாமல் மகாத்மாஜியின் உயிருக்காகப் பலர் பிரார்த்தனை செய்தார்கள். சிலர் தொடர்ந்து சில தினங்கள்கூடப் பட்டினி கிடந்தார்கள் என்று நினைக்கிறேன். கடைசியில், பூனா ஒப்பந்தம் ஏற்பட்டு, மகாத்மாஜி பட்டினியை நிறுத்தி உணவருந்தினார் என்ற செய்தி எங்களுக்கு அளவில்லாச் சந்தோஷத்தை யுண்டாக்கிப் புத்துயிர் அளித்தது.

தீண்டாத வகுப்பினருக்கு மட்டும் தனித்தொகுதியே யிருப்பதற்குப் பதிலாக அவர்களையும் ஏனைய ஹிந்து சமூகத்துள் சேர்த்துக் கூட்டுத் தொகுதி அளிக்க வேண்டுமென்பதே இவ் விரதத்தின் நோக்கமாயிருந்தபோதிலும், அதன் பயன் இத்தொகுதி மாற்றத்தோடு நின்று விடவில்லை. அது ஹிந்து சமூகத்தாரின் மனதிலேயே, நாடு முழுதும், ஓர் ஆழ்ந்த உணர்ச்சியை உண்டாக்கியது. உயர்ந்த ஜாதியாருக்குத் தாழ்த்தப்பட்ட மக்களின் முன்னேற்றத்தில் உள்ள கடமையை உணர்த்த, இது ஒரு ஏதுவாயிருந்தது. இதிலிருந்து தீண்டாதார்க்குச் சேவை செய்வதில் ஒரு புது ஆர்வமும் உற்சாகமும் தேசமுழுதும் பிறந்தன. பொது ரஸ்தாக்களில் அவர்கள் நடக்கவும் உரிமையில்லாத இடங்களில் அவ்வுரிமைகள் உடனே வழங்கப்பட்டன. ஆயிரக்கணக்கான இடங்களில் அவர்களுக்குத் தண்ணீர் வசதியும் படிப்பு வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டன. பொதுக் கிணறுகளும், பல இடங்களில் உயர்ந்த ஜாதியினருக்குச் சொந்தமான கிணறுகளும், அவர்களுக்குத் திறந்து விடப்பட்டன. தேசமெங்கும் அவர்களைச் சமத்துவமாக நடத்தவேண்டுமென்ற கிளர்ச்சி பரவி, பலவிதங்களில் அவ்வாறு அனுபவத்தில் நடத்தியும் காண்பிக்கப்பட்டது.

மகாத்மாஜி இந்த உண்ணாவிரதத்துக்குப் பிறகும் சும்மா இருந்து விடவில்லை. அவர் இப்பணியே தமது பிற எல்லாப் பணிகளையும் விட முக்கியமானதாகக் கருதினார். உயர்ந்த ஜாதியினருக்குச் சரியான மனமாற்றம் உண்டாகவில்லையென மறுபடியும் ஒரு வாரம் பட்டினியிருந்தார். அதன் முடிவில் தீண்டாதார் சேவைக்கெனவே ஒரு சங்கமும் நிறுவப்பட்டது. தீண்டாமை என்ற எண்ணத்தை ஒழிக்க முயலும் நாம் அவ்வார்த்தையை மட்டில் வைத்துக் கொண்டிருப்பானேன்? ஏழை மக்களும் தாழ்ந்தவர்களும் ஆண்டவனுடைய பந்துக்கள் அல்லவா? எனவே, அவர்களுக்கு 'ஹரிஜனங்கள்' என்ற பெயரை மகாத்மா அளித்தார். அவர்களது சேவைக்கென ஏற்படுத்தப்பட்ட சங்கத்துக்கு ஹரிஜன சேவகர் சங்கம் என்ற பெயர் கொடுக்கப்பட்டது. ஹரிஜன சேவகர் சங்கத்துக்கு ஸ்ரீ ஜி. டி. பிர்லா தலைவராகவும் தக்கர் பாபா காரியதரிசியாகவும் அமர்ந்து இன்றளவும் தீவிரமாக வேலை செய்து வருகிறார்கள். எல்லா மாகாணங்களிலும் கிளைச் சங்கங்கள் ஏற்படுத்தப் பட்டன. தமிழ் நாடு ஹரிஜன சேவா சங்கம் டாக்டர் ராகவன் அவர்கள் தலைமையில் ஆரம்பிக்கப் பட்டது. மாகாணச் சங்கங்களின் கீழ் ஜில்லாச் சங்கங்களும் தாலுக்காச் சங்கங்களும் நிர்மாணிக்கப்பட்டு, அவை ஹரிஜனங்களுக்கு எல்லா விதமான சேவைகளும் செய்து வருகின்றன.

## ஹிட்லரின் வருமானம்



யுத்தம் நடந்து கொண்டிருந்தாலும், ஹிட்லரின் சொந்த வருமானம் குறைய வில்லையாம். அவருக்கு வருஷம் ஒன்றுக்கு 2,00,000 பவுன்களுக்கு மேல் வரும்படி கிடைக்கிறதாம். அந்த விவரம் வருமாறு:

| | |
|---|---|
| ஜெர்மன் ரீச் (குடியரசு) தலைவர் பதவிக்குச் சம்பளம் | 20,000 |
| சான்ஸலர் (பிரதம மந்திரி) பதவியின் சம்பளம் | 3,000 |
| மெயின் காம்ப் புஸ்தகத்தால் கிடைக்கும் 'ராயல்டி' வருவாய் | 133,750 |
| பிரான்ஸ் எதெர் பிரசுர கர்த்தர்களிட மிருந்து | 23,750 |
| 'வால்கிஷேர் பியோ பாச்டர்' பத்திரிகையால் கிடைக்கும் லாபம் | 14,300 |

கோயரிங்குக்கோ, வருஷம் ஒன்றுக்கு ஒரு லட்சம் பவுன் இன்னும் வருவாய் வந்து கொண்டிருக்கிறதாம்.

> வாழைக்கு ஒரு காலத்திலே விதை இருந்தது. மனிதன் அந்த விதையும் இல்லாதபடி, தின்ன ஆரம்பித்தான். வாழை வர்க்கமே அழிந்து விடுவதா? வாழைக்கு அது சம்மதமில்லை. தன் இனத்தைப் பெருக்க, புதுவழி ஒன்று கண்டு பிடித்தது. இயற்கையிலே ஜீவராசிகள் இனம்பெருக்கும் இந்த விந்தையைப் பாருங்கள்.

# 'சாதிப் பலாப்பழம்'

[மு. அருணசலம், எம். ஏ.]

உயிர்களுக்குத் தம் இனத்தைப் பெருக்க வேண்டுமென்ற உணர்ச்சியும் அதைப் பெருக்குவதில் ஓர் ஆனந்தமும் எந்தக் காலத்திலுமே இருந்து வந்திருக்கின்றன. ஆதியில் உயிர்கள் தோன்றிய போது, அவயவம், உருவம், இந்திரியங்கள் முதலியன ஒன்றும் இல்லாத நிலையில், அவை தோன்றின; பிறகு காலக் கிரமத்தில் வளர்ச்சி பெற்றன; உருவமுண்டாயிற்று, அவயவங்கள் தோன்றின, இந்திரியங்களும் ஏற்பட்டன; உணர்ச்சித் தத்துவத்தையும் பெற்று, சிறுபுழு, பூச்சி என்பதாக வளர்ந்து வந்தன; இவற்றிலிருந்து, ஊருகின்ற பெரிய பிராணிகளாக அபிவிருத்தியடைந்தன; பறக்கும் பறவைகள் தோன்றின; விலங்குகள் தோன்றின; முடிவிலே, இவற்றின் மேலாக மனிதனும் வளர்ந்துவிட்டான். இது இக்காலத்திய உடற்கூற்றுக் கலைவல்லார் கண்ட உண்மை.

இந்த வளர்ச்சி ஏற்படுவதற்குப் பல்லாயிரம் நூற்றூண்டுகள் சென்றன. ஆதியிலிருந்த உருவமும் உணர்ச்சியும் அற்ற ஒரு அற்ப உயிரிலிருந்து இத்தனை நூற்றூண்டுகளாக முறைப்படி வளர்ந்து இன்றைய மனிதனாக மாறிவந்த வளர்ச்சியில் உள்ள படிக்கிரமங்களைப் பார்ப்போமானால், அந்த உயிரானது தன் இனத்தைப் பெருக்குவதற்காக நெடுகிலும் மிகப் பாடுபட்டிருக்கிறது என்பது புலனாகிறது. இனத்தைப் பெருக்குவதற்காகவே உயிர்கள் உணவை உண்டு வளர்ந்தன. ஆதியில் தோன்றிய நுண்ணிய உயிருக்கு இவ்வுணர்ச்சி பூரணமாக இருந்தமையால் தான், இவ்வளவு வளர்ச்சியும் கிரமமாக ஏற்பட முடிந்தது.

இனத்தைப் பெருக்குவதிலே உயிர்களுக்கு ஆனந்தமும் இருக்கிறது. இதையும் நாம் பார்க்கலாம். சில அற்ப உயிர்கள் இதற்காக எவ்வளவு பாடு படுகின்றன என்பதைக் கவனித்தால் போதும். மழை ஒரு துளி தூறிவிட்டால், எங்கெல்லாமோ உள்ள எறும்புகள் அத்தனையும், தலைக்கொரு முட்டையாகத் தூக்கிக் கொண்டு, தண்ணீர் படாத இடத்துக்குப் போகின்றன. அவை ஒழுங்காகப் போகும் அழகை நாம் பார்த்துக் கொண்டேயிருக்கலாம். ஒரு குஞ்சுக்காக அற்பக்குளவி எவ்வளவு சிரமப்படுகிறது! சிறு சிறு உருண்டையாக மண்ணை உருட்டித் தூக்கிக்கொண்டு வந்து, சிறிய கூடொன்று கட்டி, அதனுள் முட்டையிடுகிறது. இவ்வளவோடு நிற்கவில்லை. முட்டையிலிருந்து வெளிப்படும் குஞ்சுக்குத் தீனி வேண்டுமென்பதற்காக, சிறிய புழுக்களைப் பிடித்துத் தன் கொடுக்கினால் அவற்றைக் கொட்டி, முட்டையோடு கூடக் கூட்டினுள் வைத்து மூடிவிடுகிறது. முட்டை பொரிந்து குளவிக் குஞ்சு வெளிப்பட்டபின், இந்தப் புழுவைச் சிறிது காலம் தின்று வளர்ந்து, இறக்கை முளைத்த பிறகு கூட்டை உடைத்துக் கொண்டு வெளியே பறந்து போய் விடுகிறது.

பறவைகளோ முட்டையிட்டு, முட்டை பொரிகிற வரையில் அடை காத்து, உரிய காலத்தில் முட்டை பொரியச் செய்கின்றன. வெளிப்பட்ட குஞ்சுகளுக்கு உணவூட்ட இவை எவ்வளவு கவலைப் படுகின்றன என்பதை நாம் பார்க்கிறோம். தாய்ப் பறவையானது பூமியில் சிந்திக் கிடக்கும் தானிய மணிகளைத் தன் அலகினால் பொறுக்கி எடுத்துச் சென்று, குஞ்சின் வாயிலே ஊட்டுகிறது. மிருகங்களிடத்திலும் இந்த உணர்ச்சியைக் காண்கிறோம். நாய், பூனை, பசு முதலிய நாட்டு மிருகங்கள் எவ்வளவு ஆசையோடு தம் குட்டிகளையும் கன்றுகளையும் பாதுகாக்கின்றன! இளம் நாய்க்குட்டி அல்லது பூனைக்குட்டியை அதன் தாயிடமிருந்து எளிதில் பிரித்து விட முடியுமா? காட்டு மிருகங்களைப் பற்றியோ சொல்ல வேண்டுவதில்லை. குட்டிகளைப் பிற விலங்குகளோ அன்றி மனிதரோ தொடுவதைக் கூட, அவை சகிக்க மாட்டா.

இவை ஒரு புறமிருக்க, இந்தத் தத்துவத்தைத் தாவரங்களிடையிலும் காணலாம். பலவேறு மரஞ்செடிகொடிகள் பலவேறு வகைகளில் தம்மினத்தைப் பெருக்குவதற்கான வழியைத் தேடி வைத்திருக்கின்றன. சிலவற்றின் விதைகள், பறவைகள் மூலமாகப் பரவுகின்றன. சில, காற்றிலே பறந்து வேறிடங்களுக்குப் போகின்றன. சில விதைகள், ஆற்று நீரிலும் வெள்ளத்திலும் மிதந்து சென்று முளைத்து வளருகின்றன. இப்படி விதைகளைப் பரப்புவதோடன்றி, விதையில்லாமல் பயிராவதற்கு வேண்டிய புதிய வழிகளையும் இந்தத் தாவரங்கள்—உணர்ச்சியில்லாதவை என்று நாம் கருதிக் கொண்டிருக்கும் இந்தத் தாவரங்கள்—தாமே தேடி அமைத்துக் கொள்கின்றன. வாழைக்கு விதை கிடையாது என்பது இப்போது அனைவரும் அறிந்த விஷயம். ஆனால், ஒரு காலத்தில் வாழைக்கு விதை இருந்தது. அந்த விதையும் முளைத்து வந்தது. காட்டிலுள்ள வாழைகளில் இன்றும் விதைகளிருக்கின்றன. வாழையின் பழத்தைப் பறித்துத் தின்று ருசி கண்ட மனிதன் வாழையைத் தோட்டம் போட்டுப் பயிரிட ஆரம்பித்தான். பழமேயன்றிக் காயையும் பறித்து உண்ணத் தொடங்கிவிட்டான். பிறகு வாழையில் விதைக்கு வழியில்லாமல் போயிற்று. இப்படியே தொடர்ந்து நடந்து வந்தால், வாழையினமே இல்லாமல் அழிந்து போய்விடுமே! அதற்காக, வாழையானது, விதையை உற்பத்தி செய்து அதன் மூலம் தன் இனத்தைப் பெருக்கும் பழைய முறையைக் காலக்கிரமத்தில் விட்டுவிட்டு, தன் வேரிலுள்ள கிழங்கிலிருந்து புதிது புதிதாகக் கன்றுகளை வெடிக்கச் செய்து, இவற்றின் மூலம் தன் இனத்தை விருத்தி செய்யக் கற்றுக் கொண்டது. ஆகவே, உயிர்கள் தம்மினத்தை விருத்தி செய்வதில் இயற்கையே எல்லா உதவியும் செய்கிறது என்

பதையும், தம்மினத்தைப் பெருக்க வேண்டும் என்ற உணர்ச்சி உயிர்களுக்கு இயல்பாகவே அமைந்திருக்கிறது என்பதையும், மேலே காட்டிய உதாரணங்களி லிருந்து அறிகிறோம்.

இந்த உணர்ச்சி மனிதனிடத்தும் பண்டு தொட்டு இன்றுவரை இருந்து வருகிறது. இதிலொன்றும் ஆச்சரியமில்லை. மனித சிருஷ்டியைக் குறித்துச் சொல்லும்போது, கடவுள் மனிதனைத் தம்முடைய வடிவ முள்ளவனாகச் சிருஷ்டித்தார் என்று பைபிள் கூறுகிறது. கடவுள் ஏன் மனிதனுக்குத் தம் வடிவத்தைத் தந்தார் என்று பார்ப்போமானால், தமது வடிவம் பெருகியிருக்கக் காண்பதில் கடவுளுக்குள்ள ஆனந்தந்தான் காரணம் என்று சொல்லத் தோன்றுகிறது. கடவுளுக்கே இப்படியாக ஒரு உணர்ச்சி உண்டு என்று நாம் கற்பனை செய்யும்போது, மனிதனுக்கும் தன் இனத்தை விருத்தி செய்வதில் விசேஷ ஆசை யுண்டென்று சொல்வதில் குற்ற மில்லை.

எனவே, மனிதன் தன் சந்ததியை விருத்தி செய்வதில் ஆசையுடையவனாகிறான். சந்ததி விருத்திக் குரிய பிள்ளை இல்லை என்றால், அது ஒரு பெருங்குறை. பிள்ளையில்லாமல் வெகு காலம் வருந்தியவர்களுடைய கதைகள் நம் நாட்டில் பல உண்டு. தசரத சக்கரவர்த்தி நெடுங்காலம் புத்திர னில்லாம லிருந்து, பின் புத்திர காமேஷ்டி யாகம் செய்து இராமனைப் பெற்றார் என்பதை நாம் அறிவோம். இவருடைய பாட்டனாராகிய திலீப மகாராஜா பிள்ளையில்லாத குறையை நீக்கவேண்டி, தாமும் தம் மனைவியுமாக ஒரு பசுவைப் பூசித்தும் வழிபட்டும் வந்தார்க ளென்பது மற்றொரு கதை. இவை வட நாட்டுக் கதைகள். தமிழ் நாட்டிலும் இங்ஙனமே பல கதைகள் உண்டு. சைவ சமயத்துக்கு முதல் ஆசாரியராகிய மெய்கண்ட தேவருடைய பெற்றோர் புத்திரப் பேறின்றி வருந்திப் பின் திருவெண்காட்டிலே அனுக்கிரகம் பெற்றார்கள் என்பது ஒரு அழகிய சரித்திரம். இப்படிப்பட்ட வரலாறுகளுக்கு அளவேயில்லை.

அறிவுடை மக்களும் பிறரும் மக்கட் பேற்றை விரும்புதற்குள்ள பல காரணங்களில் ஒரு காரணம் மிக்க ரசமானது. புதல்வனின்றி ஒருவன் இறந்து போனால், அவன் '**புத்**' என்னும் நரகத்தில் சென்று துன்புறுவான் எனவும், இந்த நரகத்தில் விழாமல் தந்தையை மகன் காப்பாற்றுவதனாலேயே மகனுக்குப் **புத்திரன்** என்று பெயர் எனவும் சாஸ்திரங்கள் கூறும். இந்தக் கருத்து வட மொழியாளரிடையில் மட்டுமன்றி, தமிழரிடையிலும் நெடுங்காலமாகப் பரவியிருந்தது. தரும நெறியிலே நின்று போர்புரியும் ஒரு பாண்டியனைப் புலவரொருவர் வாழ்த்துகிறார். அவன், தான் படையெடுக்கக் கருதிய நாட்டிலுள்ள பசுவையும் பார்ப்பனரையும் பெண்டிரையும் பிணியாளரையும் வேறிடம் போகும்படி சொல்லி விட்டுப் பிறகுதான் படையெடுப்பானாம். இந்நால்வரோடு, மற்றொரு வகையினரையும் பாதுகாவலான வேறிடம் செல்லும்படி பறையறைந்து தெரிவிக்கிறான். பிதுர்க்களுக்குக் கடன் செய்யும் புதல்வ ரில்லாமல் இறந்துபோவோர் நரகில் துன்புறுவார்களாதலால், அவர்களும் வேறிடம் போகலாம் என அவன் தெரிவிப்பானாம். இனியாவது அவர்கள் புதல்வரைப் பெற்றுக்கொள்ளட்டும் என்பது அவன் கருத்து. இதைப் புலவர் சொல்லுகிறார் :

தென்புல வாழ்நர்க்(கு)
அருங்கடன் இறுக்கும்
பொன்போற் புதல்வர்ப்
பெறாஅ தீரும்—
எம் அம்பு கடி விடுதும்—
நும் அரண் சேர் மின்

—புற நானூறு 9

என்பானாம் அப்பாண்டியன். ஆகவே, புதல்வரைப் பெறுவது எவ்வளவு அவசியமென்று பழந்தமிழ் மக்கள் கருதி வந்தனரென்பது புலனாகும்.

இந்தக் கருத்தி னுண்மையைச் சாஸ்திர வாயிலாகவும் இலக்கிய வாயிலாகவும் நாம் மேலே கண்டோம். வாழ்க்கையிலும் இதன் உண்மை பிரதிபலிப்பதை இன்றும் காண்கிறோம். இவற்றுடன் கூட, பழமையாக மக்கள் வழங்கி வரும் சாமான்யமான பாட்டுக்களிலும் இக்கருத்து அடங்கியிருப்பது கண்டு மகிழ்தற்குரியது. பெண்கள் குழந்தைகளைச் சீராட்டித் தூங்க வைப்பதற்காகத் தாலாட்டுக்கள் பாடுகிறார்கள். இப்பாட்டுக்கள் நாட்டுப்புறங்களில் இன்னும் அற்றுப்போய் விடவில்லை. இவற்றுளொன்றில் வரும் சில அடிகளை இங்கே கவனிக்கலாம்.

ஒரு குடும்பத்தார் புத்திரப் பேறின்றி வெகுகாலமாக வருந்திக் கொண்டிருக்கிறார்கள். பிறகு குழந்தை பிறக்கிறது. எல்லோருக்கும் சந்தோஷம். சுகமும் துக்கமும் குடும்பத்திலே பெண்களுக்குத் தானே அதிகம்! இக்குடும்பத்திலும், பிள்ளை பிறந்தமை பற்றித் தாய்க்கு அதிக சந்தோஷம். குழந்தையைத் தொட்டிலில் உறங்கச் செய்து தாலாட்டுகிறாள். அந்நிலையிலே, குழந்தையே இல்லாது வருந்திய காலம் ஞாபகத்துக்கு வருகிறது. குழந்தை பிறக்க வேண்டும் என்ற ஆசையினாலே செய்த யாத்திரைகள் எவ்வளவு! ஆடின தீர்த்தங்கள் எத்தனை! சென்று வழிபட்ட தலங்கள் எத்தனை! இத்தனை எண்ணமும் தாலாட்டில் வெளிப்படுகிறது :

சீரங்க மாடித்
திருப்பாற் கடலாடி
மாமாங்க மாடி
மாசிக் கடலாடித்
தைப்பூச மாடித்
தவஞ்செய்து வந்தானோ!

அவள் செய்த தவங்கள், அனுஷ்டித்த விரதங்கள் எத்தனை எத்தனையோ!

பட்டினி யிருந்து
பகவானைச் சேவித்து
மலைமேல் தவமிருந்து
வந்து பிறந்தானோ!

இவ்வளவும் அனுஷ்டித்தான பிறகு குழந்தை பிறந்தது. பிறந்ததனால் தாய்க்குண்டான சந்தோஷத்தை ஓர் அளவுபடுத்திக் கூற முடியுமா? தாயே அதைச் சொல்லிப் பாடுகிறாள்.

பலா மரத்தின் இயல்புகளிலொன்றை இங்கே ஞாபகப் படுத்திக் கொள்ள வேண்டும். உயர்ந்த ஜாதிப் பலாமரமானது, காவேரி யாற்றுப் பாசனத்தை யொத்த நீர்வளம் நிறைந்துள்ள செழிப்பான பூமியில் நன்றாய்ப் பயிராகாது, பலனும் தராது. பாறைகளும் சுக்கானும் செறிந்த செழிப்பற்ற வறண்ட நிலம்தான் அதற்கு ஏற்றது. இந்த நிலத்திலே மற்ற மரம் செடிகொடிகள் வாடிக் கருகி விடும். பலா மட்டுமே இங்கு வாடாமல் நின்று இலைகளெல்லாம் உதிர்த்து விட்டுப் பின் காய்த்துப் பழுக்கும். சந்

ததி யில்லாமல் கவலையுற்றிருந்த தாய்க்கு, தன் குடும்பம் தீய்ந்து கருகிப்போன கொடி போலத் தோற்றிற்றும். அந்த நிலையிலே குழந்தை பிறந்தது சாதிப்பலா பழுத்தது போல இருந்தது. இந்த பாவத்தை அமைத்துத் தாலாட்டுப் பாடுகிறுள் தாய் :

இலைதீய்ந்து கொடிவாடி
இல்லை யென்று போமிடத்தே
சருகுதிர்த்துப் பழம்பழுத்த
சாதிப் பலாப்பழமோ !

'இல்லை யென்று போமிடத்தே' என்று கூறும்போது, புத்திர னில்லாமையால் உண்டான ஏக்கம் அவ்வளவும் தொனிக்கிறது. இலைகளெல்லாம் கருகி, கொடியும் வாடி, இனிக் கடைத்தேற வழியில்லை என்ற நிலைமை அநேகமாக ஏற்பட்டு விட்டது. அந்தச் சமயத்திலே, தெய்வானுக்கிரகமாக, குலத்தை விளக்க ஒரு குழந்தை வந்து பிறந்தான். ஒன்றும் பயிராகாது என்று சொல்லக்கூடிய வறண்ட நிலத்தில், கடுங்கோடைக் காலத்தில் பழுக்கும் பலாவைப் போல், இந்தப் பலாவிலும், இலைகளே இல்லை ; உலர்ந்த சருகுகள் மட்டுமே இருந்தன. இவையும் உதிர்ந்து போயின, கோடையின் வெம்மையால். இதேபோல, புத்திரனில்லாமை என்ற ஒரு வெப்பத்தால் சந்தோஷமவ்வளவும் மறைந்து போய்விட்ட குடும்பத்தில் தோன்றிய குழந்தையைச் சாதிப் பலாப்பழமென்று தாய் கூறுவது முற்றிலும் உண்மையோடு ஒட்டியதா யிருக்கிறது. பலாப்பழமும் வெறும் பலாப்பழமல்ல ; சாதிப் பலாப்பழம். தாயாருக்குத் தன் பிள்ளையினிடத்தில் அவ்வளவு வாஞ்சையும், பிள்ளை பெற்றதனுலே ஒரு பெரு மிதமும் ஏற்பட்டிருக்கின்றன.

சாதாரணமான ஒரு தாலாட்டுப் பாட்டுத்தான் இது. இந்த வரிகளிலே, பல்லாண்டுகளாக மக்களின் இதயத்தில் ஊறிக்கிடக்கிற சில அற்புத உணர்ச்சிகளின் பாவம் மிக எளிதில் பிரதிபலிக்கிறது. இந்த வரிகளைத் தாயார் நீலாம்புரி ராகத்தில் பாடித் தாலாட்டும்போது, அவளுடைய குழந்தை மட்டும் கேட்டுத் தூங்கிப் போய்விடுகிறது என்று எண்ண வேண்டாம். பக்கத்திலே கேட்டுக் கொண்டிருக்கும் நாமும் பாட்டிலே மயங்கி மெய்ம்மறந்து உணர்ச்சியற்றுப் போய் விடுகிறேம்.

வர்ணனை :

# கருங் கூந்தல்

'மு'

பூந்தோட்டத்தில் தோன்றிய அந்தக் கருங் கூந்தல் ஓர் அழகியின் கூந்தல். நீண்டு நெளிந்து வளைந்து மேக மண்டலத்திரையின் சிதர்போல், குதிகாலை நோக்கி அது குந்து போடும் விந்தையைப் பாருங்கள். அவளது முன் முகத்திலே கண்கள், காதல் தடாகத்தில் நீந்தும் மீன்களைப் போல், புரண்டு புரண்டு, துள்ளித் துள்ளி, விந்தைச் சிறகு பெற்ற தங்களது விழிகளை வீசும் அற்புதத்தைக் கூர்ந்து கவனியுங்கள் ! இவளுடைய சௌந்தரியச் சிற்பியான ஈசன், இவளது கருவிழியின் ஆழத்தில் ஒளிந்திருக்க வில்லை யென்று யார் சொல்லமுடியும் ?

இவளுடைய உருண்டை முகம், பூலோகச் சுழற்சியையே சுட்டிக் காட்டுகிறது. இவளது கன்னத்தில் தேங்கிக்கிடக்கும் பச்சை மச்சம், அலைந்தலைந்து மின்னிப் பொலிகிறது. மின்னும் உதடுகள் இன்ப மந்திரம் ஓதுகின்றன. புன்னகை மின்னி, முக வளையத்தைச் சூழ்கிறது. பற்கள், ஒளி நிலா அமைக்கின்றன. இவளுடைய புருவம், உணர்ச்சி மின்னலில் வளைந்து விம்மி நெளிகிறது. எல்லாம் மர்மக் காவியச் சுனை !

இவளுடைய குரலில் தேன் சொட்டுகிறது. வசந்தக் காற்றில் கலந்து வரும் அவளுடைய மதுக் குரல் அருவி, என் செவியிலே பாய்ந்து, இதயத்தைக் கிளர்கிறது. உணர்ச்சி உயர உயர, தொனி கனிந்து, கீதச் சுடராக மாறிவிடுகிறது. அவள் இன்பமாய்த் தோழியுடன் பேசும்போது, குரல் குன்றிச் சாந்தி நிறைந்த அலைபோல் சிந்தனைக் கரையை வந்தடைகிறது.

அவள் வீணை வாசிக்கும்போது, கலைவாணியின் திரு உருவம் என் கண்முன் எழுந்து நிற்கிறது. விரல்கள் தம் ஜீவசக்தியைத் தந்திகளின் மேல் பரப்பும் போது, அவளது இதயத்துடன் வீணை அருமையாய்க் கொஞ்சுகிறது. விரல்கள் கம்பியினின்று விலகினுல் எங்குமே மௌனம்—வீணையும் கூட ஊமையாகி விடுகிறது !

வீணையின் கீதநாதம், அவளுடைய உதிரத்தில் அவ்வளவு ஆழத்தில் கலந்து குழைந்து வந்திருக்கிறது.

அவள் ஒரு நூலைப் படிக்கும் போது, அவளுடைய ஆர்வக் கண்கள் இலக்கியத்தேனைக் குடிக்கின்றன. எழுத்துக்கள் அவளது இதய ஒலியிற் கலந்து மௌனத் தொட்டிலில் உறங்குகின்றன. கம்பனும் காளிதாஸனும் அவளுடைய இதய ரீங்காரத்தில் அரியாசனம் கொண்டு அமர்ந்து விடுகிறுர்கள்.

அவளது கூந்தல் கறுப்புஜீவநதி யென வளைந்து சுதந்திரத்துடன் ஓடுவதுபோல், அவளுடைய சங்கீதமும் விண்ணை நோக்கி வளைந்து நெளிந்து இன்ப ஓடையாகப் பெருகிக் கொண்டே யிருக்கிறது. அவளுடைய தந்தக் கைகள் உடலில் அணையும் விந்தையைப் பாருங்கள். ஆறுகள் கடலிற் கலந்து ஐக்கிய மடைவதுபோல், அவை வந்து கூடுகின்றன. கையிலே மின்னும் நீல மோதிரம், அவளுடைய விரலை விண்ணுக்கு உயர்த்துகிறது.

அவளுடைய ஆடையின் நிறம் தூ வெள்ளை. எங்கும் வெண்மை, எங்கும் உண்மை ! களங்க மற்ற தூய வெண்ணிற அருவி தானே அந்த ஆடை ! உள்ளும் புறமும் வெண்மை ! என்ன ஸ்படிகத் தோற்றம், பாருங்கள் !

அவளது உருவம், நிமிஷத்துக்கு நிமிஷம், ரஸிகனின் இதயத்தில் தேன் கூடு கட்டுகிறது. அவளுடைய சிரிப்பு எவனுடைய பித்தையும் மாற்றிவிடும். திடீரென்று அவளுடைய தொனி கனிந்து கனியின் இனிமையையும் பெற்று விடுகிறது.

அவள் கையில் உள்ள கிளி, பச்சை வர்ணத்தின் உயர்வை ஸ்தாபிதம் செய்கிறது. அதன் சிவந்த மூக்கு, முந்திரி விதையென வளைந்திருக்கிறது. பெண் குரலை அது ஆவேசத்துடன் இன்பமாய் எதிரொலிக்கிறது : "அக்கா, அக்கா! யாரடா அவன் ?".....

சரித்திரக் கதை :

# தன்னை யிழந்த வீரன்

## [சுவாமி சுத்தானந்த பாரதியார்]

நிராயுத பாணி யானான்; காலும் கையும் போயின. அப்பொழுதேனும் அந்த வீரன் சும்மா விருந்தானா? இல்லை. மரணம் நிச்சயம்; ஆனால், மானம் பெரிதல்லவா?

ஆற்காட்டு முற்றுகையில் கிளைவ் திணறிப்போனான். அவனைத் திணறடித்தது யார் தெரியுமா? சந்தா சாஹேபன்று; பிரெஞ்சுக் காரரன்று; சிவகங்கை ராமனாத புரம் மறவர்களே. இந்த மறவர்கள் அசகாய சூரர்கள். இவர்களைப் பார்த்தாலே 'இவர்கள் வீரர்கள். இவர்களிடம் மரியாதையாக நடக்கவேண்டும்' என்று தோன்றும். இந்த வீரர்களே மத்திம காலத்தில் நமது நாட்டு மானத்தைக் காத்தவர்; ஒரு துளி ரத்தம் இருந்தமட்டும் இம்மறவர் உரிமைப் போர் புரிந்தனர்.

ஆற்காட்டு முற்றுகை முடிந்தது; சந்தா சாஹேபும் திருச்சி முற்றுகையில் பிடிபட்டான்; அவன்மேல் குற்றம் சாட்டி அவனைக் கிளைவ் கொன்றான். ஐதராபாத்தில் சுபேதார் கொலையுண்டான்; அங்கே ஆங்கிலேயர் புகுந்தனர்; சலபத் ஜங்கைச் சுபேதாராக்கினர். ஆங்கிலேயர் கை ஓங்கியது; நாட்டில் இரட்டையாட்சி ஏற்பட்டது; யூனியன் ஜாக்கின் நிழலில் நவாப் முகம்மதலி கர்னாடகத்தை ஆண்டான். பேருக்குத்தான் நவாப்; அதிகாரமெல்லாம் கும்பினி கையில். 'நீ அவல் கொண்டா, நான் உமி கொண்டு வருகிறேன்; ஊதி ஊதித் தின்போம்' என்ற கதைதான்.

கும்பினியார் ஏராளமான சுதேசிகளைப் பயிற்றிப் படை சேர்த்தனர். அவர்களது பலத்தினாலேதான் நவாப் தர்பார் நடந்தது. எங்கே? காவேரிக்கு இப்புறந்தான். வைகைக் கரையிலும், தாம்பிரவருணிக் கரையிலும் நவாப்பின் பாச்சா பலிக்கவில்லை; கிஸ்தி வசூலிக்க, படே படே சாஹேபுக்களை அவன் அனுப்பினான்; கும்பினிப் படைகளுடன் தனது படைகளையும் அனுப்பினான். பலன் பூஜ்யம். 'கப்பம்' என்றால், மறவர் கத்தி உருவினர்; 'கிஸ்தி' என்றால், 'கிட்ட வராதே' என்றனர். இராமனாதபுரம், சிவகங்கை, சிவகிரி, பாஞ்சாலங்குறிச்சி, முதலியன வீரர் புரங்கள். அதிலும், சிவகங்கையின் பேர் கேட்டாலே நவாபுக்குப் பகீர் என்னும். ஏன்? அதன் வீர மறவர்களே சந்தாசாஹேபுவுடன் சேர்ந்து தன்னை விரட்டி யடித்தவர். 'கிஸ்தி கிஸ்தி' என்று எத்தனை தடவையோ ஓலை விடுத்தான்; ஆள் விடுத்தான்; பயமுறுத்தினான்; படை விடுத்தான். சல்லி பெயரவில்லை.

முடிவில் நவாபு கும்பினிப் படையுடன் தனது மகனை அனுப்பினான்; காரியம் பலிக்க வில்லை. மகன் உம்டட்-உல்-உமார் திரும்பி வந்தான்.

"என்ன உமார்...கிஸ்தி தந்தானா?"

"கஸ்திதான் தந்தான்"

"அரே! என்ன சொல்றான்?"

"போ போ சொல்றான்"

"ஹா! க்யா கரேம்? அரே! அவர்களை அடக்காமல் என் வந்தாய்?"

"பாபா! இந்த மறவர்களைமட்டும் நாம் அடக்கி நமது படையில் சேர்த்தால், உலகையே வெல்லலாம்; அவ்வளவு பலசாலிகள்."

"அரே நம்பள்கு இரிசால் செலுத்துறானில்லே; நம் ஹுகுமை லக்ஷியம் செய்றானில்லே...உமார்! ஜோஸப் ஸ்மித்துடன் செல்...மறவர்களை அடக்கி ஒடுக்கிக் கொண்டா கிஸ்தி."

உமாரும், ஜோஸப் ஸ்மித்தும் பலமான படையுடன் புறப்பட்டனர். இவர்களுக்குப் புதுவைத் தொண்டைமான் வலது கைபோல் உதவினான். சேனை வெள்ளம் வருகிறது.

'வரட்டும்' என்று முண்டாத் தட்டுகிறான் ஒரு வீரன். யாரவன்? சிவகங்கை மன்னன் **முத்துவடுகி நாதத்தேவர்**தான். முத்துவடுகிநாதர் வீரப்புலியும் கொடை வள்ளலுமான சசிவர்ணத் தேவரின் புதல்வர். இவர் இராமனாதபுரம் அரசருடன் கூடிக் கும்பினிப் படையை எல்லா இடத்திலும் எதிர்த்து நின்றார். இராமனாதபுரம் சேதுபதி இறந்தார். அவர் மகன் மைனர். அவனைத் தளவாய்த் தாமோதரம் பிள்ளை பாதுகாத்தார். இவர் சிறிது காலம் போராடிக் கும்பினியாருடன் சமாதானம் செய்து கொண்டார். ஆதலால் முத்துவடுகிநாதர் பக்க பலமில்லாமல் தனியே நின்றார்; தைரியத்தை விடவில்லை. இவர் மனைவியே ராணி வேலு நாச்சியார். சாந்துபீபி, லக்ஷ்மீபாய், துர்க்காவதி முதலிய வீராங்கனைகளுடன் ராணிவேலு நாச்சியையும் சேர்க்கவேண்டும். தன் கணவனின் வீரத்தை அவள் பதின்மடங்காக்கினாள். "கண்ணே! கும்பினி - நவாபு சேனை ஆற்று வெள்ளம்போல் வருகிறதே. என்ன செய்வோம்" என்றான் கணவன். "நமது வீர வெள்ளத்தால், அதை அள்ளி விழுங்குவோம்" என்றாள் வேலு நாச்சியார்.

அக்காலம் அன்னியர் கொள்ளையால் மிகவும் கஷ்டப்பட்ட ஊர்களில் சிவகங்கையும் ஒன்று. சந்தா சாஹேபு வந்தான்; கொள்ளையடித்தான். வீரர் எதிர்த்தனர். வீரமறவரை மெச்சித் தன் படையில் அவன் சேர்த்தான். ஆற்காட்டு நவாபின் சேனை வந்தது; ஊரைச் சூறையிட்டது. வீர மறவர் நவாபை விரட்டி யடித்து இளைப்பாறும்போது, தஞ்சாவூர் மராட்டியப்படை புகுந்து, "எங்கள் துளஜாஜீ ஆணை; கொடு கப்பம்" என்றது..."ஊரைப் பார்க்கப் போம்" என்று மராட்டியப் படையை மறவர் திருப்பி யனுப்பினர்; மராட்டியர் நாகப்பட்டணம் டச்சுக்காரருடன் வந்து மிரட்டினர். வீர மறவர் அவர்களைப் பொருதி விரட்டினர். புகுந்தது கும்பினி - நவாப் சேனை! அனுத்த புலியை வேட்டை நாய்கள் சூழ்வதுபோல், இரண்டு பெரும்படைகள் மறவர் சீமையைச் சூழ்ந்துகொண்டன. இராமனாதபுரத்தில் உமாரும் ஜோஸப் ஸ்மித்தும் புகுந்து, மைனர் முத்து ராமலிங்க சேதுபதியையும் ராணி

யையும் பிடித்துத் திருச்சியில் காவல் வைத்தனர்; பிறகு வெற்றி முழக்கத்துடன் சிவகங்கையைப் படை யெடுத்தனர்.

அச்சமயம் முத்துவடுகிநாதர் வேட்டை யாடிக்கொண் டிருந்தார். "ஐயோ மஹாராஜா! நவாபு சேனை புகுந்தது!" என்று தளவாய் ஓடிவந்து செய்தி சொன்னான். "ஆ! வந்துவிட்டார்களா?" என்று சிறிது திகைத்தான் மன்னன். "வரட்டுமே; கைத்தினவு தீர வெளுப்போம்" என்றான் சின்ன மருது. "சக்கையாக வெளுப்போம்" என்றான் பெரிய மருது. "மருது வாக்கு பலிக்க வேண்டுமே" என்றான் மன்னன். "பளீர் பளீர் என்று அவுங்க முதுகிலே பலிக்கும், மகராசா" என்றான் பெரிய மருது. "அவுங்க நெஞ்சிலே சுடச்சுடப் பலிக்கும்" என்றான் சின்ன மருது. "பெரிய மருது! நீ நமது வலக்கை; சின்ன மருது நமது இடக்கை. இரண்டு கைகளிலும் வாள் பிடித்துப் போராடுவோம்" என்று மன்னன் அவசரமாக அரண்மனைக்கு ஓடி வந்தான்.

**யா**ர் இந்த மருது சகோதரர்? இவர்களின் வீரப் பெருமை மிகப் பெரிது. இவர்களது பெயரைக் கேட்டாலே, ஜனங்கள் கை யெடுத்துக் கும்பிடுவர். பெரிய மருது அசகாய சூரன்; ஆஜானுபாஹு; பலபீமன்; வேட்டையில் நிபுணன்; அவன் வைத்த குறி தவறாது; எத்தனையோ ஆங்கிலேயர் அவன் திறமையை மெச்சினர். வாள்வீச்சில் அவனை யாரும் மிஞ்ச முடியாது. அவன் விளறிக் கம்பைச் சுழற்றி விட்டால், எதிரியின் கழுத்தைத் திருகி மண்ணில் உருட்டித் தான் திரும்பும். துப்பாக்கி சுடுவதில் அவனிடம் கும்பினித் தளகர்த்தர் கடன் வாங்கவேண்டும். அக்காலம் சிவகங்கைக்கும் காளையார் கோயிலுக்கும் இடையில் காடு அடர்ந்திருந்தது; அதில் புலிகள் திரிந்தன; பெரிய மருது எத்தனையோ புலிகளை எமலோகத்துக்குஅனுப்பினான். சுடுவது மட்டுமன்று; பெரிய மருது ஒரே பாய்ச்சலில் புலியைப் பிடித்து அதன் வாயைக் கிழித்துக் கொல்வான். அவன் முத்துவடுகிநாதத் தேவருக்கு வேட்டைத் துணைவனானான். வேட்டை நாய்களைப் பிடித்துச் செல்வதே அவனது வேலை; அவ் வேலையிலிருந்து அவன் மஹாராஜாவுக்கு நண்பனாகி, ஊருக்குத் தலைவனுமானான். எதனால்? வீரத்தால். சின்னமருது அரசனுக்கு அடைப்பக்காரனாயிருந்து படிப்படியாக உயர்ந்தான்; அவன் வில்லாதி வில்லன்; நல்ல அறிவாளி; அரசியல் சதுரங்கத்தில் நிபுணன்; ஜனவசீகரமானவன். ஊரை அடக்கி யாளுவதில் சமர்த்தன். இந்த இரண்டு மருதுக்களும் ஊருக்குத் தலைவர்களானார்கள்; இவர்கள் பாமர ஜனங்களுக் கெல்லாம் போர்ப் பயிற்சி தந்தனர்; பெரும் படை திரட்டினர். இவர்களை எல்லா வகையிலும் ஆதரித்தவள் இராணி வேலு நாச்சியார். பெரிய மருது இராணிக்கும் போர்க்கலை பயிற்றுவித்தான். இனிக் கதைக்கு வருவோம்.

மன்னன் வேட்டையிலிருந்து திரும்பி வந்தான். அரண்மனையின் முன்னே பெரிய கும்மாளம். போர் முரசம் இடிமுழக்கம் செய்கிறது; பறைகள் கொட்டுகின்றன; எக்காளங்கள் முழங்குகின்றன; வீரர் தசை துள்ள அடியெடுக்கின்றனர்; வேலு நாச்சியார் கொடி பிடித்து "போ முன்னே!" என்று ஏவுகிறாள்.

**ந**வாபு - கும்பினிச்சேனை இதோ வந்துவிட்டது; சிவகங்கையில் நுழைந்து விட்டது. மன்னன் இளைப்பாறவில்லை; உண்ணவில்லை. ஆயுதச்சாலைக்கு நேரே சென்று, போர் அங்கி மாட்டி, வாளும் கேடயமும் பிடித்து வெளியே வந்தான். அதற்குள் நிலைமை அசாத்திய மாகிவிட்டது. "மாரோ மாரோ" என்று உமார் கர்ஜித்தான்; "ஷூட் ஷூட்" என்று ஜோஸப் ஸ்மித் உறுமினான்...... "வெட்டு, வெட்டு; கொல், கொல்" என்று இராணியும் மன்னரும் கட்டளை யிட்டனர். மறவர் படை ஊழியிடிபோல் பகைவரைத் தாக்கியது. கொடும்போர்! வீடுகளில் தீ! வீதிகளில் சூறை! 'ஹூம்' என்றால் கழுத்தில் கத்தி! படுகொலை நடக்கிறது. இதோ பகைவர், இராணியையும் மன்னரையும் பிடிக்க வருகிறார்கள்.

ஓடி வந்தான் பெரிய மருது: "மஹாராசா! பாவிப்பயல் கெடுத்தான்; வழிகாட்டிக் கொடுத்து விட்டான். உடனே காளையார் கோயில்" என்றான். சின்னமருது வண்டி தயாராக வைத்திருந்தான். யாரும் காணாது இருவரும் மகாராஜாவைக் காளையார் கோயில் கோட்டைக்குஅழைத்துச் சென்றனர். பெரிய மருது அங்கே பெரும்படை திரட்டினான். கோட்டைமேல் ஏறிச் சுற்றிலும் பார்த்தான். சிவகங்கையில் தோற்ற எதிரி இதோ காளையார் கோயிலுக்கும் வருகிறான்! கர்னல் பான்ஜோர், நவாபு சேனையுடன் புயல் போலச் சீறி வருகிறான்! "மகாராஜா! அந்தப் பாவி இங்கேயும் வழிகாட்டி மோசம் செய்தான்" என்று பெரிய மருது முறையிட்டான். "அந்த அயோக்கியத் துரோகியின் தலையைத் திருகி வேட்டை நாய்க்குப் போட்டு மறு வேலை பார்" என்று மன்னன் சீறிச் சினந்தான்.

அந்தத் துரோகி! வழக்கமாக நமது நாட்டுக்குச் சனியனாக வரும் வஞ்சப்பதர்களில் இவனும் ஒருவன். ஒதெல்லோவில் வரும் மகா பாதகனை **அயாகோவை** அறிந்தால், இவனை அதிகமாக வர்ணிக்க வேண்டாம். பெயர் 'சுப்பையா'. அவனைக் '**குண்டுணிச் சுப்பன்**' என்பார்கள். குண்டுணிச் சுப்பன் மகா விஷமப் புச்சம்; நிமிஷத்துக்கு ஒரு சேட்டை செய்வான். திடீர்ப் புளுகன்; முழுப் பூசணிக்காயைச் சோற்றில் அமுக்கும் பேர்வழி. இரக்கமற்ற வறட்டுப் பாவி. பஸ்மாசுரனுக்கு அண்ணன். அவன் நன்றாகப் படித்தவன்; தடபுடலாகப் பிரசங்கம் செய்வான்; வயிற்றுப் பிள்ளை கரையும்படி முன்னால் பேசி, ஆட்களைக் குல்லாய் போடுவான். பின்னால் சூனியம் வைப்பான். இவன் முதலில் மகாராஜாவின் பிரியத்தைச் சம்பாதித்தான்; அவன் பேச்சு மகாராஜாவுக்குப் பொழுது போக்கா யிருந்தது. அக்காலம் பத்திரிகை கிடையாது; குண்டுணிச் சுப்பனே மகாராஜாவின் தினசரிப் பத்திரிகை. "இவன் அப்படி, அவன் இப்படி" என்று கோட் சொல்லி, ஆட்களைச் சிண்டு முடிந்து விட்டு, வேடிக்கை பார்ப்பதே குண்டுணியின் வேலை.

"ஆஹா! தங்களைப் போலுண்டா? தர்மாத்மா, ராமச்சந்திரன் என்றால் தாங்களே..." என்று இங்கே புகழ்வான். மெல்ல எதிரியிடம் சென்று, "அவன் கிடக்கிறான் அற்பப் பயல்; வாய் சர்க்கரை, கை கர்னக் கிழங்கு—உங்களுக்குச் சமானம் வருமா?" என்று

புகழ்ந்து பணப்பையைத் தட்டிக் கொண்டு போவான்.

இந்த அயோக்கியனைச் சின்ன மருது ஒரு சமயம் கையுங் களவுமாகப் பிடித்தான். அது முதல் மருது சகோதரரைக் கண்டால், குண்டுணிக்குப் பிடிக்காது. அவன்மேல் பிரியமாயிருக்கும் அரசனையும் பிடிக்காது. குண்டுணிச் சுப்பன் எத்தனை எத்தனையோ நாச காரியங்கள் செய்தான்; அனைத்திலும் கொடியது அவன் இன்று செய்த துரோகம். பகைவர் கையாளாகி அரசனும் மருது சகோதரரும் இருக்கும் இடத்துக்கு அவன் வழி காட்டினான்; படைகளுக்கு வெடிமருந்தும் ஆயுதமும் உணவும் உதவும் இடங்களைச் சுட்டிக் காட்டினான். அரசி வேலுநாச்சியாரைப் பிடித்துக் கொடுக்கச் சில பணிப் பெண்களைத் தயாரித்துக் கொடுத்தான். நிதிச் சாலையைக் காட்டிக் கொடுத்தான். போதுமா துரோகம்? "இதோ பார், என்னவர்; எனது நாடு—பிடித்துக்கொள்" என்று உள்ளே அன்னியரை அழைத்து வந்து காட்டும் இப்படிப் பட்ட துரோகிகளாலே தான் நமது தேசம் இந்த நிலைக்கு வந்தது. இன்றும் இதே துரோகந் தான் நமது தாயின் மார்பில் ஈட்டி குத்துகிறது.

துரோகி காட்டிய வழியே வந்து, கர்னல் பான்ஹூர் காளையார் கோயில் கோட்டையை வளைத்துக் கொண்டான். பெரிய மருதுவுக்குப் படுகோபம் வந்தது. தனது வீரர் இரவில் பகைவரது பாசறையில் உறங்கிய குண்டுணிச் சுப்பனை எப்படியோ தூக்கிவர வேண்டுமென்றான். அவன் ஆணைக்கு எதிர் கிடையாது. நவாபின் சிப்பாய்கள்போல வேஷம் போட்டு, உருது தெரிந்த நான்கு மறவர் சென்றனர். அவர்களுக்குப் பின்னே சிறிது தூரத்தில் ஒரு படை பதுங்கிப் பதுங்கிச் சென்றது. நாலு மறவரும் குண்டுணியைப் பின்கட்டாய்க் கட்டி வாயில் துணியடைத்துத் தூக்கி வந்தனர். பெரிய மருது வாளை உருவினான். "அட துரோகி! ஊரைக் காட்டிக் கொடுத்த பாவீ! இதோ சாகப் போகிறாய். இப்போதாவது உன் குற்றத்தை ஒப்புக்கொள்; பகைவர் உளவைச் சொல்" என்று சின்னமருது கிண்டிக் கிண்டிக் கேட்டான். பகைவர் சூழ்ச்சிகளையெல்லாம் குண்டுணி சொல்லி விட்டான். அரசரைக் கொலை செய்த பிறகு, உமார் ராணியைக் கைது செய்து கொண்டு செல்வது......சிவகங்கைச் சீமையைக் கொள்ளையடிப்பது — இன்னும் பல உபயோகமான செய்திகளும் சொன்னதால், பெரிய மருது குண்டுணியைக் கொல்லாமல், விலங்கு போட்டுச் சிறைக்கு அனுப்பினான். இதற்குள் நவாப் சேனை கொடிய போர் தொடங்கியது. கும்பினிப்படை கோட்டை மதிலை இடித்துக் கொண்டிருந்தது. கைதியான குண்டுணிமேல் ஒரு குண்டு விழுந்தது. குண்டுணி இறந்தான். விதியே அவனைக் கொன்றது. மறவர் திடீர் திடீரென்று கும்பினிப் படையை எதிர்த்தனர். பெரிய மருது நவாப் சேனையைச் சடசட வென்று வீழ்த்தினான். அரசன் கோட்டை மதிலிலிருந்து குண்டு பாய்ச்சிப் பகைவரைக் காலன்போல் கொன்றான்.

மறவர் குண்டுக்குக் குண்டு, குத்துக்குக் குத்து, வெட்டுக்கு வெட்டு—சரியான பதில் கொடுத்தனர். திடீரென்று சின்ன மருது "மகாராசா! கோட்டைவாசல் எதிரி கைப்பட்டது; நமது வெடி மருந்து அறுவானது; உணவு வரவும் வழியில்லை" என்று விசனித்தான். "மருது! நீயும் அண்ணனும் எப்படியாவது இராணியைக் காப்பாற்றித் திண்டுக்கல்லுக்குக் கொண்டு செல்லுங்கள். எனது உடம்பில் துளி ரத்தம் இருக்குமட்டும் எதிரிகளை வெட்டி வீழ்த்தி வீர சொர்க்கம் அடைகிறேன்" என்றான் அரசன். "அரசே! தாங்களும் தப்பினால் நல்லது; தங்களை எப்படி இழப்போம்! நிலைமை அபாயமாயிருக்கிறது. ஹைதராலி இந்தப் பக்கம் வந்திருக்கிறான். அவன் கும்பினிக்காரரின் விரோதி; பலசாலி. அவனை நான் உதவிக்கு அழைத்து வருகிறேன். எதிரிகளை நொறுக்கி யெறிவோம்" என்றான் மருது. "மருது! ஒரு அன்னியனை எதிர்க்க இன்னொரு அன்னியனை அழைத்து வருவது, தீயை அணைக்க எண்ணெய் வார்ப்பது போலாகும். வந்தவன் நமது சீமையைப் பிடித்துக் கொண்டு நம்மை அடிமை செய்வான். அதைவிட உயிர் உள்ள மட்டும் போர் செய்வதே வீரம்...வீர தேவதைக்கு நானே பலியாகிறேன்; என் வீர ரத்தம் வீண் போகாது; ஒவ்வொரு துளியும் ஒரு வீரனைக் கிளம்பும். நீ இராணியைக் காப்பாற்று" என்றான் அரசன்.

இதற்குள் கும்பினிப் படை கோட்டை மதிலை நான்கு பக்கமும் இடித்துத் தகர்த்து உள்ளே புகுந்தது. முத்துவடுகி கோடையிடி போலக் குமுறிப் பகைவரை எதிர்த்தான். மறவர் யாரும் புறங்கொடுக்க வில்லை. கோட்டைக்குள் 500 வீரரே இருந்தனர்; என்றாலும் ஒரு மறவன் பத்து ஆட்களைக் கொன்றான்...எதிரியின் படை பாதி காலி...பான்ஹூர் டாம் டாம் என்று குண்டுபாய்ச்சி மறவரை வீழ்த்தி, முத்துவடுகி நாதரை வளைத்துக் கொண்டான். "நான் கைதியாக இருக்க மாட்டேன்; வீரனாகவே இறப்பேன்" என்று வடுகிநாதன் தன்னைக் கட்ட வந்த பகைவரை வெட்டித் தள்ளினான்; சூறாவளிபோலச் சுழன்று வாள் வீசினான். பகைவர் வாளைப் பிடுங்கினர். பிறகு, கிட்ட வந்தவரைக் கையால் குத்தினான். பகைவர் கையை வெட்டினர். பகைவரைக் காலால் உதைத்தான். காலும் வெட்டுண்டது. இன்னும் அருகே வந்தவரைப் பல்லாற் கடித்தான். முகத்திலும் குத்து விழுந்தது. மறுபடியும் வந்தவர்மேல் "தூ தூ" என்று எச்சில் உமிழ்ந்தான். மார்பில் ஒரு குண்டு பாய்ந்தது. "என் கடமை முடிந்தது...சிவபாதம் துணை" என்று முத்து வடுகிநாதத் தேவன் இறந்தான். காளையார் கோவில் கோட்டை பிடிபட்டுத் தரை மட்டமானது. அக் கோட்டையின் தடம் கோயிலுக்கருகே இருந்தது. எல்லாம் போய் ஒரு குட்டிச் சுவரே மிஞ்சியது. அதைப் பார்க்கும் போதெல்லாம் முத்து வடுகி நாதரின் வீர ரத்தம் நமது நினைவுக்கு வரும்.

---

**கிழவி:** இது என் மகனின் போட்டோப் படம். நீங்கள் இதைப் பெரிது செய்து தர முடியுமா?

**ஸ்டூடியோ மானேஜர்:** முடியும்.

**கிழவி:** அவன் தலையில் உள்ள குல்லாயை எடுத்துவிட முடியுமா?

**ஸ்டூடியோ மானேஜர்:** அப்படியே செய்து தருகிறோம். ஆனால், அவர் வகிடு வலதுபுறம் வாரிக்கொள்வாரா? இடது பக்கமா? இதை மாத்திரம் சொல்லுங்கள்.

**கிழவி:** முட்டாள்தனமாகப் பேசாதீர்கள். குல்லாயை எடுத்தீர்களானால், தானே அது தெரிகிறது?

---




# அமிர்தாஞ்சனம்

எல்லா வலிகளுக்கும் துன்பங்களுக்கும் கை கண்ட இந்திய மருந்து இதுவே. ஆயிரக் கணக்கானவர்கள் விற்கிறார்கள்.

## அமிர்தாஞ்சனம் லிமிடெட்

மதராஸ் பம்பாய் கல்கத்தா







ஒவ்வொரு தடவை பல் துலக்கும்போதும் உங்கள் தேகம் பூராவுமே நன்மை பெறுகிறது. கமகமவென்று வாசனை வீசி ஆனந்தமாய் நுரை கொடுக்கும் பற்பசை இதோ இருக்கிறது. பற்களின் சிறு இடுக்குகளிலெல்லாம் புகுந்து, பல்லை அது பாலிஷ் செய்கிறது. மேலும், அயோடின் சத்து அதில் இருப்பதால், அதை ஈறுகளும் வியர்வை உருப்புகளும் கிரகித்துக்கொண்டு நன்மை செய்கின்றன.

'அயோடின்' பல் வியாதிகளைப் போக்கடிக்கும் சக்தியுடையது. ஆகையால் 'ஐடோகால்' பற் பசை, பையோரியா, ஸ்கார்புலா, கேடராக், காய்டர் முதலிய வியாதிக்காரர்களுக்கு அனுகூலம் செய்கிறது.

ஐடோகாலில் நமது முக்கிய அம்சங்களான (1) தைராய்ட் (2) அயோர்டா (3) லிவர் (4) வயிறு (5) முகஸ் மெம்ரேன் முதலியவைகளுக்கு அவசியமான அளவு அயோடின் சேர்ந்திருக்கிறது.

## Idocol

AVAILABLE EVERYWHERE

*Trade Enquiries to:*—**EZRA BROS.**, Mustafa Bldg., Sir P. Mehta Road, Bombay 1.

**FAMOUS IN INDIA AND ON THE CONTINENT**

Madras Stockists:—LOANE SQUARE PHARMACY
160, BROADWAY, MADRAS

சேலைகளுக்கு
— சிறந்த இடம் —

## N. C. B.

—கார்னர் ஷாப்—

N. C. பாலுசாமி ஐயர் & சன்
86, நயினியப்ப நாய்க்கன் தெரு,
மதராஸ்.




**CHROMECO AGENCY**

NEXT TO GOKHALE HALL



தந்தி: "GOODWILL" த. பெ. நெ. 113 டெலிபோன்: 2724

# ஸௌத் இந்தியா கார்பொரேஷன் (மதராஸ்) லிமிடெட்

**80, செம்புதாஸ் தெரு, ஜியார்ஜ் டவுன், சென்னை**

பிராஞ்சுகள்

**கல்கத்தா, காரைக்குடி, கோயமுத்தூர், திருச்சினாப்பள்ளி**

எம்மிடம் திரணை, சதுரம், பட்டா, இரும்புத் தகடு, கலாய்த்தகடு, கர்டர், கலாய்ப் பைப்பு, கலாய்க் கம்பி, ஆணி வகைகள், பெயிண்டு, சிமெண்டு முதலிய எல்லா விதமான, இரும்பு சாமான்களும் கட்டிட சாமான்களும் கிடைக்கும்.

சினிமா பிடிப்பதற்கு வேண்டிய 2000 பவர் முதல் 5000 பவர் வரையில் பிரகாசமான பல்புகளும் அதைச் சேர்ந்த லைட் பிட்டிங்குகளும்

எலெக்டிரிக் வொயரிங் சாமான்கள், வொயர், பல்பு, விசிறி, எலெக்டிரிக் மோட்டார், பம்பு முதலிய எல்லா எலெக்டிரிக் சாமான்களும் கைவசமிருக்கின்றன.

*Sole Distributors for Madras Presidency and States*

## BLOOD VITA

பிளட் விட்டா என்பது கல்கத்தா மெடிகல் ரிசர்ச் லபாரட்டரியில் டாக்டர் அத்யக்ஷ மாதூர் பாபு என்பவரால் தயாரிக்கப்பட்ட உயர்ந்த இரத்த விருத்தி டானிக். **8 அவுன்ஸ் பாட்டில் விலை ரூ. 1/4**

*

## ASCU WOOD PRESERVATIVE [ஆஸ்கூ]

இது மரப்பலகை, உத்தரம், விட்டம், டெலிபோன், எலெக்டிரிக் கம்பங்கள் முதலிய எல்லாவிதமான மரச் சாமான்களும் உளு, கறையான், மண் இவைகளால் பாதிக்கப்படாமல் இருப்பதற்கென்று, இந்திய சர்க்கார் காட்டு இலாகா ஆபீஸராக இருந்த டாக்டர் காமேசம் அவர்களால் கண்டு பிடிக்கப்பெற்ற, ஒரு ரசாயனப் பொருள். உபயோகப்படுத்தும் முறை இவைகளுக்கு, நேரிலோ, கடிதமெழுதியோ தெரிந்து கொள்ளலாம். ஜில்லா ஏஜண்டுகள் தேவை.

**விவரங்களுக்கு எழுதவும்**

# உடம்பும் மருந்தும்

குடிகாரர்கள், குடியை எப்படி விடச் செய்வது என்பது ஒரு பிரமாதமான பிரச்னை. குடிக்க ஆரம்பித்தவனை, மதுவரக்கன் தன் பிடியைவிட்டு விடுவதே யில்லை. இரண்டு டாக்டர்கள் இதற்கொரு யுக்தி கண்டுபிடித் திருக்கிறார்களாம். குடிகாரன் மதுவைக் குடித்து மயக்கத்தி லிருக்கும் போது, ஒரு மருந்தை அவன் உடலில் அவர்கள் ஊசி மூலம் குத்தி ஏற்றிவிடுகிறார்கள். அந்த மருந்து வேறொன்று மல்ல; வாயிலே அருவருப்பு உண்டாகும்படி செய்யக் கூடிய ஏதாவது ஒரு மருந்து. குடிகாரனின் குடி மயக்கம் தீரும் வரையில், இந்த அருவருப்பு மருந்தைத் திரும்பத் திரும்ப உடம்பில் அந்த டாக்டர்கள் இப்படி ஏற்றிக் கொண்டே யிருக்கிறார்கள். அவன் ஒவ்வொரு முறை குடிக்கும் பொழுதும், இந்த வேலையைச் செய்கிறார்கள். இவ்விதம் கொஞ்ச காலம் நடந்த பிறகு, குடிகாரனுக்கு ஒரு புதிய இயற்கை ஏற்பட்டுவிடுகிறது. அதாவது, மதுக் குப்பியைக் கண்ட வுடனேயே அவனுக்கு அருவருப்பு தானாக உண்டாகத் தொடங்கி விடுகிறது. அந்த அருவருப்பு மருந்தை ஏற்றாம லிருக்கும்போதே, மனதின் சகவாச ஞாபகத்தால் இப்படி ஒரு இயல்பைக் குடிகாரன் அடைகிறான். அதிலிருந்து மதுவில் வெறுப்பு வந்து, தானாகவே அதை அவன் கைவிட்டு விடுகிறான்.

* * *

### அஜீர்ண வைத்தியம்

இயற்கை வைத்தியத்தால் குணமடையக்கூடிய மிகவும் சுலபமான வியாதி அஜீர்ணந்தான் என்று ஸ்டான்லீ லீப் என்ற டாக்டர் கூறுகிறார். தற்காலிக அஜீர்ணமும் சரி, நீடித்த அஜீர்ணமும் சரி, இயற்கை வைத்தியத்தால் குணமடைந்து விடுமாம். அந்த இயற்கை வைத்திய சிகிச்சைதான் என்ன? உபவாசம் கிடப்பதுதானாம். எப்பேர்ப்பட்ட நீண்டகால அஜீர்ணமானாலும் சரி, போதிய அளவு உபவாசம் கிடந்தால் தீர்ந்துவிடும்; நான்கு நாள் உபவாசமே பிரமாத பலனைத் தரும். ரொம்ப நோஞ்சலாயிருப்பவர்கள், ஐந்து முதல் பத்து நாளைக்கு மேல் உபவாசம் இருக்கலாகாது. உபவாச காலத்தில் பால் ஒன்றை மட்டிலுமே சாப்பிட்டு வரவேண்டும். ஐந்து நாளைக்கு மேல் உபவாசம் கிடப்பதானால், ஒரு டாக்டரின் உதவியோடுதான் செய்யவேண்டும்.

### வலி அளக்கும் கருவி



இன்ப துன்ப உணர்ச்சிகள் சம்பந்தப்பட்ட மட்டில், ஜனங்கள் வெவ்வேறு இயல்புடையவர்களாயிருக்கலாம். ஆனால், வலி சம்பந்தப்பட்ட மட்டில் சகல ஜனங்களும் ஒரே விதமான இயல்புடையவராகத்தான் இருக்கிறார்கள் என்று, நியூயார்க் கார்னெல் வைத்தியக் கல்லூரிக்காரர்கள் கண்டுபிடித்துள்ளார்கள். தேகத்திலே ஏற்படும் எவ்வித வலியையும் இவ்வளவு என்று அளந்து கணக்குச் செய்துவிடக்கூடிய ஒரு கருவியையும் அவர்கள் செய்துள்ளார்கள். அந்தக் கருவி ஒரு விதமான விளக்காகும். அந்த விளக்கின் ஒளிச் சூட்டை நெற்றியிலோ கைகளிலோ செலுத்துவார்கள். அதன் மூலம் வலியின் அளவு தெரிந்துவிடும். படத்திலுள்ளவனின் தலையிலே இருப்பது நமது பழங்காலத்துப் பெண்களின் நகையான சந்திரப் பிரபை-சூரியப் பிரபை அல்ல; இந்த வலியளக்கும் நூதனக் கருவிதான் அது.

* * *

### ‘இறைவன் ஆலயம்’

“‘உடம்பு இறைவன் ஆலயம்; பரமாத்மாவின் திருக்கோயில். ஆலயத்தை அழிக்கும் மனிதனை ஆண்டவன் அழித்து விடுவார்’ என்று கிறிஸ்தவ வேதம் கூறுகிறது. இந்த ஆக்ஞைக்கு மனிதன் எப்படித் தப்ப முடியும்? கர்ம பலனை - இயற்கையின் சட்டத்தை - தெய்வ நியமத்தை அற்ப மனிதன் எப்படி மீறிவிட முடியும்? இயற்கையின் சட்டமும் தெய்வ நியமும் ஒன்றேயாகும். நாம் ஒன்றை மீறி, மற்றொன்றை மீறாது தப்பித்துக்கொள்ள முடியாது” என்கிறார் ஸி. பிரௌட் என்ற ஆகார நிபுணர். தேகாரோக்கியத்தைக் காப்பாற்றிக் கொள்ளாதவன் தெய்வத் துரோகியாகிறான் என்ற கருத்தைத்தான் அவர் இவ்வாறு கூறுகிறார்.

* * *

### அவரையின் விசேஷம்

அவரையைப் பற்றி அகத்தியர் குணபாடம் கூறுவதாவது:

அவரை யிலைக்குத் தலைநோய்
ஆழ்ந்த கிராணி
இவரும் விஷிசி முதல்
ஏகும்—தவறாமல்
கொண்டவர்க்குத் தீபனமாம்
கோதாய்! விரணமறுங்
கண்ட வர்க்குத் தோற்று
மிது காண்.

இதைச் சென்னை சர்க்காரின் ‘குணபாடம்’ இவ்வாறு விளக்குகிறது: அவரையிலைச் சாற்றைச் சிற்றாமணக் கெண்ணெயில் குழைத்துப் புண்களுக்குப் பூசலாம். அந்தச் சாற்றிலே கற்கண்டுப் பொடி கூட்டிப் பாக்களவு உண்ண, கிராணி, சீதபேதி இவை நிற்கும். ஒரு துண்டுச் சீலையை இச்சாற்றிலே நனைத்து நெற்றி மேல் போட்டுவர, தலை நோய் நீங்கும்.

---

**ஹிட்லருக்கு முடி:** திருப்பதி வேங்கடாசலபதிக்கு நம்மில் பலர் முடி கொடுக்கிறார்கள். ஜெர்மனியிலோ பல ஸ்திரீ புருஷர்கள் ஹிட்லருக்குத் தங்கள் தலைமயிரை முடி செலுத்துகிறார்களாம். காரணம் கம்பளிப் பஞ்சந்தான். வெளி நாடுகளிலிருந்து **கம்பளி**கள் தருவித்துக் கஷ்டப்படாமல், தலைமயிரை நீள வளர்த்துச் சிரைத்துக் கம்பளிகள் நெய்கிறார்கள் இப்போது ஜெர்மானியர்!

**வேதாந்த விசாரணை :**

# காலத்தை வென்ற கலைஞன்

## [தோரோ]

*[ஹென்றி டேவிட் தோரோ பெரிய இயற்கைப் புலவர். காட்டிலே தன்னந் தனியே ரிஷி முனிவர்களைப் போல் சிலகாலம் வாழ்ந்த அமெரிக்க ஞானி. அவரது சிந்தனை மிக்க நூல்கள் உலகப் பிரசித்தமாகும்.]*

நமது முன்னோர்களுடன் நம்மை ஒப்பிட்டுப் பார்க்கும்போது, அறிவு சம்பந்தப்பட்ட மட்டில், நாம் மிகக் குள்ளர்களா யிருக்கிறோமாம். இப்படிச் சிலர் சதா நமது செவிகளைத் துளைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், அதனால் என்ன பிரயோசனம்? செத்த சிங்கத்தை விட ஜீவனுள்ள சுவானமே பெரியது. தான் குள்ளர் ஜாதியிலே பிறந்ததற்காக ஒருவன், குள்ளர்களுக்குள்ளே மிகப் பெரியவனாக விரும்புவானா? அதை விட்டு, ஓடிப்போய்த் தற்கொலை செய்து கொள்ளுவானா? ஒவ்வொருவனும் தன் தன் ஜோலியைக் கவனிக்கட்டும்; தான் எதற்காகப் படைக்கப் பட்டிருக்கிறானோ அதைச் செய்ய முயலட்டும். வெற்றிக்காக நாம் ஏன் இவ்வளவு ஆத்திரப்பட வேண்டும்; இவ்வளவு அவசரமாய் ஏன் முயற்சி செய்ய வேண்டும்? ஒரு மனிதன் தனது சகோதரர்களோடு சேர்ந்து செல்ல முடியாவிட்டால், அவனது காதில் விழுவது வேறு முரசமாயிருக்கலாம். தான் செவியுறும் சங்கீதம், அது எவ்வளவுதான் எட்டவிருந்து வரினும், அதற்கேற்கவே ஒவ்வொருவனும் நடிக்க வேண்டும். இலந்தை மரத்தைப் போல் அவசர அவசரமாய் அவன் முதிர வேண்டியதில்லை. தனது வசந்தத்தைக் கோடையாக்கிக் கொள்ள அவன் விரும்புவானேன்? நாம் எதற்காகப் படைக்கப்பட்டோமோ அந்த நிலைமைகள் இன்னும் ஏற்படா விட்டால், அதற்காக, நமக்குற்ற தல்லாத காரியத்தை நாம் மேற்கொள்ளுவதுண்டோ? வீண் டம்பத்திலே அமிழ்ந்து, நாம் நாசமாகலாகாது. மேலே நீல வானம் . இல்லையென்று நினைத்து, கஷ்டப்பட்டு நீலக் கண்ணாடிகளை அமைத்துக் கொண்டு, அவற்றின் மூலம் உண்மை நீல வானத்தை நாம் நோக்குவதுண்டோ?

கௌரூ என்ற நகரில் ஒரு கலைஞன் இருந்தான். எந்த வேலை செய்தாலும் அதில் துளியும் குறையின்றிப் பரிபூர்ணமா யிருக்க வேண்டும் என்று அவன் ஆசைகொண்டான். ஒரு நாள், ஒரு கைத்தடி செய்ய, அவன் எண்ணினான். "பரிபூர்ணமின்றிக் குறையுள்ள வேலையிலே தான் காலக் கணக்கு வரும்; குறையற்ற பரிபூர்ண வேலையிலே காலம் வந்து குறுக்கிடாது. சகல அம்சங்களிலும் நான் பரிபூர்ணமாயிருக்கவேண்டும். என் ஆயுள் பூராவும், அதனையேயன்றி வேறெதனையும் நான் செய்யாவிட்டாலும் பாதகமில்லை" என்று அவன் தனக்குத்தானே சொல்லிக் கொண்டான். கண்ட மரத்திலே கைத்தடியைச் செய்வதில்லை என்று சங்கற்பம் செய்து கொண்டான்.

தகுதி வாய்ந்த மரத்தைத் தேடி, அந்த க்ஷணமே, அவன் காட்டுக்குச் சென்றான். தேடித்தேடி ஒவ்வொரு குச்சியாய் அவன் தள்ளிவந்தான். அவனது நண்பர்களெல்லாம் காலக்கிரமத்தில் அவனைக் கைவிட்டகன்றனர். ஏனெனில், வேலையிலே களைத்துக் கிழங்களாய், அவர்கள் மரித்து விட்டார்கள். அவனோ ஒரு நிமிஷங்கூடக் கிழமாக வில்லை. அவனது ஏகாக்கிர சித்தமும் திடசங்கற்பமும் பக்தி மகிமையும், அவனுக்கு, அவனை யறியாமலே, நித்திய யௌவனத்தை அளித்து விட்டன.

அவன் காலத்தோடு ராஜி செய்து கொள்ள வில்லை. ஆகையால், காலம் அவனுக்கு வழி விலகி ஒதுங்கித் தூரத்திலே நின்று பெருமூச்சு விட்டது. இவனை வெல்ல முடியவில்லையே என்ற பெரு மூச்சு!

சகல அம்சங்களிலும் பொருத்தமானதொரு குச்சியை அவன் கண்டு பிடிக்குமுன்னர், கௌரூ நகரமே பாழடைந்து விட்டது. அதன் பாழும் மண் குன்று ஒன்றின் மீது அமர்ந்து கொண்டுதான் அவன் அந்தக் குச்சியைத் தோல் உரித்தான். அந்தக் குச்சியைச் செதுக்கி, அதற்கு அவன் சரியான ரூபங் கொடுக்கு முன்னர், காந்தார ராஜவம்சமே அழிந்து விட்டது. அந்த வம்சத்தின் கடைசித் தோன்றலின் நாமத்தை அக்குச்சியின் ஒரு முனையால் புரளும் மணலிலே எழுதிவிட்டு, மீண்டும் தன் வேலையிலே, அவன் ஈடுபட்டான். அவன் குச்சியை இழைத்து மெருகிட்டு முடித்தபோது, துருவ நட்சத்திரமே மாறிவிட்டது. குச்சிக்குக் கொண்டையமைத்து, நவரத்தினங்களை அதில் வைத்துப் பதிக்கு முன்னர், பிரம்ம தேவன் பன் முறை தூங்கி விழித்து விட்டான்.

ஆனால், நான் இதை யெல்லாம் சொல்லி நேரம் கடத்துவானேன்? அவனது வேலை பூர்த்தியாகி முத்தாய்ப்பு வைத்தபோது, என்ன ஆச்சரியம்! அந்தக் குச்சி அவனது கண்களுக்கு முன்னே அகன்று விரிந்து, பிரும்ம சிருஷ்டிகளுக்குள்ளேயே மகா அழகான பொருளாயிற்று. கைத்தடி செய்வதிலே அவன் ஒரு புது முறையைப் படைத்துவிட்டான். பூர்ணமும் அழகும் நிறைந்ததொரு புதிய உலகமே அதில் தோன்றி விட்டது. பழைய நகரங்களும், ராஜவம்சங்களும் மறைந்து போயினும், அவற்றினும் அழகிய, அவற்றினும் மகிமை மிக்க புதிய நகர்களும் அரச குலங்களும் தோன்றி விட்டன.

இதோ தன் காலடியிலே செதுக்கிக் கிடந்த துகளெல்லாம் புத்தப் புதிதா யிருப்பதை அவன் கண்டான். அவனுக்கும் அவனது வேலைக்கும், முந்தி மறைந்த காலமெல்லாம் வெறும் மாயை ஆயிற்று. ஏனெனில், மரணத்துக்கு ஆட்பட்ட நரன் ஒருவனது மூளை யென்னும் செத்தையில் பிரம்மதேவனது மூளையின் ஒரே ஒரு பொறி பட்டு ஜ்வாலை மூட்டுவதற்கு எந்நேரம் ஆகுமோ அதை விடத் துளிநேரமும் அதிகமாய் இதிலே கழிந்து விடவில்லை. பொருள் புனிதமானது; அவனது கலை புனிதமானது. பலன் மாத்திரம் அற்புதமா யன்றி வேறு எவ்வாறிருக்க முடியும்?

# புத்தக உலகம்

**யுகசந்தியின் புது மலர் :** "இது யுகசந்தி. காந்தி இதன் புது மலர். மதுவுண்ணாத தேனீக்கள் நாம். அவர் வாழ்கிறார் ; நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம். நாமும் வாழ வேண்டாமா ?" என்று கேட்கிறார் ஸ்ரீ. வெ. சாமிநாத சர்மா. (**மகாத்மா காந்தி :** ஆங்கிலத்தில் தொகுத்தவர் ஸர். எஸ். ராதா கிருஷ்ணன், எம். ஏ. மொழி பெயர்த்தவர் : வெ. சாமிநாத சர்மா. வெளியிட்டோர் : புது மலர்ச்சி நூற்பதிப்புக் கழகம், இரங்கூன். விலை ரூ. 3—0—0). மகாத்மா காந்தியின் எழுபதாவது ஜயந்தியை முன்னிட்டு, உலக அறிஞர் பலரின் புகழுரைகளை வாங்கித் தொகுத்து, மகாத்மாவுக்குக் காணிக்கையளித்தார் ஸர். ராதாகிருஷ்ணன். இந்த அரிய நூலின் முன்னுரையில் ஸ்ரீ. சர்மா மேலும் கூறுகிறார் :

"இந்த நூலில் அறுபத்து மூன்று கலைஞர்கள் அறுபத்து மூன்று கோணங்களிலிருந்து காந்தியைப் பார்க்கிறார்கள். ஒவ்வொரு கோணத்துக்கும் அவர் பொருந்துகிறார். அப்படியானால் நமது கடமையென்ன ? இதுதான் இந்த நூலின் கேள்வி.

'அநுபவ சமுத்திரம் ; உறுதி மலை ; நகைக் களஞ்சியம் ; மனிதத் தன்மையின் நிறைவு - இவைதான் காந்தி. ஆண்டகை ; கர்ம வீரர் ; சேவைக்குச் சேவகர் ; பிச்சைக் காரரல்லாத பிச்சைக்காரர் ; மகுடம் தரியாத அரசர்—இவர்தான் காந்தி. இவரை நாம் தெரிந்து கொள்ள வேண்டாமா ? இது தான் இந்த நூலின் கேள்வி.

"காந்தி, பழமையின் பிரதிநிதி ; புதுமையின் சங்கநாதம் ; இயற்கையின் தொண்டர் ; செயற்கையின் எஜமானர். தாழ்ந்தவர்களுக்குச் சுமை தாங்கி ; வாழ்கிறவர்களுக்குக் கலங்கரை விளக்கம். இவரைக் கடவுளாக நாம் வழிபடுகிறோம். ஆனால், மனிதராக இவரை நாம் பின்பற்ற வேண்டுமென்று உலக அறிஞர்கள் இந்த நூல்மூலம் நமக்கு வலியுறுத்துகிறார்கள்."

* * *

**கவியின் புலம்பல் :** மோஹன் ஒரு கவிஞன். பணக்காரியான அத்தை, அவனை மிகச் செல்லமாய் வளர்க்கிறாள். பாங்கி முறிகிறது. அத்தையின் பணம் போகிறது. வறுமை பிடுங்குகிறது. கவிஞனுக்குக் கண் திறக்கிறது. (**கூண்டுக்கிளி** முதலிய நாடகங்கள். ஆசிரியர் : ஹரீந்திரநாத் சட்டோபாத்யாயா. மொழி பெயர்த்தவர் தி. ஜ. ர. வெளியிட்டோர் : சக்தி காரியாலயம், 46, முத்துமாரி செட்டித் தெரு, சென்னை. விலை ரூ. 1—0—0) 'சவப்பெட்டி' என்ற நாடகத்தில் வரும் அந்த மோஹன், அத்தையிடம் இவ்வாறு புலம்புகிறான் :

"ஏகாந்தமாய் ஓய்வோடிருந்தேன் ; உன் பாங்கியிலிருந்து முட்டின்றிப் பணங் கிடைத்தது. அதன் பலனைத்தான், ஆத்மாவையும் கடவுளையும் பற்றி, அழகழகாய் என்னால் எழுத முடிந்தது. இதை நான் முன்னே உணராமல் போனேன். பாங்கி முறிந்த நிமிஷத்திலே, நான் வாடி விழுந்தேன் ; என் கவிதையும் என்னை விட்டகன்றது. இந்தப் பேடித்தனத்தைக் கண்டுகொண்ட அதிர்ச்சியால், என் ஆண்மையுங் கூடப் போய்விட்டது. நான் ஒரு கோழையானேன். வெகு சொகுசாய் நான் பாடியது எந்த ஆத்மாவைப் பற்றியோ அந்த ஆத்மா சின்னஞ் சிறியதொரு சுண்டெலியாய்ச் சுருங்கி, குறுகிய நாற்றச் சாக்கடையொன்றின் இருளிலே அகப்பட்டுக் கொண்டது. கடவுளே ஒரு பனிப் படலமானான் ; அந்தப் படலத்தினூடே, எனது உறக்கமற்ற கண்கள், இரத்தச் சிவப்புடைய இரு சூரியன்கள் போல, வர்ணமும் ஒளியுமற்று, குடி வெறியுற்ற அகண்ட வெளியிலே சுழலலாயின. வெறும் மாயை ! மாயை ! உன் பணத்தைக் கொண்டு வெறும் மாயைகளை எனக்கு ஊட்டி வளர்த்தாய். முட்டாள்தனமாய் உன்னையே சார்ந்து வாழ்ந்ததை, என் சுதந்திரம் என்றாய். வைத்திய சாலைகளில் பாஷாணச் சீசாக்களுக்கு விலாசம் ஒட்டுவார்களே அதே போல, எனக்கு நீ மேதை என்று விலாசமிட்டாய் ; இவ்வாறு என்னைப் பொய்யும் வீணுமான கண்ணாடிப் பெட்டியிலே, முகஸ்துதியால் மகிழ்ந்ததொரு கைதியாக வைத்துவிட்டாய். உன் பணம் ! யார் பணம் ? அதை நீ எப்படிப் பெற்றாய் ? ஏழை மக்களிடம் சுரண்டிய யாரோ ஒருவன் உனக்கு வைத்துச் சென்றது தானே. என் மேதை ! யார் மேதை ? மேதை என்பது ஒரே ஒருவனுக்கு, ஒரு குடும்பத்துக்கு, ஒரு வகுப்புக்கு மட்டிலுமே சொந்தமாய், ஆத்மஸ்துதியும் சுயநலமுமே குறிக்கோளாய்க் கொண்டதுபோல் பேசுகிறாயே ! நான் வியர்வை சொட்ட உழைக்க வேண்டும் ; வேலை தேடி அலைய வேண்டும். ஓய்வையும் சுகத்தையும் இழந்த இப்போது நான், என்னை மேதாவி யாக்கியது எது என்று திடீரெனக் கண்டு கொண்டேன்......பிறர் உழைப்புத்தான் எனக்கு ஓய்வு அளித்தது ; நான் அவர்களுக்குத் திரும்பக் கொடுத்தது என்ன ? எனது நன்றியை, அவர்களுக்கு நான் எப்படிக் காட்டினேன் ?"

* * *

**பிச்சைக்காரர் :** அவர்களைக் கண்டால், "இதென்ன தொல்லை?" என்கிறோம் நாம். ஆனால், அவர்களின் உள்ளம் என்னவெல்லாம் நினைக்கிறதோ ! அதைக் கற்பனை செய்கிறார் ஓரிளங் கவிஞர். (**கனவு :** ஆசிரியர் : கம்பதாஸன். கிடைக்குமிடம் : தபால் பெட்டி நெ. 39, சென்னை. விலை ரூ. 1-0-0.) அவருடைய பாட்டுக்களில் எழுத்துப் பிழைகளும், பல இடங்களில் சீர்தளைத் தவறுகளும் இருப்

பது வருத்தமாய்த்தான் இருக்கிறது. என்றாலும், அவருடைய 'பிச்சைக்கார'னின் வாய்ப்பிறப்பான இந்த இரண்டு அரிய பாடல்களையும் பாருங்கள்:

நதியிளைப்பாறிட
ஆழியுண்டு—கொடும்
நஞ்சிளைப்பாற
மருந்துமுண்டு
கதிரிளைப்பாற
இராவுமுண்டு—எங்கள்
கவலை யிளைப்பாற
உண்டோ இடம்?

கண்ணிளைப்பாறிடத்
தூக்கமுண்டு—அற்பக்
கழுதை யிளைப்பாறத்
துறையுமுண்டு
பண்ணிளைப்பாறிடத்
தாளமுண்டு—எங்கள்
பசியிளைப்பாறிட
உண்டோ இடம்?

* *

**கடிகார ஜாலம்:** வேறொன்றும் வேண்டாம். உலகமுழுதும் ஒருவர் சுற்றுப்பிரயாணம் செய்தாலே, அவரது உள்ளமும் அறிவும் விசாலமடைவது நிச்சயம். உலகப் பிரயாணம் செய்யும் அறிஞர்கள் எழுதும் நூல்களைப் படிப்போரும் இன்பமடைவார்கள். (**அமெரிக்கா:** ஆசிரியர்: ஏ. கே. செட்டியார். வெளியிட்டோர்: சக்தி காரியாலயம். விலை ரூ. 1—0—0.) ஸ்ரீ. செட்டியாரின் 'அமெரிக்க'ப் பிரயாணத்தில், ஒரு தமாஷான தகவல் இது:

"சாதாரணமாக ஒரு நாட்டிலிருந்து மற்றொரு நாட்டுக்குச் செல்லும்பொழுது, கடிகாரத்தில் மணிநேரம் வித்தியாசப்படுகிறதல்லவா? அதனால் ஜப்பானிலிருந்து அமெரிக்கா செல்லும்பொழுது, நமக்கு ஒரு நாள் லாபம்; அமெரிக்காவிலிருந்து ஜப்பானுக்கு வரும்பொழுதோ, ஒரு நாள் நஷ்டம்.

"ஹாவாய்த் தீவுகளை அடைவதற்கு இரண்டு தினங்களுக்கு முன், கப்பலில் ஒரு நோட்டீஸ் காணப்பட்டது. அதில் 'இன்றைய தினம் 18-ஆம் தேதி புதன்கிழமை; நாளைய தினமும் 18-ஆம் தேதி புதன்கிழமையே' என்றிருந்தது! அமெரிக்காவிலிருந்து ஜப்பானுக்கு வரும்பொழுதோ, கப்பலில் பின்வருமாறு நோட்டீஸ் இருக்கும்: 'இன்று தினம் 18-ஆம் தேதி புதன்கிழமை; நாளைய தினம் 20-ஆம் தேதி வெள்ளிக்கிழமை!'

"இந்த ஒரு நாள் லாபம் எனக்கு மகிழ்ச்சியைக் கொடுக்கவில்லை. வசதியில்லாத சிறிய கப்பலில் ஒரு நாள் அதிகமாகப் பிரயாணம் செய்ய, யார்தான் விரும்புவார்கள்?"

* *

**சிற்ப அதிசயம்:** தஞ்சைச் சிவன் கோயில் ஒரு சிற்ப அதிசயமாகும். (**சோழர் கோயிற் பணிகள்:** ஆசிரியர் ஜே. எம். சோமசுந்தரம் பிள்ளை, பி. ஏ. பி. எல். விலை: அணா 12.) பெரிய கோயிலை ஸ்ரீ. பிள்ளை வர்ணிக்கிறார்:

"கோயிலின் நீட்டளவு 793 அடி. குறுக்களவு 397 அடி. கோயிலின் கருப்பக்கிரகத்துக்கு மேலேயுள்ள அழகிய விமானம் சதுர வடிவமானதும், பதின்மூன்று கோபுர மாடிகள் கொண்டது மாகும். உச்சியில் சதுர வடிவமுள்ள பிரமரந்திரத் தளக் கல்லின் மேல் கலசமும் அதன் மேல் அழகிய ஸ்தூபி ஒன்றும் அமைக்கப்பெற்றுள்ளன. இச் சிறந்த விமானம் 'தட்சிண மேரு' என்றும், 'உத்தம விமானம்' என்றும் அழைக்கப்படுகிறது. இது 216 அடி உயரமுடையது. இதன் ஸ்தூபிக் குடம் செம்பினால் செய்யப்பட்டு, மேலே பொன் தகடு போர்த்ததாகும். செப்புக் குடம் 3083 பலம் நிறையுடையது. அதன்மேல் போர்த்துள்ள பொன் தகடு 2926½ கழஞ்சு நிறையுள்ளது என்று கூறப்படுகிறது. விமான உச்சியில் போடப்பட்ட பிரமரந்திரத்தளம் ஒரே கருங்கல். அது 25½ அடி சதுரம். நிறை 80 டன். இதனைத் தஞ்சைக்கு நான்கு மைல்களுக்கப்பாலுள்ள **சாரப்பள்ளம்** என்ற கிராமத்திலிருந்து சாரம் போட்டு இச் சிகரத்தில் ஏற்றினார்களென்பது அந்தக் கிராமத்துப் பெயரால் ஊகிக்கப்படுகிறது. சதுரக்கல்லின் நான்கு மூலைகளிலும் முறையே இரண்டு நந்திகள் இருக்கின்றன. அவை தனித்தனி 6½ அடி நீளமும் 5½ அடி அகலமும் உள்ளன. அவற்றை யொத்த நந்தியொன்று உமாபரமேச்வரியின் (அம்பிகை) சந்நிதிக்கு எதிரே திருச்சுற்று மாளிகையில் இருப்பதைக் காணலாம்."

## பக்குவ காலம்

ஒருவன் வியாதியால் அவஸ்தைப்படும் தன் குழந்தையைக் கையில் எடுத்துக்கொண்டு ஒரு ஸாதுவிடம் மருந்து கேட்கச் சென்றான்.

ஸாது அவனை மறுநாள் வரும்படி சொன்னார். அவன் மறுநாள் வந்தபோது, "உன் குழந்தைக்குச் சர்க்கரைப் பண்டங்களைக் கொடுக்காதே. சீக்கிரத்தில் குணமுண்டாகும்" என்றார் ஸாது.

அவன் "ஸ்வாமி! இதைத் தாங்கள் நேற்றே சொல்லியிருக்கலாமே" என்றான்.

"அப்பா! நான் சொல்லியிருக்கலாம். ஆனால் நேற்று என் முன்னால் சர்க்கரை வைக்கப்பட்டிருந்தது. அதை உன் குழந்தை பார்த்து, 'இந்த ஸாது அயோக்கியன்போல் இருக்கிறது. சர்க்கரையைப் பிறர் சாப்பிடக்கூடாதென்று சொல்லுகிறான். தான் மட்டும் சாப்பிடுகிறான்' என்று நினைத்திருக்கக் கூடும்" என்று ஸாது பதில் சொன்னார்.

—ஸ்ரீ பரமஹம்ஸர்

* * *

## சர்க்கார் வர்ணங்கள்

ஒவ்வொரு நாட்டுச் சர்க்காரும் தன் தன் பிரசுரங்களுக்கு ஒவ்வொரு வர்ண அட்டையைப் போட்டுக் கொள்கிறது. 'நீலப் புத்தகம்' என்றால், பிரிட்டிஷ் சர்க்காரின் பிரசுரத்தைக் குறிக்கும். ஏனெனில், பிரிட்டிஷ் சர்க்காரின் பிரசுரங்களெல்லாம் நீல அட்டை கொண்டவை.

இதேபோல் பிரஞ்சுக்காரர் மஞ்சளையும், ஜெர்மானியர் வெள்ளையையும், ருஷியர் ஆரஞ்சையும், இத்தாலியர் பச்சையையும், பெல்ஜியர் பழுப்பையும் தங்கள் தங்கள் சர்க்கார் பிரசுரங்களுக்கு அட்டை வர்ணங்களாக முறையே வைத்துக் கொண்டிருக்கிறார்கள்.




# மிட்லண்டு

## இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி
### லிமிடெட்

லோன்ஸ்குயர், சென்னை

பலத்தின் மேல் பலம் பெற்று, பாலிஸிக்கு மேல் பாலிஸி சேர்ந்து, மிட்லண்டு மேன்மேலும் வளர்ந்து வருகின்றது. அதன் பிற்காலத்து வளர்ச்சி இன்னும் அதிகப்படும் என்பதற்கு அறிகுறிகள் இருக்கின்றன.

சேர்மன் :

**குமாரராஜா Sir M. A. முத்தைய செட்டியார், Kt., B.A., M.L.A.**

டைரக்டர்கள் :

AL. SP. PL. சுப்ரமணியன் செட்டியார் அவர்கள்
ராவ்பஹதூர் C. V. CT. V. வெங்கடாஜலம் செட்டியார் அவர்கள்
R. ராமநாதன் செட்டியார் அவர்கள் (Under-Sheriff of Madras)
ST. MR. VR. முருகப்ப செட்டியார் அவர்கள்
T. S. ஷண்முகம் அவர்கள்

செக்ரடரி : Mr. K. சுப்பையா, B.A.   மானேஜர் : Mr. A. V. தியாகராஜா.

# ரொக்க இனாம் ரூ. 10,000

## லக்ஷ்மி, சித்த வசீகரன் கவசங்கள்

இந்தக் கவசங்களைப்பற்றி பொது ஜனங்கள் கொண்டிருக்கும் முடிவை வாசகர்கள் அறியவேண்டும். 15-4-41-ல் பிரேம் என்பவர் டில்லியிலிருந்து எழுதுகிறார்: "உங்களுடைய தாயத்து எனக்கு பல நன்மைகளைத் தந்திருக்கிறது, நிரம்ப திருப்தி. இப்போது 7 ரூ. 5 அணா விலையுள்ள உங்கள் உயர்ந்த 5-ம் நெம்பர் கவசத்தை பரீட்சிக்க விரும்புகிறேன் அதில் ஒரு அபேக்ஷையால் நான்கு காரியங்கள் சித்திக்குமென்று சொல்லப்படுகிறது. தயவு செய்து சீக்கிரம் ஒன்று அனுப்பி வையுங்கள்."

**சித்த வசீகரன் கவசம்:** ஆணோ பெண்ணோ, நண்பரோ, பகைவரோ, நீங்கள் காதலிப்பவர் உங்களிடம் எவ்வளவு பிடிவாதமாக அல்லது உபேக்ஷையாக விருந்தாலும் உங்கட்கு கீழ்ப்பட்டு மனமார நேசிப்பார்கள். விலை தங்கக்கூடு ரூ. 5-15-0, வெள்ளி ரூ. 2-12. செம்பு ரூ. 1-15. (3-க்கு 5 ரூபா).

**லக்ஷ்மி கவசம்:** செல்வத்தை வேண்டுபவர்க்கு இந்தக் கவசத்தை சிபார்சு செய்கிறோம். இது கெட்ட கிரகங்களின் பார்வையைத் தடைப்படுத்தி அதிர்ஷ்டத்தைத்தரும். வியாபாரம், லாட்டரி, பரீட்சை, வழக்கு ஆகியவற்றில் வெற்றிதந்து, பகைவர்களை வென்று, வேலை கொடுத்து உதவும். இன்னும் வரும் நன்மைகள் பல குழந்தைப் பேறு வேண்டுவோர் புருஷனும் பெண்ணும் ஒவ்வொன்றை அணிக.

விலை செம்புக்கூடு ரூ.1-15. (3-க்கு ரூ.5) வெள்ளி ரூ.2-12. தங்கம் ரூ. 5-15.

ஒரே கவசத்தில் 4 காரியம் வெற்றி வேண்டுவோர் ரூ. 7-5-க்கு எங்கள் 5-ம் நம்பர் அதி சக்தி கவசத்தை வாங்குக.

அடிக்கடி கரு வழிந்துவிடும் பெண்களுடைய புருஷர்களும் சிறு பிராயத்தில் குழந்தைகள் இறக்கும் தந்தையரும் ?-ம் நம்பர்கவசம் வாங்குக. விலை ரூ. 11.

குறிப்பு: (1) மேற்குறித்த கவசங்கள் பொய்யானவை என்று நிரூபிப்பவர்கட்கு 10 ஆயிரம் ரூபாய் இனாம். கவசம் பொய்யானால் பணம் வாபஸ்.

(2) இந்த கவசங்களை அணிய எவ்வித தயாரிப்பும் வேண்டியதில்லை; கஷ்டமும் கிடையாது.

ANAND SWAMI, ANAND KUTI,

P. B. 61, (D. 1413) LAHORE (India.)



## அனுபவ ஜோதிஷர்



திறமைக்கு தங்க மெடல்களும் நற்சாட்சிகளும் பெற்றவர், எதிர்காலத்தைப் பற்றி 3 கேள்விகளுக்கு ரூ. 1 மேல் கேள்வி 1-க்கு அணா 8. மாதவாரி ஒரு வருஷ பலன் ரூ. 5. ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை.

புரொபஸர் காழியூர் கோவிந்தாச்சாரி
3/2, பிராடீஸ் ரோட், மயிலாப்பூர்
மதராஸ்



நல்ல

## பழங்களுக்கு

FANCY FRUIT STALL

Corporation Fruit Market

Madras.



# எஸ். வி. ஆர்.
# பாபுலர் சைகிள்கள்

S·V·R POPULAR MADE IN ENGLAND

நீண்டகால உழைப்புக்கும், சிக்கனத்துக்கும், சுக சவாரிக்கும், நல்ல ஓட்டத்திற்கும், பார்வைக்கும், எப்பொழுதும் விலை குறையாத மதிப்புக்கும் ஒப்புயர்வற்றது.

எல்லா பிரபல வியாபாரிகளிடமும் கிடைக்கும்

**எஸ். வி. ஆர். சைகிள் மார்ட்,**

தலைமை ஆபீஸ்: காரைக்குடி

ஸென்ட்ரல் ஆபீஸ்: 2-22, பிராட்வே, மதராஸ்.

பிராஞ்சுகள்:

52, தெற்கு ராஜ வீதி, தூத்துக்குடி.
கீழ ராஜ வீதி, புதுக்கோட்டை.



## 1941-ம் வருஷத்திய
## லிஸ்ஸன் ரேடியோ (பிரிட்டிஷ் மேக்)

மாடல் 'கிங்ஸ் கேட்' ரூ.445



7 வால்வு A.C.D.C. 18 to 65, 93,200 to 550.

- முல்லார்டு வால்வுகளும் ஸ்பேர் பார்ட்ஸ்களும் பிட்டப் செய்யப்பட்டது.
- மேக்கர்களால் ஒவ்வொரு சாமானும், ஒரு வருஷ உத்திரவாதத்திற் குட்பட்டது.
- சிக்கனச் செலவில் உலக விஷயங்களை எளிதில் அறிந்து கொள்ளும்படி செய்யும் அற்புத ரேடியோ.
- பாட்டரி, மெயின்ஸ், ஏ. ஸி., டி. ஸி. மூன்றிலும் வேலை செய்யக்கூடியது.

ஜெயாபோன் கம்பெனி
(ஸோல் டிஸ்டிரிபியூட்டர்ஸ்)
1-8, பிராட்வே (Phone: 3727) ஜி. டி. மதராஸ்

# பறித்த பூக்கள்

**தாகூரின் வாழ்க்கை:** கவி திலகரது வாழ்க்கையின் முக்கிய சம்பவங்களை 'ஹனுமான்' தொகுத்துத் தந்திருக்கிறது:

ஜனனம்: 1861-ஆம் வருஷம்.

கல்வி கற்றது: வீட்டுக்கு வந்து போதித்த தனி ஆசிரியர்களிடம்.

கல்கத்தாவில் இளமையில் வாசம் செய்தார்.

தமது 24-ஆம் வயதில் தம் தகப்பனார் மஹரிஷி தேவேந்திரநாத் தாகூரின் ஜமீனை நிர்வகிக்கலானார்.

ஜமீன் நிர்வாகத்தி லீடுபட்டிருந்தபோதே, தமது நூல்களை எழுதினார்.

சீமைக்கு 1912-ஆம் ஆண்டு விஜயம் செய்தார். தமது வங்க நூல்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார்.

நோபல் இலக்கிய வெகுமதியை 1913-ஆம் ஆண்டு பெற்றார்.

தமது 60-ஆவது வயதில் சித்திரங்கள் வரையலானார். மாஸ்கோ, பெர்லின், பாரிஸ், நியூயார்க், கல்கத்தா ஆகிய நகரங்களின் காட்சிச் சாலையில் இவரது அந்தச் சித்திரங்கள் வைக்கப்பட்டன.

சாந்திநிகேதன் சர்வகலா சாலையை ஸ்தாபித்தார்.

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியக் கொள்கையைக் கண்டித்து, 1918-ஆம் ஆண்டு 'ஸர்' பட்டத்தை விட்டார்.

சுமார் 3000 பாட்டுக்கள் வரையில் எழுதியுள்ளார். 38 ராஜீயப் புஸ்தகங்கள் வெளியிட்டுள்ளார். 38 நாடகங்கள், 19 நாவல், சிறு கதைப் புஸ்தகங்கள் வெளியிட்டுள்ளார்.

* *

**செம்படவர் பாட்டு:** 'பெயர் வைத்தவர் யார்?' என்று பூபதிதாஸன் ஒரு கதை எழுதியிருக்கிறார். 'கலைமகள்'ளில் உள்ள அந்தக் கதையில் வருகிறது இந்தச் செம்படவர் பாட்டு. தாங்கள் மீன் பிடித்து வந்த விமரிசையைச் செம்படவர்கள் வர்ணிக்கிறார்கள்:

ஏலேலோ ஏலஎலோ—வீராயி  
ஏலேலோ ஏல எலோ—காத்தாயி  
உருண்டுவந்தோம் அலையினிலே—  
வீராயி  
சுருண்டுவந்தோம் பனியினிலே—  
காத்தாயி  
துள்ளிவந்தோம் திரைபிளந்து—  
வீராயி  
அள்ளிவந்தோம் அலைபிளந்து—  
காத்தாயி  
ஏலேலோ ஏலஎலோ—வீராயி  
ஏலேலோ ஏலஎலோ காத்தாயி.

* *

**குடும்ப விவகாரம்:** மனிதப் பிறவி சோற்றுலெடுத்த சுவராகும். ஆனால், அந்தச் சாப்பாட்டு நேரத்திலேதான் தம்பதிகளின் விவகாரமெல்லாம் பெரும்பாலும் கிளம்புகின்றன. 'ஆனந்தவிகட'னில் ராஜம் எழுதுகிறார்:

சில பெண்கள் இருக்கிறார்கள்; பரிமாறும் சமயம் பார்த்துத்தான் தங்கள் குறைகளை அடுக்க ஆரம்பிப்பார்கள். அதனால், புருஷன் ஒவ்வொரு வாய் சாதம் விழுங்கும் போதும் கவலையையும் சேர்த்து விழுங்கும்படி யாகிறது.

இவர்கள் தான் இப்படி யென்றால், இலையில் உட்கார்ந்து ஒன்றுமில்லாததற்கெல்லாம் கோபித்துக் கொள்ளும் புருஷர்களும் இருக்கிறார்கள். இலையில் ஏதாவதொன்று நன்றா யில்லாவிட்டால், அதை அப்படியே ஒதுக்கித் தள்ளிவிட்டு ஹோட்டலுக்குக் கிளம்புகிறபேர் எத்தனை பேரைப் பார்க்கிறோம்!

சில புருஷர்கள் இருக்கிறார்கள். இலையில் போட்டிருப்பதை ருசி பார்த்துச் சாப்பிடுவதில்லை. "அவாத்தில் அப்படிப் பண்ணியிருந்தா. இவாத்தில் இப்படிப் பண்ணியிருந்தா!" என்று சொல்லிக்கொண்டே சாப்பிடுவது வழக்கம். அப்படிச் சொன்னால், மிகவும் சிரமப்பட்டுச் சமைத்தவளுக்கு மனது கஷ்டமாக இராதா?

சில சமயம் அவள் கோபத்தில் "சரி, அப்படியானால் இனிமேல் அவாத்திலே போய்ச் சாப்பிடுங்கோ!" என்று சொல்லி, பரிமாறுவதை நிறுத்திவிட்டு உட்கார்ந்து விடுவாள்!

* *

**உன்னத உணவுக்கு விலை:** நண்பர் ஏ. கே. செட்டியார் ஒரு சமயம் பெர்லினுக்குச் சென்ற வரலாற்றைக் 'கல்கி'யில் எழுதி யிருக்கிறார். ஹோட்டலொன்றில் ஸ்ரீ. செட்டியார் பெற்ற அனுபவம் இது:

நான் வெளியிலுள்ள உணவுச் சாலையில் காலை யுணவு உட்கொண்டேன். ஆனால், எனது ஹோட்டல் பில்லில் காலை யுணவுக்காக 55 காசு என்று போட்டிருந்தது. நான் திடுக்கிட்டதற்குக் காரணம் இதுதான்.

ஹோட்டல் மானேஜரிடம் சென்று, நான் காலை யுணவு வேறோர் இடத்தில் சாப்பிட்டதாகவும், ஹோட்டல் பில்லில் இது தவறாகச் சேர்க்கப் பட்டிருக்கிறதென்றும் கூறினேன். அதற்கு அவன், "இந்த ஹோட்டலில் தங்கும் ஒவ்வொருவரும் காலை யுணவு உட்கொள்ள வேண்டும். அப்படி யில்லாவிட்டால், நீங்கள் காலையுணவு உட்கொள்ளாததால் எங்களுக்குண்டாகும் நஷ்டத்துக்காக 50 காசு கொடுக்கவேண்டும்" என்றான்.

"அப்படியானால் 5 காசு ஏன் அதிகமாகச் சேர்த்திருக்கிறீர்கள்?" என்றேன்.

ஐரோப்பாவில் பொதுவாக நாம் சாப்பிட்டால், எவ்வளவு தொகைக்குச் சாப்பிடுகிறோமோ, அத்தொகைக்கு 10 அல்லது 15

சதவிகிதம் பணம் அந்த வேலைக்காரர்களுக்கோ அல்லது ஹோட்டலுக்கோ கட்டாயமாக இனாம் கொடுக்கவேண்டும். இதற்கு 'ஸர்வீஸ்' என்று பெயர்.

"காலை ஆகாரம் சாப்பிடாததற்காக ஐம்பது காசு. சாப்பிடாத காலை ஆகாரத்துக்கு 'ஸர்வீஸ்' ஐந்து காசு. இதென்ன கொள்ளையாக விருக்கிறது?" என்று கோபத்தோடு உரக்கக் கூறினேன். ஹோட்டல் மானேஜர் அசையாது மரம்போல நின்றான். பிறகு அவன் சாந்தமாக "இந்த நாட்டில் நீங்கள் சண்டை போடுவதில் பயனில்லை. பேசாமல் பணத்தைக் கொடுத்து விட்டுச் சாமான்களை எடுத்துச் செல்லுங்கள்" என்றான். 'கடவுளே!' என்று பணத்தைக் கொடுத்தேன்.

*  *

**சிறையில் ராஜாஜி**: திருச்சிச் சிறையில் ராஜாஜி வாழும் முறையைப் புகழாதோர் இல்லை. சமீபத்தில் அங்கிருந்து வெளிவந்த ஆக்கூர் அனந்தாச்சாரி, 'ஹிந்துஸ்தா'னில் எழுதுகிறார்:

சிறிது நேரங்கூட ஓய்வில்லாமல் நாள் பூராவும் உழைத்தாலும் ராஜாஜி களைப்படைவதே யில்லை. விடுதலையாகும் ஸத்யாக்ரஹிகளுக்குப் பொட்டிட்டு வழி அனுப்பி வைக்கிறார். அவரும் டாக்டர் ராஜனும் ஒருவர்க்கொருவர் மிகவும் அனுசரணையாக நடந்துகொள்கிறார்கள். ஒரு முறை ராஜாஜி எடைக்காக நின்றுகொண்டிருந்தபோது, பலத்த காற்று அடித்தது. அவர் விழுந்துவிடப்போகிறாரே என்று நினைத்து அவரது பக்கத்தில் நின்று டாக்டர் ராஜன் அதிக உஷாராகக் கவனித்துக்கொண்டிருந்தார்.

மாதாமாதம் கடைசி நாளன்று, சத்தியாக்ரஹிகளை வரவேற்கவும், விடுதலையாகப் போகிறவர்களை வழிகூட்டியனுப்பவும், சிறையிலுள்ள 'ஆஜாத் மைதான'த்தில் கூட்டங்கள் நடக்கும். அப்போது ஆடல் பாடல்களும் சொற்பொழிவுகளும் நடைபெறும். ராஜாஜியும் அதில் கலந்துகொள்வாரென்றாலும், அரசியல் விஷயமாக ஒன்றுமே பேசமாட்டார். சிறையிலிருக்கும்போது, வெளியில் நடைபெறும் காரியங்களைப் பற்றிக் கவலைகொள்ளக் கூடாதென்று அவர் சொல்லி வருகிறார். தாம் அவ்வாறே நடந்தும் வருகிறார். ஒரு சமயம் ஒரு முக்கியஸ்தர், மற்றொரு பிரமுகரைக் குறிப்பிட்டு, "அவர் சிறைக்கு இன்னும் வரவில்லையே. நான் போய் அவரை அனுப்பலாமா?" என்று கேட்டார். "உலர்ந்த புஷ்பத்தை எடுத்து, யாரேனும் தலையில் வைத்துக்கொள்வார்களா? அது இனி எறியத்தான் லாயக்கானது" என்றார் ராஜாஜி.

ராஜாஜியிடம் நண்பர்கள் மாத்திரமல்ல. சிறைச்சாலை அதிகாரிகளும் பயபக்தியுடன் நடந்துகொள்கிறார்கள். ஆனால், அவரோ அசாதாரணமான அடக்கத்துடன் நடந்துகொள்கிறார்.

*  *

**தாம்பூல விஜயம்**: வெற்றிலையின் வரலாற்றை ஸ்ரீமதி கே. என். சரஸ்வதி, பி. ஏ., '**ராஷ்டிரவாணி**'யில் விவரித்திருக்கிறார்:

வெற்றிலை எங்கேயிருந்து நம் நாட்டுக்கு வந்தது? நமது பாண்டியர்களும், சோழர்களும், கிழக்கே மலேயா, காம்போஜம் முதலிய தூர தேசங்களுக்குக் கப்பல்களை முன் காலத்தில் அனுப்பி வந்தார்களல்லவா? அப்போது யாரோ ஒரு ரஸிகன் அந்தப் பஸிபிக் தீவுகளில் ஒன்றிலே வெற்றிலைக் கொடியைக் கண்டு, அதை நம் நாட்டுக்குக் கொண்டு வந்தானாம். பூவுமின்றிக் காயுமின்றிப் படரும் இந்த அபூர்வ இலைக்கு 'வெற்று இலை' அதாவது வெற்றிலையென்று நமது முன்னோர்கள் பெயரிட்டார்களாம். இதைப் பயிர் செய்வது மிகவும் கடினம். சில ஜாதியார்கள் இந்தப் பயிரின் ரகஸ்யத்தை அறிந்துகொண்டு நன்றாய்ப் பயிர் செய்வார்கள். கொடிக்கால் வேளாளர் என்றும், இலை வாணியர் என்றும் அந்த ஜாதியார்களுக்கு ஆதிகாலத்தில் பெயர். நிகழ்காலத்தில் கொடிக்கால் ராவுத்தர்கள்தான் விசேஷமாக, இந்தத் தொழிலை நடத்தி வருகிறார்கள்.

வட நாட்டிலும் இப்படி வெற்றிலை ஜாதியார்கள் உண்டு. வங்காளத்திலே 24 பர்க்காணத்திலே 'வெற்றிலையூர்' (பருய்பூர்) என்று ஓர் ஊருக்கே பெயரிருக்கிறது.

வெற்றிலை பயிராகும் மண் கரிசல் மண்ணா யிருக்கவேண்டும். செம்மண்ணும் சேரவேண்டும். கொடிக்கால் உள்ள பிரதேசத்தில் சீதோஷ்ணம் ஒரே அளவி லிருக்க வேண்டும். மேட்டு நிலம் கூடவே கூடாது. இரண்டு வருஷம் பயிரான ஒரு வெற்றிலைக் கொடியின் கணுக்களை வெட்டி வெட்டி வரிசையாக நட்டு வைத்தால், பிறகு அவை இளம் பயிராக வளரும். அப்படி ஆரம்பித்த ஒரு கொடிக்கால் உயர்ந்தபட்சம் 5 வருஷத்துக்குத்தான் பலன் தந்துகொண்டிருக்கும். கொடிகளில் எப்போதும் ஈரங்காத்துக்கொண்டிருப்பதற்காக வாழையை அருகே பயிரிடுவது, கொடிக்கால்காரர்களின் தந்திரம்.

*  *

**கடவுள் காட்டும் வழி**: இந்த உருக்கமான வாசகம் '**ஜோதி**'யின் தலையங்கத்தில் காணப்படுகிறது:

போலந்து நாட்டின் ஸ்கர்கா என்ற கவிஞன், ஓரிடத்தில் பின்வருமாறு பாடுகிறான்:

"பயமுறுத்தும் எஃகு ஆயுதம் என் கண்கள் முன்னே மின்னுகிறது; நான் செல்கிற பாதையிலே, துர்ப்பாக்கிய தேவதை என்னை வரவேற்கக் காத்துக்கொண்டிருக்கிறாள். ஆயினும் ஆண்டவன் அருள்கிறார்: 'செல்க; ஓய்வின்றி முன்னேறிச் செல்க!' 'எங்கே செல்வது? கடவுளே!' என்று நாங்கள் கேட்கிறோம். அவர் மீண்டும் 'செல்லுங்கள்; மரணமடையச் செல்லுங்கள். மரணமடைய நீங்கள் கடமைப்பட்டிருக்கிறீர்கள். செல்லுங்கள்; துன்பமநுபவிக்கச் செல்லுங்கள். துன்பமநுபவிக்க நீங்கள் கடமைப்பட்டிருக்கிறீர்கள்' என்று அருள்கிறார்."

இந்தச் செய்யுள்தான் நமது வாழ்க்கைக்கு வழிகாட்டி. இதனை வழிகாட்டியாகக் கொண்டதற்குக் காரணமென்னவென்றால், பாரதமாதாவின் அழியாத யௌவனத்திலே நமக்குப் பரிபூர்ணமான நம்பிக்கையிருப்பதுதான்.

---

**டாக்டர்**: அப்பா, இப்போது உன் வியாதி என்னவென்றே என்னால் கண்டுபிடிக்க முடியவில்லை. காரணம் குடி மயக்கமாயிருக்குமோ என்று நினைக்கிறேன்.

**வந்தவன்**: சரிதான். உங்கள் மயக்கம் தெளிந்த பிறகு வருகிறேன்.

---

## கதம்பம்

அமெரிக்கர்கள் ஒருநாள் ஒரு பத்திரிகையைத் திறந்தார்கள். 'கம கம' வென்று ஒரு வாசனை மூக்கைத் துளைத்தது. அது ஒரு முழுப் பக்க விளம்பரத்திலிருந்து வீசியது. டென்னெஸீயைச் சேர்ந்த நாஷ்வில்லி நகரத்திலுள்ள விளம்பர ஏஜெண்டுகள் செய்ததொரு யுக்தி இது. அச்சு மை இல்லையா, அதில் ஒரு பரிமளத்தைக் கலந்து, அந்தப் பத்திரிகையின் ஒரு பக்கத்தை அவர்கள் அச்சிடச் செய்துவிட்டார்கள்! வாசனையின் காரணம் அதுதான்.

* *

"ஒரு மனிதன் தன்னை ஸீஸர் என்று நினைத்துக் கொள்ளுவதாக வைத்துக்கொள்வோம். அதை எவரும் ஒப்புக்கொள்ளாவிட்டால், அவன் சிறைச்சாலையை அடைகிறான்; மகாஜனங்கள் ஒப்புக்கொண்டு விட்டால், சர்வாதிகாரியாகி விடுகிறான்"—ஓர் ஆங்கிலப் பத்திரிகை.

* *

ஜனங்களுக்கு ஏதாவது குறை இருந்தால், உடனே சர்க்காருக்கு இலவசத் தந்தி மூலம் தெரிவிக்கலாம் என்று மெக்ஸிகோவில் ஓர் ஏற்பாடு வந்திருக்கிறதாம். ஆனால், இருபது வார்த்தைகள் வரையில்தான் இந்த இலவசத் தந்தி வசதி! தந்தியடித்துப் பார்ப்பதற்குரிய முதல் குறையாக இதையே கொள்ளலாமே?

* *

"சிரமமான காரியம் என்பது உடனே செய்து விடக்கூடியதாயிருப்பது; அசாத்தியமான காரியம் என்பது கொஞ்ச காலத்தில் செய்து விடக்கூடியது"—ஜார்ஜ் ஸாந்தாயனா.

* *

ஓர் இத்தாலிய ஸோல்ஜர் தன் மனைவிக்கு இவ்வாறு கடிதம் எழுதினாளாம்: "இரண்டு தினங்களுக்கு முன் பிரிட்டிஷார் எங்களை 34-மைல் பின்னே துரத்தினார்கள். நேற்று 32-மைல். இன்று 34-மைல். அதிருஷ்டமிருந்தால், நாளைக்கு வீடு வந்து சேர்ந்துவிடுவேன்."

* *

"இல்லறத்தில் வெற்றி பெறுவதற்கு வழி, நல்ல தம்பதியைப் பெற்றிருப்பதல்ல; தான் நல்ல தம்பதியாய் இருப்பதுதான்"—பார்வர்டு.



## கடற் காற்று

உலக மெல்லாம் நிதம் புகழும்
உகப் புடைய காற்றே
உவந் தெழுந்தே எனை நோக்கி
ஓடி வரும் காற்றே

நிலத்திலுறு பிணியை யெலாம்
நீக்கிடுவாய் காற்றே
நின்னைப் போலிவ் வுலகில்
நேசனுண்டோ காற்றே

உடற் கினிய புத்துயிரை
ஊட்டிடுவாய் காற்றே
உள்ள மெலாங் களிப்பெழவே
உதவிடுவாய் காற்றே

கடலலையைத் திரட்டி வந்து
கரைசேர்க்கும் காற்றே
கருணை யுடனிவ் வுலகைக்
காத்திடுவாய் காற்றே

எல்லை யில்லாக் கடல் தாண்டி
யிங்கு வரும் காற்றே
இன்ப வாழ்வை எத்தினமும்
எனக் களிப்பாய் காற்றே

அல்லலெலாம் நீக்கி யெனை
ஆளாக்கும் காற்றே
அரிய புகழ் உனைப் போலே
அடைந்தவர் யார் காற்றே.

—'உமா'

பாலர் கதை :

# 'அசுக்கு'த் தும்மல்

('நீலா')

'அசுக்கு' என்று தும்மினாள் சுந்தரி. பாப்பாவின் முகத்துக்கு ஒற்றுவதற்காக, பவுடர்ப் பெட்டியை அவள் திறந்தாள். அதன் நெடி மூக்கிலே ஏறிற்று. அவள் தும்மி விட்டாள். அந்தத் தும்மல் பெரிய ரகளை செய்து விட்டது.

ஜன்னலிலே உட்கார்ந்திருந்தது ஒரு பூனை. சுந்தரியின் தும்மல், பூனையைப் பிடித்தது. 'அசுக்கு' என்று பூனையும் தும்மிற்று. அதனால், தோட்டத்திலே இருந்த ரோஜா அதிர்ந்தது.

"ஐயோ! என் இதழிலேயிருந்த பனிமுத்தைக் கலைத்து விட்டாயே! அசுக்கு!" என்றது ரோஜா.

ரோஜாவின் பனி முத்து உதிர்ந்தது. பக்கத்திலே தூங்கிய நாயின்மேல் அது விழுந்தது. நாய் விழித்தது.

"என்ன மழை! ஜில்லென்று குளிர் நடுக்குகிறதே! அசுக்கு!" என்று பிரமாதமாய்த் தும்மிற்று நாய்.

மல்லிகைப் பூவிலே தேன் குடித்துக்கொண்டிருந்தது ஒரு தேனீ. அதன்மேல் பட்டது நாயின் தும்மல் காற்று. அது பல குட்டிக்கரணங்கள் போட்டு உருண்டது. கடைசியிலே, தேனீ ஒரு மரக்கிளையில் போய் ஒண்டிக்கொண்டது.

"அடேயப்பா! என்ன புயல் காற்று! அசுக்கு!" என்றது தேனீ.

தேனீயின் ஓசை, ஒரு குருவியைக் கிளப்பியது. "க்வீ! க்வீ! இதென்ன இரைச்சல்! அசுக்கு!" என்று அதுவும் தும்மிற்று.

அதனால், சிலந்தியின் வலை அதிர்ந்தது. சிலந்தி வெளியே எட்டிப் பார்த்தது. ஒரு சுண்டெலி ஓடுவதைக் கண்டது. "நீயா என் வலையை மோதினாய்? அசுக்கு!" என்று தும்மிக் கொண்டே கேட்டது சிலந்தி.



"வழியோடு போன என் மேல் உன் வலையல்லவா வந்து பட்டது. அசுக்கு!" என்றது சுண்டெலி.

சுண்டெலியின் தும்மல், ஆலமரத்து ஆந்தையை எழுப்பியது.

"யார் அது? தும்மல் போட்டு இப்படிப் பகலிலே என் தூக்கத்தைக் கலைத்தது யார்?" என்று உறுமியது ஆந்தை.

"சிலந்தியைக் கேள்" என்றது சுண்டெலி.

"குருவியைக் கேள்" என்றது சிலந்தி.

"தேனீயைக் கேள்" என்றது குருவி.

"நாயைக் கேள்" என்றது தேனீ.

"ரோஜாவைக் கேள்" என்றது நாய்.

"பூனையைக் கேள்" என்றது ரோஜா.

"சுந்தரியைக் கேள்" என்றது பூனை.

"சுந்தரீ! சுந்தரீ! சுண்டெலி ஏன் என்னை எழுப்பிற்று?" என்று கேட்டது ஆந்தை.

சுந்தரி சொல்லத் தொடங்கினாள்:

*"சிலந்தியாலே எலி தும்மிற்று*
*குருவியாலே சிலந்தி தும்மிற்று;*
*தேனீயாலே குருவி தும்மிற்று;*
*நாயாலே தேனீ தும்மிற்று;*
*ரோஜாவாலே நாய் தும்மிற்று;*
*பூனையாலே ரோஜா கலைந்தது;*
*என்னாலே பூனை தும்மிற்று.*
*நானோ இந்த வாசனைப் பவுடரால் தும்மினேன்."*

இப்படிச் சொல்லி, பாப்பாவின் பவுடர் டப்பாவைத் தட்டிக் காட்டினாள் சுந்தரி.

ஆந்தை அதை நம்பவில்லை. "என்ன புளுகுகிறாய்? நிஜத்தைச் சொல்லுகிறாயா, இல்லையா?" என்று கேட்டது ஆந்தை.

"அப்படியா? இதோ பார்!" என்று சொல்லி, அந்த டப்பாவின் மூடியை மறுபடியும் 'பிலுக்' என்று பிடித்து இழுத்துத் திறந்தாள் சுந்தரி.

ஆந்தையின் மூஞ்சி, கண், காது, மூக்கிலெல்லாம் அந்தப் பவுடர் போய்ச் சூழ்ந்து கொண்டது. ஆந்தை கண்ணை மூடிக்கொண்டு, "அசுக்கு! அசுக்கு! அசுக்கு!" என்று ஓயாமல் தும்மியது. அப்புறம் யாரையும் கேள்வி கேட்கவேயில்லை.

## சக்தி மலர்கள்

1. இனி நாம் செய்யவேண்டுவது யாது? [லியோ டால்ஸ்டாய்] ரா. விசுவநாதன் மொழிபெயர்ப்பு — அணா 12
2. உலகம் சுற்றும் தமிழன் [ஏ. கே. செட்டியார்] — அணா 12
3. நிர்மலகுமாரி [காழி. சிவ. கண்ணுசாமி] — அணா 12
4. அசலா [க்ருஹதாஸ்]

[சரத் சந்தர சட்டர்ஜி]

5. சிறை அனுபவங்கள் — ஆர். ஷண்முகசுந்தரம், மொழிபெயர்ப்பு — ரூ. 1½
6. கூண்டுக் கிளி — கி. சடகோபன் — அணா 12

[ஹரீந்திரநாத் சட்டோபாத்யாய] தி. ஜ. ர. மொழிபெயர்ப்பு — ரூ. 1

8, 9. டால்ஸ்டாய் சிறு கதைகள் 1, 2 பாகங்கள் [லியோ டால்ஸ்டாய்]
மொழிபெயர்ப்பாளர்: கு. ப. ரா., ரா. விசுவநாதன். ஒவ்வொரு பாகமும் — ரூ. 1



சக்தி மலர் 7

ஸ்ரீ ஏ. கே. செட்டியார்

எழுதிய

# அமெரிக்கா

[பிரயாண நூல்]

**விலை ரூபா 1/-**

வெளிவந்துவிட்டது

காங்கிரஸ் ஹவுஸ்
வாஷிங்டன் டி. சி.

★

## சக்தி காரியாலயம், ஜி. டி., சென்னை

சுவாமி சுத்தானந்த பாரதியார்

இயற்றிய

## ஏழை படும் பாடு

(புலவர் மணி **விக்தர் ஷ்யூகோவின்** "லே மிஸரபிள்")

விக்தர் ஷ்யூகோ எழுதிய நாவல்களில் மிகப் புகழ் பெற்றது "லே மிஸரபிள்" (**Les Miserables**). இம் மொழியின் பொருள் "கஷ்டப் படும் ஏழைகள்" அல்லது "ஏழை படும் பாடு." உலகில் சமூகக் கொடுமைகளாலும், அரசாங் கத்தின் சுயேச்சாதிகாரச் சட்டங்களாலும் பரம ஏழைகள் எப்படி வருந்துகிறார்கள் என் பதை இந்த நாவலிற் படம் பிடித்தாற்போலக் காணலாம். இப் பதிப்பில் விக்தர் ஷ்யூகோ வர லாற்றையும் சேர்த்திருக்கிறோம். 596-பக்கங் கள் கொண்டது.

**விலை ரூபா 1-8-0**

**சக்தி காரியாலயம்**

ஜி. டி. சென்னை.

**கவியரசர்**

## ரவீந்திரநாத் தாகூர்

**(வாழ்க்கை வரலாறு படங்களுடன்)**



(இக் கவிஞ ரின் சரிதம் எழுதும் பொ ருட்டு, சாந்தி நிகேதனம் சென்று கவி யரசர் தாகூ ரை தரிசித்து விஸ்வ பாரதி யையும், அதன் நடை முறைகளை யும் நேரில் பார்த்து வந்து இந்நூல் எழு தப்பட்டது)

**விலை : அணு 12**

**சக்தி காரியாலயம்,**

ஜி. டி. சென்னை.

**சக்தி மலர் 8, 9**

## டால்ஸ்டாய் சிறு கதைகள்

1, 2 பாகங்கள்

[ஆசிரியர் : **லியோ டால்ஸ்டாய்**]

மொழிபெயர்த்தவர்கள் :

**கு. ப. ராஜகோபாலன், ரா. விசுவநாதன்**

மகாத்மா காந்தியாலேயே தமது குரு வெனப் புகழப் பெற்ற ருஷிய ஞானி லியோ டால்ஸ்டாயின் கதைகள் அனைத் தும் பல்வேறு உயரிய நீதிகளைப் புகட்டு வன ; கடவுள் தன்மையை மறவாது இருக் கத் தூண்டுகோல்கள் ; தமிழராகிய அனை வரும் படித்துச் சுவைக்க வேண்டிய நீதிக் களஞ்சியம்.

**ஒவ்வொரு பாகமும் விலை ரூபா ஒன்று**

**சக்தி காரியாலயம்**

ஜி. டி. சென்னை

## 'சக்தி' புதிய ஏஜெண்டுகள்

ரஹீம் நியூஸ் மார்ட்,
நுவரேலியா.
நேஷனல் நியூஸ் மார்ட்,
தூத்துக்குடி.
கே. ஆர். கலியாணராமய்யர்,
ராணிப்பேட்டை.
எஸ். ராஜமாணிக்கம்,
கொடுமுடி.
பி. செல்லப்ப பிள்ளை,
அலப்பி.
சி. ஆர். திருநாராயணன்,
கோயம்புத்தூர்.
எஸ். பத்மநாபன்,
பம்பாய்.
எஸ். அப்துல் அசீஸ்,
திருப்பதி.
ஆர். ஜி. சாப்ரே,
நாகபுரி.
எல். பிரசன்னன்,
பெஜவாடா.
என். ஹரிஸ்வாமி ஐயர்,
மாதுங்கா, பம்பாய்.




INDIAN OVERSEAS BANK LTD.

ஹெட் ஆபீஸ்:

மதராஸ்

பிராஞ்சுகள்:

| | |
|---|---|
| கன்னனூர் | சிங்கப்பூர் |
| கோயம்புத்தூர் | புதுக்கோட்டை |
| தேவகோட்டை | ரங்கூன் |
| காரைக்குடி | சிவகங்கா |
| குலாலம்பூர் | மேட்டூர் டாம் |
| பினுங்கு | தலைச்சேரி (சப் ஆபீஸ்) |

மேல்நாட்டு ஏஜண்டுகள்

தி சேஸ் நேஷனல் பாங்க் ஆப்
தி ஸிடி ஆப் நியூயார்க்
லண்டன் & நியூயார்க்

உங்கள் விலையுயர்ந்த சாமான்களை
Safe Deposit Vault-இல்
பத்திரப் படுத்துங்கள்

இந்தியன் ஓவர்ஸீஸ் பாங்கு

லிமிடெட்

எஸ்ப்ளனேட் :: மதராஸ்

Fashion Insists on-
Smartness!

FOR MODERN SAREES

SHOP AT

RANGOON HALL

RANGOON MERCHANT




அழகு செய்வது தற்கால நாகரீக ஆடைகளே!

உயர்தர ஜவுளிக்கு
உத்திரவாதமுள்ள இடம்

ரெங்கோன் - - - ஹால்

கு. அ. அங்கமுத்து முதலியார்

பட்டு ஜவுளி வியாபாரம்

அம்மன் சன்னதி :: காரைக்குடி

## மாதம் ரூ. 675 சம்பாதிக்க

**அதிர்ஷ்டம் உங்கள் வாயிலை மோதுகிறது**

நீங்கள் மனமார மாதம் 675 ரூபாய் சம்பாதிக்க ஆசைப்பட்டால் நிஜமான அமெரிக்கன் புதிய தங்கத்தின் ஏஜென்ஸியைப் பெறுங்கள். இந்த தங்கம் உரை கல்லில் மெய்யான தங்கம் போலவே தோற்றுகிறது. அதனைத் தகடாக்கவோ, கம்பியிழுக்கவோ செய்யலாம். நிறம் ஒரு போதும் மாறுவதில்லை. இத் தங்கத்தில் செய்த எல்லாவித நகைகளும் எங்களிடம் உண்டு. இப்போதே ஏஜென்ஸிக்கு எழுதுங்கள். நகைகளின் ஜாபிதா முழுதும் அடங்கியுள்ள காட்லாக்கும், 4 தோலா அமெரிக்கன் புதிய தங்கமும், ஒரு ஜதை வளையலும், ஒரு ஜதை கடுக்கனும், பம்பாய் மாதிரியில் ஒரு மோதிரமும் மாதிரிகளாக அனுப்பப்படும். சுறுசுறுப்பும் செல்வாக்குமுள்ள ஏஜெண்டுகட்கு பலவித வசதிகள் கிடைக்கும். இப்போதே ஏஜென்ஸி நிபந்தனைக்கு எழுதுங்கள்.

**AMERICAN NEW GOLD COMPANY,**

POST BOX 61 (D. 1413) LAHORE, INDIA

## உயர்ந்த வைரங்கள்

புதுமாதிரி வைர நகைகளுக்கு
நம்பிக்கையான இடம்

**உ. அ. அரு. அருணாசலம்
செட்டியார்**

வைர வியாபாரம்

கல்லுக்கட்டி, காரைக்குடி

ஆமண்டு ஜேம்ஸ் போமேட்




தலைக்குச் சிறந்தது



அழகிய, நவீன முறையிலுள்ள தங்க வெள்ளி
சாமான்கள் உங்களுக்கு வேண்டுமோ?

வாருங்கள்! வந்து பாருங்கள்!

## ராதா ஜ்வல்லரி ஷோ ரூம்





குறிப்பிடத் தக்கவை, உத்திரவாத முள்ளவை,
உயர்ந்த ரகத்தைச் சேர்ந்தவை, நீண்டகாலம் உழைப்பவை

ஆண்களுக்கு:—தங்க மோதிரங்கள், கல்யாண மோதிரங்கள், இனுமல் மோதிரங்கள், நவீன கழுத்துச் சங்கிலிகள் பித்தான் கற்கள் முதலியன

பெண்களுக்கு:—நவீன நெக்லஸ்கள், புதுமாதிரி தங்கச் சங்கிலிகள், ஒட்டியாணங்கள், வங்கி, வகைவகையான எனுமல் காப்புகள் முதலியன.

வெள்ளிச் சாமான்கள்:—டம்ளர்கள், டீ செட்டுகள், விளையாட்டுச் சாமான்கள், ஜாடிகள், அழகிய பட்டைக் கொலுசுகள், எனுமல் கொடுத்த பலவகை சாமான்கள்.

இன்னும் எது வேண்டும்? தயாராயிருக்கின்றன. ஆர்டர்களுக்கும் செய்து தரப்படும்.

**G. ராதாகிருஷ்ண செட்டி**
ஜ்வல்லர்,
பெரிய கடைத்தெரு, திருச்சி

டெலி { போன் 37.
{ கிராம் 'ராதா'

ஆர்டர் அனுப்பும்பொழுது "சக்தி" யில் கண்டது என்று குறிப்பிடவும்.

134189
184

# *New* Model 75 *DeLuxe*

# Remington

## Room Air Conditioner



பழைய காலம் முதல் இந்நாள் வரை கடுமையான உஷ்ணமும், மித சீதோஷ்ண மந்தாரமும், உதறச் செய்யும் உறை பனியும் மனிதனின் ஆரோக்யத்தையும், சுறுசுறுப்பையும் சந்தோஷத்தையும் கெடுத்து வருகிறது. இப்பொழுதோ வென்றால், 'ஏர் கன்டிஷனிங்' எனும் புதுமை, இயற்கையின் இடைஞ்சல்களை அறவே ஒழித்துவிட்டது.

மனித வாழ்க்கைக்கு மிக ஆரோக்யமான சீதோஷ்ண ஸ்திதி ஒரு வருஷத்தில் சில நாட்களே இயற்கையாய் அமைந்திருக்கிறது. ஆனால் மாசற்ற "ஏர் கன்டிஷ' னிங்கோ நமக்கு இன்றியமையாத சம சீதோஷ்ண நிலையை, தானாகவே வருஷத்தில் ஒவ்வொரு நாளிலும் ஒவ்வொரு மணியிலும் ஏற்படுத்துகிறது.

'ஏர் கன்டிஷனிங்' எவ்விதமான சௌகர்யத்தையும் கொடுக்கிறது. ஒருவனுக்கு, பொறுக்க முடியாத கோடை வெப்பத்திற்கு மாற்றாக 'ஜில்' லென்று தனது வேலையில் ஈடுபடக்கூடிய சுகத்தை கொடுக்கிறது. மற்றொருவருக்கு மிக குளிரினால் ஏற்படக்கூடிய, ஜலதோஷம், ஆஸ்த்மா, காய்ச்சல் முதலிய வைகளைத் தடுக்கிறது. சகிக்க முடியாத உஷ்ணப் பிரதேசத்தில் இருப்பவர்களுக்கு குளிர்ச்சியான, சுகமான சம சீதோஷ்ண ஸ்திதியை அளிக்கிறது.

அநேக விதமான சௌகர்யங்களுக்காக அநேகர் "ஏர் கன்டிஷனிங்"கை அடிக்கடி ஆதரித்தாலும், நாம் எதிர்பாராத வேறு பல சௌகர்யங்களையும் "ஏர் கன்டிஷனிங்' அளிக்கும் என்று சொல்வது மிகையாகாது.

மேலே இருப்பது உங்களுக்கு வருஷம் 365 நாட்களும் ஆரோக்யமான சம சீதோஷ்ன நிலையை கொண்டுவரும் புதிய "ரெமிங்க்டன் மாடல் 75 டி லக்ஸ்" எல்லோருக்கும் எங்கிருப்பவர்களுக்கும் திருப்தி அளிப்பதற்காகவே மேலேயுள்ள 'ஏர் கன்டிஷனர்' ஏற்படுத்தப்பட்டது.

"புதிய மாடல் 75 டி லக்ஸ்" ஏர் கன்டிஷனர் எங்கள் லக்ஷியத்தின்படி எல்லாவித சௌகர்யங்களுக்கும் ஏற்பட்டது என்று நம்புகிறோம்.

Remington
AIR CONDITIONER
WILMINGTON
1872

ரெமிங்டன் ஏர் கன்டிஷனிங் கம்பெனி
*ஹென்ரி டி. ஜோஸ்லின்*
ப்ரெஸிடென்ட்

*Sub Dealers for Ramnad, Tinnevelly & Madura:*
**UNITED TRADING CO.**
22, Second Line Beach
G. T. MADRAS

*Sole Distributors:*
**W. A. BEARDSELL & CO.**
9, Second Line Beach
G. T. MADRAS




Edited, Printed and Published by V Govindan at Shakti Press Limited
(Shanti Press), 46, Muthumari Chetti Street, G.T., Madras Joint Editor: T J. Ranganathan.